செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# சிந்தாமணி

ரூ 5/50

சிந்தாமணி

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTHAMANI

இல 1059 15—4—1990 பிரமோதூத சித்திரை 2 வ 1990 ஏப்ரல் 15 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ரமழான் பிறை 18 ★ ★ ★



இலையான சித்திரைப் பெண்

★ பரந்தன் ரசாயனத் தொழிற்சாலை மீண்டும் இயங்கும்

★ வரி அறவிடுதல் நிறுத்தம் ★ வீதித் தடைகள் நீக்கம்

# அரசாங்கம்—புலிகள் பரஸ்பரம் இணக்கம்

## அமைச்சர் ரஞ்சன் தகவல்

— கே குணராஜா —

கொழும்பு, ஏப்ரல் 14

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க் கிழமை இரவு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசவைச் சந்தித்துப் பேசியதை அடுத்து அரசுக்கும் புலிகளுக்கு மிடையே பல விஷயங்களில் பரஸ்பரம் இணக்கம் ஏற்பட்டிருக்கிறது.

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலையை மீண்டும் இயங்க வைப்பதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

வடக்கு, கிழக்கில் வரிகள் அறவிடுவதை நிறுத்தவும் வீதித்தடைகளை நீக்கவும் புலிகள் இணங்கியுள்ளனர்.

மேற்கண்ட தகவலை பெருந்தோட்டத் தொழில் அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான திரு ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்கு அமைச்சர் தாம கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் இப்போது வடக்கு கிழக்கில் அமைதி நிலவுகிறது என்றும் அங்கே [illegible]சினைகள் இல்லை என்றும் [illegible]சான்னார்.

பருத்தித்துறையில் பொலீஸார் பொது மக்கள் சம்பந்தப்பட்ட சம்பவத்தை ஒரு நிருபர் சுட்டிக்காட்டி கேள்வி எழுப்பினார்.

உடனே அமைச்சர் அந்தப் பிரச்சினை சுமுகமாகத் தீர்க்கப்

(2ஆம் பக்கம் பார்க்க)

## நடமாடும் வங்கி மூலம் கடன் வசதி

கொழும்பு, ஏப், 14

குறைந்த வட்டியில் அன்றாட சிறு வியாபாரிகளுக்கு சிறிய அளவிலான நடமாடும் வங்கிச் சேவையின் மூலம் கடன் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்படும் என்று உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு வீரசிங்க மல்லிமாராச்சி தெரிவித்தார்.

அன்றாட வியாபாரிகளான மீன் வியாபாரிகள், இளநீர் வியாபாரிகள், மரக்கறி வியாபாரிகள், பாண், சிறு உணவுப் பொருட்கள், பால், விறகு போன்ற வியாபாரிகள் இதனால் நன்மை அடையவுள்ளனர்.

(2ஆம் பக்கம் பார்க்க)

## அரச அதிகாரிகளுக்கு கார் வாங்குவதற்கு ரூ. 60,000 கடன்

கொழும்பு, ஏப் 14

அரசாங்க அதிகாரிகள் கார்களை விலை

## புத்தாண்டில் இன ஐக்கியம்

நோன்பு

## சிலையான சித்திரைப் பெண்

கலையிலே விளைந்த கட்டெழில் பாவைதன்
கழுத்திலும காதிலும மணி அணிகள்
தலையிலே ஒருதுணி கலைகின்ற கூந்தலைத்
தடுத்து நிறுத்திப் பிணைத்து வைக்க
விலையிலா முழுமதி போல்முகம முகத்திலே
காந்தம எனக்கவர் கண்களு டன்
சிலையென நின்றனள் சித்திரைப் பெண்இவள்
சிந்தை குளிர்ந்து மகிழ்ந்திடவே

தோட்டத் தொழில் அமைச்ச ... கள் இவ்வா ... 7.
ரும, பாதுகாப்பு ராஜாங்க ளார்-

## புத்தாண்டில் இன ஐக்கியம் ஜனாதிபதி வலியுறுத்து

கொழும்பு, ஏப், 14

சிங்கள இந்துப் புத்தாண்டு இலங்கையர் அனைவராலும சிறப்பாகக் கொண்டாடப் படும விழாவாகும- நம நாட்டு மக்கள் தொகையின் 90 வீதமானோரைக் கொண்ட சிங்கள இனத்தவர்களையும தமிழ் இனத்தவர்களையும ஒன்று சேர்க்கும விழாவாக வும இது அமைகின்றது-

— இவ்வாறு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்- அவர் மேலும கூறியுள்ளதா வது—

இக் கொண்டாட்டக் காலத்தில் எங்கள் நாட்டிலுள்ள ஏனைய இன மக்களும உற்சாகத்துடன் அதில் கலந்து கொள்வார்கள்- ஆதலால் சிங்கள இந்துப் புத்

(2ஆம பக்கம பார்க்க)

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 4.28 |
| சுபஹ் | 4.43 |
| சூரியஉதயம | 6.03 |
| ழுஹர் | 12.20 |
| அஸர் | 3.18 |
| மஃரிபு | 6.19 |
| இஷா | 7.39 |

## ரூ. 60,000 கடன்

கொழும்பு, ஏப் 14

அரசாங்க அதிகாரிகள் கார்களை விலைக்கு வாங்குவதற்காக வழங்கப்படும கடன் தொகை 20 ஆயிரம ரூபாவால் அதிகரிக்க அரசு தீர்மானித்துள்ளது- இதன்படி இந்தக் கடன் தொகை தற்போது 60 ஆயிரம ரூபாவாகும-

கடந்த வருடம வழங்கப்பட்ட தொகை 40 ஆயிரம ரூபாவாகும-

ஓடும மைல் கணக்கு அடிப்படையில் கார்களுக்கான கட்டணத்தை பெற்றுக் கொள்ளவும நாளாந்தம உத்தியோகபூர்வ வாகனங்களில் பயணங்களில் ஈடுபடவும உரிமையுள்ள நிரந்தர அரசாங்க அதிகாரிகள் இந்தக் கடன் தொகையைப் பெற்றுக் கொள்ள முடியும-

[ந—ற]

## வீட்டுப் பணிப் பெண்களுக்கு சட்ட ரீதியான பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 12

வீட்டுப் பணிப் பெண்களின் தொழில் சட்ட ரீதியாக்கப் பட்டு அவர்களுக்கு உயர்ந்த சமபளம பெற்றுக் கொடுக் கப்படும.

— இவ்வாறு தொழில் மற்றும தொழிற் பயிற்சி அமைச்சர் திரு ஜீ எம பிரேமசந்திர தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவித்ததாவது-

பணியாளர்களாக கடமையாற்றும ஆண்களுக்கும பெண்களுக்கும சமமான சமபளம பெற்றுக் கொடுக்கப்படும.

ஊழியர் சேமலாப நிதியம, ஊழியர் நமபிக்கை நிதியம போன்ற வசதிகளையும பெற்றுக் கொடுக்க தகுந்த சட்ட நடவடிக்கைகளை எடுத்து வரு

(2ஆம பக்கம பார்க்க).

### தோட்டத் தொழிலாளர் மரணம்:

## இராணுவ வீரர் 6 பேர் கைது

கொழும்பு, ஏப். 14

பதுளை கிளென் அல்பின் தோட்டத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடந்த சமபவம தொடர்பாக ஒரு கனிஷ்ட அதிகாரி உட்பட ஆறு இராணுவ வீரர்கள் கைது

(2ஆம பக்கம பார்க்க).

## சிறைஅதிகாரியின் காதைக் கடித்த "எயிட்ஸ்" கைதி

கெமடன் அமெரிக்கா, ஏப் 14

எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டிருந்த கைதி ஒருவர், சிறை அதிகாரியின் காதைக் கடித்தார், இதற்காக கொலை முயற்சியில் ஈடுபட முயன்றதாக அவர் மீது குற்றம சுமத்தப்பட்டது.

இவ்வாறு அவர் காதைக் கடித்ததனால் ஆட்கொல்லி எயிட்ஸ் நோய் அதிகாரிக்கு தொற்றாது என கைதியின் சார்பில் வழக்கறிஞர் வாதாடினார். எனினும நீண்ட நேரமாக யோசித்தபின் அவர் குற்றவாளி என நீதிவான் தீர்ப்பளித்தார்.

(ந)

## அரசுக்கு அவப் பெயரை தேடித் தரும் அதிகாரிகள்

### விழிப்பாக இருக்க ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஏப், 14

அமைச்சர்கள், எம பிக்கள் ஆகியோருடன் நெருங்கிப் பழகும அதிகாரிகளையும ஊழியர்களையும பற்றி விழிப்பாக இருக்குமாறு ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாச அமைச்சர்களையும எம பிக்களையும பணித்துள்ளார்.

இவ்வாறு நெருங்கிப் பழகும பல அதிகாரிகளும ஊழியர்களும அரசாங்கத்திற்கு அவப் பெயர் ஏற்படும வகையில் நடந்து கொள்வதாக தகவல் கிடைத்ததை அடுத்தே ஜனாதிபதி இப்படி பணிப்புரை விடுத்துள்ளார்.

தமது குறைகளை தெரிவித்து தீர்வு காண்பதற்காக மக்கள் அமைச்சர்களையும எம பிக்களையும நாடி வருகிறார்கள்.

அப்போது மேற்படி அதிகாரிகளும ஊழியர்களும மக்கள் அமைச்சர்களையும எம பிக்களையும சந்திக்க இடமளிக்காமல் தடுத்து விடுகிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில் அவர்களின் நடத்தை சமபந்தப்பட்ட அமைச்சர்களுக்கும, எம பிக்களுக்கும அவப் பெயர் தேடித் தரக் கூடியதாக அமைகின்றன.

இப்படி ஜனாதிபதிக்கு தகவல் கிடைத்துள்ளது.

எனவே தமக்கு நெருங்கிய பதவிகளுக்கு ஆட்களை சேர்க்கும போது நேர்மையான மற்றும நமபிக்கையானவர்களை சேர்த்துக் கொள்ள வேண்டும என ஜனாதிபதி பணித்துள்ளார்.

விசேடமாக அந்தரங்கச் செயலாளர்கள் வெகுசனத்

(2ஆம பக்கம பார்க்க).

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

போதிய பாடங்கள் இல்லாவிட்டாலும்

# விசேட பாடங்களில் சித்தி அடைந்தால் ஆசிரியர் நியமனம்

## அமைச்சர் லலித் தீர்மானம்

கொழுமபு ஏப் 14

ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் போதிய சித்தியை பெற்றிராத போதி லும விசேட பாடஙகளில் அதிதிறமை சித்தியடைந்துள ளோருக்கு ஆசிரியர் நிய மனஙகுளை வழஙக கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி தீர்மா னித்துள்ளார்.

அதன்படி, ஆஙகிலம, சஙகீ தம நடனம, கைத்தொழில் பாடஙகள் ஆகியவற்றில் ஜீ சி ஈ சாதாரண தரப் பரீட்சை யில் அதிதிறமை சித்தியடைந்துள ளோருக்கு அடுத்த வருடம முதல் ஆசிரியர் நியமனஙகுளை வழஙக நடவடிக்கை எடுப்ப தாக திரு அத்துலத் முதலி தெரிவித்து இருக்கிறார்.

ஜீ சி ஈ சாதாரண தர பரீட்சையில் ஆஙகில மொழிப் பாடத்தில் அதிதிறமை சித்தி யடைந்த் பெருமபாலானோர் கணிதப் பாடத்தில் சித்தியடையா திருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள் ளது.

ஆஙகிலத்தில் எழுதவும, வாசிக்கவும, பேசவும இவர்க ளால் முடியும என்பதை அமை ச்சர் அதிகாரிகளுக்கு எடுத்துரை த்துள்ளார்.

எனவே அவர்களுக்கு ஆசிரி யர் நியமனஙகளை வழஙகிவிட்டு மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அவர்கள் சேவையில் நிரந்தர மாக்கப்படுவர்.

இதற்குள் அவர்கள் தேவை யான ஏனைய தகைமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும.

இதன் மூலம விசேட பாடங களை கற்பிப்பதற்கான ஆசிரியர் பற்றாக் குறையைத் தவிர்க்க லாம என அமைச்சர் அதிகாரி களுக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

(த-ற)

## புத்தாண்டில்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தாண்டானது இலஙகை நாட் டின் தேசியப் புத்தாண்டாக விளஙகுகின்றதென்பதில் ஐய மில்லை—

கடந்த சில ஆண்டுகளில் நமது நாட்டில் குழப்ப நிலையும கொந்தளிப்பு நிலையும ஏற்பட்டு இருந்தன— பொதுமக்கள் பலர் தேவையற்ற இடர்களுக்கு ஆளாகியிருந்தார்களெனினும மௌனமே சாதித்து வந்தனர்— நாட்டிலுள்ள அனைவரும சொல் லொணாத் துயரத்தை அனுபவித் தார்கள். இதன் காரணமாக அதிவிரைவில் தேசிய மறுமலர்ச் சிக்காகப் பணிபுரிய வேண்டிய கடப்பாடு எஙகளுக்கு ஏற்பட்டு இருக்கின்றது—

அதேபோன்று அராஜகப் பாதையில் சென்று கொண்டிருந்த எஙகள் நாடு இன்று நல்வழிக் குத் திருமபியுள்ளதாதலால் இவ் வருடப் பிறப்பு சிறப்புமிக்க விழாவாக அமைந்துள்ளது—

நாட்டில் அமைதியான நிலை உருவாகியிருப்பதனால் நாடெங கிலும உள்ள மக்கள் அனைவரும இப் புத்தாண்டினைக் கொண்டா டுவதில் பேருக்கம காட்டி வரு கின்றனர்—

இஙகுள இந்துப் புத்தாண்டில் குடுமபத்திலுள்ள அனைவரும ஒன்று சேருவது வழி வழி வந்த முறையாகும— அது புதிய உறவு களை ஏற்படுத்திக் கொள்ளும காலமாகும— அது பழைய குரோ தஙகளையும முரண்பாடுகளை யும மறந்து விடும காலமாகும்— குற்றஙகள் இழைத்தவர்களை மன்னித்து அவர்களை அரவ ணைக்கும காலமாகவும அது விளஙகுகின்றது—

இலஙகை மக்கள் அனைவரும தனியொரு தேசிய இனமாக ஐக் கியப்படுவதற்கு இப்புத்தாண்டை நாஙகள் பயன்படுத்த வேண்டும— கடந்த சில அண்டுகளில் எஙகளை எதிர்நோக்கியிருந்த சோதனைக ளின் வாயிலாகவும சவால்களின் வாயிலாகவும நாம பாடஙக ளைக் கற்றுக் கொள்ளல் வேண் டும—

எஙகள் நாட்டைப் போன்று ஓயாத சண்டைகளும சச்சரவுக ளும நிலவிய நாடுகள் பல புதிய சமுதாயஙகளாக மாறியுள்ளன வென்பது சரித்திரவாயிலாக நாமறிந்த உண்மையாகும—

இதன் வண்ணம ஐக்கிய இலங கையினைக் கட்டியெழுப்புவதற் காக சரித்திரம எஙகளுக்குப் புகட்டும படிப்பினைகளை நாங கள் கற்றுக் கொள்ளல் வேண் டும— சமுதாய முன்னேற்றத்தினை யும பொருளாதாரச் சுபீட்சத்தி னையும நோக்கிச் செல்லும ஒரே ஒரு வழி இதுவேயாகும—

நாஙகள் ஒரு தேசிய இனமாக ஒன்றுபட்டு வாழ்வோமாயின் எஙகள் முன்னேற்றத்தைத் தடுக்க எவராலும முடியாது— சமாதான மும சகஜ நிலையும மீண்டும் ஏற்பட்டுள்ளதாதலால் தேசிய ஒருமைப்பாட்டினையும எஙகு ளுக்கிடையிலான அமைதியினை யும பேணுவதற்கு நாஙகள் அய ராது உழைத்தல் வேண்டும—

நாட்டினைக் கட்டி எழுப்பு வதாகிய மாபெரும சவாலினை சமாளிக்க அவசியமான நட வடிக்கைகள் அனைத்தையும துணிவாகவும விசுவாசத்துடனும எடுப்போமாக—

இலஙகை வாழ் அனைவருக்

## வீட்டுப் பணிப்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கிறோம.

பணியாளர்களையும, பணிப் பெண்களையும பயிற்றுவிப்பதற் காக பயிற்சி நிலையம ஒன்றை நிறுவவும அமைச்சர் தீர்மானித் திருப்பதாக தெரிவிக்கப்படு கிறது—

நாடு முழுவதும குறைந்த சம பளத்தில் கடமையாற்றும பணிப் பெண்களினதும, பணியாளர்களி னதும விவரம சேகரிக்கப்படும.

அதற்கான சட்ட நடவடிக்கை களையும அதிகாரிகளையும ஏற்பாடு செய்துள்ளோம.

பணியாளர்களின் விவரங களை சேகரிப்பதற்காக தொழிற் சஙகஙகளினதும, தொண்டர் இயக்கஙகளினதும உதவி பெறப் படும.

புதிய திட்டம நடைமுறைக்கு வந்த பின் பணியாளர்களின் வேலை நேரம நிர்ணயிக்கப் படும.

நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு புறமபாக வேலை செய்தால் மேலதிக கொடுப்பனவுகள் வழ ஙக வேண்டும.

— இவ்வாறு அமைச்சர் கூறி னார்.

நாடு முழுவதும லட்சத்திற் கும அதிகமான குறைந்த சமப ளம பெறும பணிப் பெண்கள், பணியாளர்களும தஙகள் நலன் கள் கவனிக்கப்படாதது குறித்து அமைச்சுக்கு செய்த முறைப் பாட்டை அடுத்தே மேற்படி தீர் மானத்தை எடுத்ததாக அமைச் சர் தெரிவித்தார். (ம-ழ)

## அரசாங்கம்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

பட்டுவிட்டது என்றார்—

ஈ பி ஆர் எல் எப்

ஈ பி ஆர் எல் எப் இயக்கத் தினருடன் அரசாஙகம பேச்சு வார்த்தை நடத்துமா என்று ஒரு நிருபர் கேட்டார்—

முன் நிபந்தனை எதையும விதிக்காமல் வடக்கு, கிழக்கு விவகாரம குறித்துப் பேச முன் வருமு எவருடனும அரசாஙகம பேசும— சண்டை பிடிப்பதை விட சமாதானமாகப் பேசிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்ப தையே அரசாஙகம விருமபுகிறது— ஈ பி ஆர் எல் எப் இயக்கத்தினர் தமது 19 அமச கோரிக்கையைக் கைவிட்டு விட்டு வந்தால் அர சாஙகம அவர்களுடனும பேசும—

நிபந்தனையின்றியே அர

நிருபர்கள் கேட்ட மற்றும சில கேள்விகளும அமைச்சர் அளித்த பதில்களும வருமாறு

கேள்வி:— அமிர்தலிஙகம, யோகேஸ்வரன் கொலை தொடர்பான பொலீஸ் அறிக்கை தயாரா?

ரஞ்சன்:— அது இப்போது பொலீஸ் மா அதிபரிடம ஒப் படைக்கப்பட்டுள்ளது— அவர் பூரண விசாரணை நடத்த ஆகக்கு அறிக்கை சமர்ப்பிப் பார்—

கேள்வி:— ஜனாதிபதி ஏன் விசா ரணை நடத்தவில்லை?

ரஞ்சன்:— ஜனாதிபதி பொலீஸ் விவகாரத்தில் தலையிட மாட் டார்—

கேள்வி:— முத்தையாவின் கோரி க்கையின் பேரில்தான் குடி யேற்றம தொடர்பாக ஜனா திபதி அணைக்குழு ஒன்று ஏற் படுத்தப்பட்டுள்ளதா?

### புத்தாண்டு போட்டிகள்

கொழுமபு ஏப் 14

கோறளைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவு பிரதேச விளையாட்டுக் கழக சபையினா னால் ஒழுஙகு செய்யப்பட்டி ருக்கும, பிரதேச விளையாட் டுக் கழகஙகளுக்கு இடையி லான புததாண்டுப் போட்டி, இன்று, 15 ஆம திகதி நடை பெறும.

சந்திவெளி பொது மைதான த்தில் போட்டி காலை 9 மணிக்கு ஆரமபமாகும. மாலை 5 மணிவரை தொடர்ந்து போட்டிகள் இடமபெறும.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் ... நிறு வனஙகளின் ஆதரவுடன விளை யாட்டுத்துறை ராஜாஙக அமை ச்சின் அனுசரணையுடன் இந்தப் புத்தாண்டுப் போட்டி நடத்தப் படுகிறது.

கோரளைப்பற்று வாழைச் சேனை உதவி அரச அதிபர் திரு சோ வரதராஜன் விழா வுக்குத் தலைமை வகிப்பார். பிரதம அதிதியாக மட்டக் களப்பு, தலைமை உதவி ஆணை யாளர் திரு ஆர் ந ாகலிஙகம


## சிந்தாமணி சிறு விளம்பரங்கள்

### மணமகன் தேவை

கொழுமபைச் சேர்ந்த பிள்ளைமார் இனம, வயது 34, செவ்வாய்க் குற்றமுள்ள மணமக ளுக்கு மணமகன் தேவை— தார மிழந்தவரும விண்ணப்பிக்க லாம— சீதனம பேசித் தீர்க்கப் படும— விளமபரதாரர் இலக்கம— ஏ—15—01, மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழுமபு—

### கார் டிரைவிங பயிற்சி

கொழுமபில் உள்ளோர் மட் டும டிறைவிங பழக விருமபினால் விபரஙகளுக்கு விலாசத்தை அனுப் பவும—

94/5Vivekananda Hill Colombo 13.

வி இ 030651

### வாகன ட்றைவிங பயிற்சி

பஸ், கார், மோட்டார் சைக் கிள் வாகனப் பயிற்சி— சர்வதேச லைசன்ஸ் ஒழுஙகு செய்து தரலாம— 17, விஜித றோட், தெஹிவளை—

### தேவைகள்

கொழுமபு—12 இல் அமைந் துள்ள வியாபார ஸ்தாபனத்துக்கு சைக்கிளில் விநியோகம செய்யக் கூடிய பையன் தேவை— விளமபர தாரர் இலக்கம— 32—797, மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழுமபு—

வெளிநாட்டில் தயாரித்த வெல் வட் துணி வாஙகப்படும— நீலம, சிவப்பு, வெள்ளை, கறுப்பு நிறங கள் விருமபத்தக்கது— அன்வர் ஜுவல் பொக்ஸ், 222/5, பழைய சோனகத் தெரு, கொழுமபு—12 தொலைபேசி— 23466/09—22471

வி இ 030395

### கமரா உபகரணம தேவை

புதிய அல்லது சிறிது பாவித் துள்ள கமராக்களுக்கும உபகர ணஙகளுக்கும நியாயமான விலை கொடுக்கப்படும— "கொழுமபு கிப்ட் ஹவுஸ்", 42, கெய்சர் வீதி (பொலீஸ் நிலையம எதிரில்) புறக் கோட்டை—

Colombo Gift House

### காணி விற்பனைக்கு

மாத்தளை நகரிலிருந்து அரை மைல் தூரத்திலுள்ள களுதா வளையில் ஒரு ஏக்கர் காணி விற் பனைக்கு உண்டு— ஒரு பேர்ச் சர்ஸ் 5000/— ரூபா— மின்சார, தண்ணீர் வசதியுண்டு— தொடர்பு கொள்க— கே ஏ புஹார்தீன், 150, ரத்தோட்டை ரோட், மாத் தளை—

வி இ 030431

### ஒலிபெருக்கி விற்பனை

அமபிலிபயர்கள், ஹோன், யுனிட், மைக் ஸ்ராண்ட் விற்ப னைக்கு உண்டு— விலை ரூ 950/— க்கு மேல்—

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 030606

### விற்பனைக்கு உரியவை

குழந்தைகளுக்குரிய உள்

லைசன்ஸ் ஒழுங்கு செய்து தரலாம- 17, விஜித ரோட், தெஹிவளை- தொலைபேசி- 716853-

வி இ 030307

## பள்ளிவாசல் பாய்

பள்ளிவாசலுக்குத் தேவையான பாய்கள் செய்து கொடுக்கப்படும- பாய்கள் கையிருப்பிலும உண்டு- எஸ் கனகரட்னம, துலா பாய் தொழிற்சாலை, பகுத்துவ, கின்கத்தேனை-

வி இ 031747

## கமரா பழுது பார்த்தல்

கமரா சேவிஸிங், லென்ஸ் கிளீனிங், பிளஷ் கன் பழுது பார்த்தல் செய்யப்படும- கொழும்பு கிப்ட் ஹவுஸ், 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம எதிரில்) புறக்கோட்டை-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 030606

## மலையாள மந்திர வசியம

மாந்திரீகத் துறையில் நமது நாட்டிலும வெளிநாடுகளிலும உண்மை சேவை புரியும என்னிடம வாருங்கள்- குடும்பப் பிணக்கா, திருமணத் தடையா, வியாபார வசியங்களா, காதல் 24 மணிநேர வசியங்களா, தீராத நோயா, பேயா, சூனிய நிவர்த்தியா, தெளிவான கம்பியூட்டர் ஜாதக விளக்கமா, ஜோதிட மாந்திரீக தத்துவஞானி பி கே சாமி, 33 தினச்சந்தை, நுவரெலியா- தொலைபேசி- 052/2508-
வி இ 1066

கோட்டை-
Colombo Gift House

வி இ 030606

## உடன் தேவை

இளைஞர் பெண்கள்- சுறுசுறுப்புடையவராகவும நம்பிக்கையுடையவராகவும சிங்களத்தில் பேசத் தெரிந்தவராயிருத்தல் வேண்டும- ஆபீஸ் பையனும தேவை- வயது 19 க்குக் கீழ்- விண்ணப்பிக்குக- லோட்டஸ், த பெ இல 1927, கொழும்பு-

## ஆங்கில டைப்ரைட்டர்

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்குண்டு- விலை ரூ 2900/-க்கு மேல்-

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 030606

## நியூமரலாஜி கணித்தல்

நியூமரலாஜிக் கணிப்பின் மூலம உங்களது பிறந்த திகதியிலும பெயரமைப்பிலும பொதிந்துள்ள துரதிஷ்டங்களைக் கண்டறிந்து உங்களது பிறந்த திகதிக்கேற்ப பெயரையும ஏனைய அமசங்களையும அதிர்ஷ்டகரமாக அமைத்து மகிழ்ச்சிகரமாக வாழ ஆவன செய்வோம- விவரங்களுக்கு முத்திரை ஒட்டிய கவருடன் எழுதுங்கள்- விடுமுறை தினங்களில் மாத்திரம நேரில் சந்திக்கலாம-

Sulfika Buhary Shams al Manzil 17 Eluwila. Panadura

வி இ 032892

குழந்தைகளுக்குரிய உள்நாட்டு, வெளிநாட்டு விசேட ஆடைகள் (பாட்டி புரொக்) சகாய விலைகளில் விற்கப்படும- வியாபாரிகட்கு கவர்ச்சியான "டிஸ்கவுண்ட்" கொடுக்கப்படும- "பேபி ஸ்பொட்", (கமுனு தியேட்டருக்கு எதிரில்) 83-ஏ/1[2, முதலாம மாடி, நீர்கொழும்பு ரோட், வத்தளை-

வி இ 030399

## வாகனங்கள் வாடகைக்கு

நுவரெலியா பருவ காலத்தில் தங்குவோர்களுக்கு நவீன இடங்களை சுற்றிப் பார்க்க எம்மிடம புதிய வாகன வசதி உண்டு- தேவைக்கு பதிவு செய்ய "சுபா டிரெவல்ஸ்". 33, தினச்சந்தை கட்டிடம, நுவரெலியா- தொலைபேசி- 052/2508-

வி இ 1066

## மலையாள வசி

ஞான் ஆசான் மாந்திரீக்க மலையாளிய சித்தன் பி கே சாமி லங்கா நாட்டிலும புறநாட்டிலும பிரசித்த மாந்திரீக ஞானசித்தும- ஸ்திரீ - புருஷ வசிய சித்தும, எத்ரி பில்லி சூனியம, வட்டு ஸர்வ சித்தக்கும யானை சந்திக்க லக்ஷ உரு. சனி பூசா, குரு பூசா, ஜக்கா பூசா, துர்க்கா பூசா சர்வமும யாம செய்யது தரும- மலையாளிகள் எம்மை நாடும உத்தரவு பிறப்பிக்கின்ற ஆசான் பி கே சாமி, துர்க்காதேவி தரிசன லக்க 31—32—33, தினசந்தை கட்டிட, நுவரெலியா- தொலைபேசி 052/2508-

வி இ 1066

...ளர் திரு ஆர் ந ாகலிங்கம கலந்து கொள்வார்.

(ம-ந)

## இராணுவ வீரர்...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மூன்று தோட்டத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

பண்டாரவளை இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் சாதாரண உடையில் பொலீஸாரின் அனுமதியைப் பெற்று இத்தோட்டத்திற்குள் நுழைந்து இருவரை கைது செய்துள்ளனர்.

அவர்கள் தீவிரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்களைக் கைது செய்வதற்கு தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து இராணுவ வீரர்கள் துப்பாக்கிப் பிரயோகம செய்தனர்.

துப்பாக்கி வேட்டுக்கு இருவர் அவ்விடத்திலேயே பலியாயினர். ஒருவர் வியாழன் காலை மரணமானார்.

கைது செய்யப்பட்ட இராணுவ வீரர்கள் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

(ம-ந)

சாதகமான முன்னேற்றம் இப்போது புலிகளுடன் பேசுகிறது பேச்சுவார்த்தையில் பொதுவான முன்னேற்றம காணப்பட்டுள்ளது- இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறினார்

### மாகாண சபை !

வடக்கு, கிழக்கு மாகாண சபை பற்றிய கேள்விகளுக்கு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன பதிலளிக்கையில், அரசமைப்புச் சட்ட விதிகளுக்கு அமைய ஜனாதிபதி சரியான வேளையில் உரிய நடவடிக்கை எடுப்பார் என்றார்

வடக்கு, கிழக்கு மாகாண சபைக் கூட்டம நடக்குமா? எங்கே நடக்கும்? இவை பற்றி ஒன்றும தெரியாது-

அமினும வடக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் ஜெனரல் நளின் செனவிரத்ன மாகாண சபை சம்பந்தமான அறிக்கை ஒன்றை ஜனாதிபதியிடம சமர்ப்பித்திருக்கிறார்- அதை ஜனாதிபதி பரிசீலனை செய்து வருகிறார் என்றும அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறினார்-

### சார்க் மாநாடு

சார்க் மாநாடு பற்றி அமைச்சர் குறிப்பிடுகையில், இலங்கையில் சார்க் மாநாடு நடந்தால் கட்டுப்பாடு மாலைதீவில் நடைபெறும. மாநாட்டில் இலங்கை கலந்து கொள்ளும என்று அமைச்சர் சொன்னார்-

ரஞ்சன்;- தெரியாது-

கேள்வி;- இலங்கை இராணுவத்தில் நம்பிக்கை இல்லை என்று அன்டன் பாலசிங்கம கூறியிருக்கிறாரே?

ரஞ்சன்:- நாங்கள் விடுதலைப் புலிகளை நம்பித்தானே அவர்களுடன் பேசுகிறோம- அவர்கள் இராணுவத்தில் சேரப் போகிறார்கள்

கேள்வி:- பாண்டிச்சேரியில் தமிழ் தேசிய இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்று புலிகள் கூறியுள்ளனரே... உண்மையா?

ரஞ்சன்:- இந்தியாவில் எங்களுக்கு ஏஜன்சிகள் இல்லை

கேள்வி:- இந்தியாவிடம இருந்து "றோ"வின் செயற்பாடு தொடர்பான அறிவித்தல் ஏதாவது வந்துள்ளதா?

ரஞ்சன்;- இல்லை-

[உ-கு]

## அரசுக்கு...

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு அதிகாரிகள் போன்றோரை நியமிக்கும போது கவனமாக நடந்து கொள்ள வேண்டும என்றும அவர்களின் நடத்தையை தொடர்ந்து மீளாய்வு செய்து வர வேண்டும என்றும ஜனாதிபதி பணித்துள்ளார்.

(ந-ற)

கும எனது உளங்கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்-

— இவ்வாறு ஜனாதிபதி கூறியுள்ளார்-

### டி அய்யாத்துரை

கொழும்பு, ஏப். 14

தமிழ் - சிங்கள மக்களின் ஒருமித்த விழாவான புத்தாண்டு விழாவை இந்தாண்டு மிகக் கோலாகலமாகக் கொண்டாட வேண்டுமென்ற அபிலாஷைகள் மக்களின் இதயத்தை நிறைத்துள்ளன.

இவ்வாறு தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு டி அய்யாத்துரை தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

### ஜ தொ கா தலைவர்

நாட்டின் நிலைமை சீரடைந்து வரும ஒரு கட்டத்தில் இவ்வருடச் சித்திரைப் பெருநாள் வருகிறது. இந்தப் பெருநாள் முன்னையவற்றைவிடச் சிறப்பானதாயிருக்கும என நமபலாம.

இவ்வாறு ஜ தொ கா தலைவர் அஸீஸ் தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

### ராஜா செனவிரத்னா

பிறக்கும சிங்கள தமிழ் புத்தாண்டு இலங்கையில் சகல இனமக்களிடையேயும சாந்தியையும சமாதானத்தையும சகோதரத்துவத்தையும ஐக்கியத்தையும ஏற்படுத்துவதுடன், கடந்த கால துயரச் சம்பவங்கள் மீண்டும எக்காலத்திலும நமநாட்டில் ஏற்படாத சூழ்நிலைகளையும உருவாக்க வேண்டும.

இவ்வாறு தே தோ தொழிற்சங்க பொதுச் செயலாளர் திரு ராஜா செனவிரத்ன தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

# நடமாடும் வங்கி...


(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இக்கடன்கள் காலையில் கொடுத்து குறைந்த வட்டி வீதத்துடன் மாலையில் அறவிடப்படும- கூட்டுறவுச் சங்கங்களின் மூலம நாடு முழுவதிலும இத்திட்டம நடைமுறைப்படுத்தப்படும-

ஆயிரம ரூபாவுக்குக் குறைந்த அளவு முதலீடு செய்து வியாபாரம செய்பவர்களுக்கு இக்கடன்கள் வழங்கப்படும-

2 சதவீத வட்டியே அறவிடப்படும என்று அமைச்சர் கூறினார்-

[ம—ழ]



## யோவான்ஸ் நாயகர் அடிச்சுவட்டில்

ஜெருசலேம் நகரில் இருந்து ஏழு மைல்களுக்கப்பால் உள்ள புராதன பலிபீடம் ஒன்றினுள் 10 மத குருமார் வாழ்ந்து வருகின்றனர்- இந்த இடத்தில் தான் யோவான்ஸ் நாயகர் தனது வாலிபப் பராயத்தில் வாழ்ந்தவர் என்று நம்பப்படுகிறது-

பிரான்ஸ் தேசத்தவர்களான இந்த மத குருமார் பல சபைகளை சேர்ந்தவர்களாவர்- இவர்கள் தங்களின் பெரும்பான்மையான நேரத்தை ஜெபத்திலும் தியானத்திலும் கழித்து வருகிறார்கள்-

இவர்கள் பல சமூக சேவைகளில் தங்கள் நேரத்தை செலவிடுகின்றனர்- இது கட்டாயமும் கூட- சிலர் வர்ணம் தீட்டுகின்றனர்- சிலர் படம் வரைகின்றனர்- அந்த மத குருக்களில் ஒருவர் கைப்பணி வேலை ஒன்றை புரிவதை மேலேயுள்ள படத்தில் காணலாம்- (ம-த)

# இகத்தில் காணும் சுகம் நிலையற்றது

## பரத்தில் அதனைக் காண முயன்றாலே பேரின்பம்

— வைரம் ராஜகோபால் —

பயம் மிகுந்த தனி வழியாக சம்சாரக் காட்டு வழியைக் கடந்து முக்தி நகரமாகிய சுந்த ஊரை அடைவதற்குரிய பாதை தனி வழி! இந்த வழியில் போக்குவரத்தே மிக அரிது!

சிற்றின்பங்களையே பெரிதாக எண்ணும் இந்த மனம் தார் ரோடில் கார் சவாரி செய்யவே விரும்பும்- காடும் மலையும் அத்வானமுமான இந்தத் தனி வழியில் நடந்து குன்றின் மேல் குடிகொண்டுள்ள குமர கோட்டத்தை நாட எப்படி முடியும்?

புதிதாக சினிமாப் படம் ஆரம்பமாகிறது என்றால் முதல் நாளே முதல் ஆட்டத்துக்கு முதல் வகுப்பு டிக்கட் ஆர்வம் இருக்கிறது-

ஆடி கிருத்திகை! முருகனுக்கு விசேஷ அபிசேஷ அலங்கார ஆராதனை நடத்துகிறது என்றால் அடுத்த கிருத்திகைக்குப் போகலாமே என்று தோன்றுகிறது-

புண்யம் சுலபமாகக் கிடைத்தாலும் அதைப் பெற மனம் வருவதில்லை- குமர கோட்டத்துக்கு வழியே தனிதான் வைராக்கியம் ஒன்றுதான் துணை! இதன் துணை கொண்டு அசௌகரியங்களை கடந்துதான் அங்கு செல்ல வேண்டும்-

இகத்தில் காணும் சுகமெல்லாம் நிலையற்றது பரத்தில் காணும் சுகத்தையே நாடவேண்டும்- இதை எத்தனை பேர் நினைக்கிறார்கள்-

ஏதோ ஆயிரம், பல்லாயிரம் ஆண்டுகளில் ஓர் அகத்தியர், ஒரு அருணகிரி ஒரு ராமகிருஷ்ணர், ஒரு சங்கரர் போன்றவர்கள் தோன்றி அங்கு செல்கிறார்கள்-

இந்தத் தனி வழி மேடு பள்ளம், காடு கழனி மட்டும் கொண்டதல்ல! வழிப்பறிக் கள்வர் ஐவர் உள்ளனர்- நாம் கொண்டு செல்லும் பக்தி, ஞானம் வைராக்கியம் சீலம் இவைகளைப் பறித்துக் கொண்டு போக காத்திருப்பர்-

காம, க்ரோத, லோப மோக மத மாச்சர்யம் என்ற ஆறு பேய்கள் நம்மை மிரட்டி பிடித்துக் கொள்ளும் சந்தேகம் சஞ்சலம் என்ற சூறாவளி நம்மை முன்னேற விடாமல் தடுக்கும் சம்சாரம் என்ற கடல் பொங்கிவந்து வழிமறிக்கும் நாத்திகம் என்ற கொல்லிப் பாவை நம்மைத் தன் வசப்படுத்த மயக்கும்!

இது மட்டுமல்ல "இதோ இந்திரலோகம் இங்கே வா" என்று கூப்பிடும் "இதோ சத்யலோகம்- இங்கே வா" என்று சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும் என்று மற்றொரு இடத்தில் குரல் வரும்-

"இதோ வைகுண்டம் வா குழந்தாய்" என்று மற்றொரு கூப்பிடும் குரல் கேட்கும் இவைகளைக் கண்டு ஏமாறாதே என்றார்கள்- பிறவியே இல்லாத மோட்சத்தை நாடிச் செல் வழியிலுள்ள தடைகளையும் ஆசை வார்த்தைகளிலும் மயங்காதே!

ஒரு வினாடி நேரம் மயங்கினாலும் சஞ்சலம், சந்தேகப்பட்டாலும் போதும், வழியிலுள்ள தடைகள் உன்னைப் பற்றிக் கொள்ளும்-

(4ஆம் பக்கம் பார்க்க)

## காரின் தரித்திர நிலை

ஜேம்ஸ் டீன் என்பவர் ஆலிவுட்டில் பிரபல நடிகர் (30 வருடங்களுக்கு முன்) இவர் ஒரு கார் வைத்திருந்தார்- அது விபத்தில் மாட்டி டீன் இறந்துவிட்டார் உடனே காரை ஒரு லாரியில் ஏற்றிக் கொண்டு ஒர்க்ஷொப்பிற்கு எடுக்கச் சென்றார்கள்

காரை லாரியிலிருந்து இறக்கும்பொழுது மெக்கானிக்கின்கை மீது இன்ஜின் விழுந்து மெக்கானிக்கின் கால் முறிந்தது-

பிறகு அந்த காரை ஒரு டாக்டர் வாங்கினார்- தன்னுடைய ரேஸ் காரில் அந்த இன்ஜினைப் பொருத்தினார்-

அடுத்த நடந்த கார் ரேசில் டாக்டரின் கார் விபத்துக்குள்ளாகி டாக்டர் அவுட்! மறுபடியும் கார் ரிப்பேருக்கு அனுப்பப்பட்டது- அந்தக் கார் ஒர்க்ஷொப்பில் புகுந்த நேரம் "ஷெட்" தீப்பற்றிக் கொண்டது- காரை அப்புறப்படுத்த எடுத்துக் கொண்ட இரண்டு முயற்சிகளிலும் இரண்டு பேர் காலி- இப்பொழுது அந்தக் காரை பதினோரு துண்டுகளாக்கி பொருட்காட்சியில் வைத்திருக்கிறார்கள் இதன் சரித்திர சரித்திரமும் அந்தக் காரின் (?) முன் எழுதி தொங்கவிடப்பட்டு இருக்கிறது

[த-10]

POLYTHENE SEALER

பொலிதீன் ஸீலர்

குறைந்த விலையில்



கண்கள் நல்லொளிபெற

# என்ன செய்ய வேண்டும்?


கண்கள் எப்போதும் வீங்கியது போல் காணப்பட்டால் அவர்கள் சிறுநீரகம் பாதிக்கப்பட்டிருக்கும் எனவே டாக்டரைக் கலந்து ஆலோசிப்பது மிக அவசியம் ஜலதோஷம் சளி சைனஸ் தொல்லை உள்ளவர்களுக்கும் க்ரீம் உபயோகிக்கும் போது அது கண்களைச் சுற்றியுள்ள மிக மென்மையான தோலைப் பாதிப்பதால் இது ஏற்படும்- எனவே குளிர்ந்த நீரில் பஞ்சை நனைத்து 15 நிமிடங்கள் கண்கள் மேல் வைத்திருப்பது நல்லது-

சுருக்கங்களும் கோடுகளும் முகத்தில் ஏற்படும் முன்னர் கண்களைச் சுற்றியே தோன்றுகின்றன இவை வயதான காலத்தில் மட்டுமின்றி குறைந்த வயதிலேயே ஏற்படவும் வாய்ப்புண்டு-

கண்களைச் சுற்றியுள்ள தோல் மிக மெல்லியதாக இருப்பதால் அது விரைவில் உலர்ந்துவிடுகிறது எனவே நல்ல ஈரப் பசையுள்ள கிரீமை தினமும் உபயோகிக்க வேண்டும்- முட்டையின் வெள்ளைக் கரு அல்லது தேனை கண்களைச் சுற்றிலும் தடவி இலேசாக மசாஜ் செய்து 20 நிமிடங்கள் அப்படியே வைத்திருந்து பிறகு கழுவி விட வேண்டும்-

கண்கள் நல்ல ஒளி பெற தினமும் படுக்கப் போகு முன்பு கழுத்தின் பின்புறம் கட்டை விரல்களால் அசைத்து இலேசாக கிள்ளிக் கொடுத்து மசாஜ் செய்ய வேண்டும்- பிறகு கால்களை உயரமாகத் தூக்கி வைத்துக் கொண்டு ஓய்வு கொடுக்க வேண்டும்- கண்கள் நல்ல கூர்மையான பார்வை பெற தினமும் ஒரு டம்ளர் கேரட் ஜூஸ் குடிப்பது நல்லது-

நிறைய பேருக்கு கண்களுக்குக் கீழ் வெள்ளையாக சொரசொரப்பாக இருப்பதை நாம



பார்க்கலாம்- இவை செபம் அதிகமாக சுப்பதால் ஏற்படுகின்றன- இலேசாக இருப்பவை சாதாரணமாக தினமும் மசாஜ் செய்து ஆவிபிடித்தால் மறைந்து விடும்- ஆனால் மிகவும் பெரியதாக கடினமாக இருப்பவற்றை முறைப்படி மசாஜ் செய்து, ஆவி பிடித்து அதற்கென பிரத்தியேகமாக உள்ள ரிமூவர் மூலம் நல்ல பயிற்சியுள்ளவர் மூலம் அதனுள் உள்ள அழுக்கை வெளியேற்ற வேண்டும்- முகத்தை நன்றாக சுத்தமாக வைத்துக் கொண்டால் இவை வருவதைத் தவிர்க்கலாம்-

கண்கள் ஒளியுடனும் கூர்மையான பார்வையுடனும் திகழ வைட்டமின் "ஏ" மிகுந்த உணவுப் பொருட்களை அன்றாட உணவில் அளவோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்- நிறைய தண்ணீர் அருந்த வேண்டும் மேலும் நல்ல சிறந்த பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்

பயிற்சி கொடுப்பதற்கு நேரம், இடம் எதுவும் தேவையில்லை மிகவும் சோர்வடைந்த கண்களுக்கு கீழ்க்கண்ட பயிற்சிகளை மேற்கொண்டால் சோர்வு பறந்து விடும்-

(1) வேலையில் ஈடுபட்டிருக்கும் போது கண்களை நன்றாக அகலத் திறந்து மூடி, ஒரே இடத்தில் வெகு நேரம் பார்வையை பதியாமல் அவ்வப்பொழுது பார்வையை பல இடங்களில் சுழல விட வேண்டும்- மங்கலான வெளிச்சத்தில் வேலை செய்வதைத் தவிர்க்க வேண்டும்-

(2) அவ்வப்பொழுது கண்களுக்கு ஓய்வு கொடுக்க கண்களை ஒரு பத்து முறை சீக்கிரம் மூடிக் கொண்டு சில நிமிடங்கள் அப்படியே இருக்க வேண்டும்

(3) கண்கள் வீங்கி இருப்பவர்கள் கண்களை நன்றாக அகலத் திறந்து பார்வை மேல் நோக்குமாறு பல முறை செய்ய வேண்டும் விழிகளை பக்கவாட்டில் நகர்த்தாமல் மேல் நோக்கிப் பார்க்க வேண்டும்-

(4) சும்மா உட்கார்ந்திருக்கும் போது உள்ளங்கைகளினால் கண்களை மூடிக் கொண்டு ஒரு ஐந்து நிமிடங்கள் வெளிச்சத்திலிருந்து கண்களை மறைக்குமாறு செய்து திறந்தால் கண்களுக்குப் புத்துணர்ச்சி கிடைக்கும்

[ம-10]




ரூபா 1620/- முதல்

ஹெபேட் ஏஜென்சீஸ் லிமிட்டெட்

88- றெக்கிளமேசன் றோட் (என் எச் எம அப்துல் காதர் றோட்)

கொழும்பு—11.

# புனித ரமழான் சிந்தனைகள்

ரமழானின் இந்த இனிய நாட்களிலே, சமுதாயத்தின் ஒரு மூலையிலே அமைதியாக அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் அபாக்கியசாலிகளான வலது குறைந்தோர் குறித்து சிந்திப்பதும, அவர்களின் நலன்களுக்காகப் பாடுபட்டு உழைப்பதும பற்றி ஆராய்வது மிக மிகப் பொருத்தமானதே!

அங்கத்திலே குறை இருப்பதால் அவர்கள் சமுதாயத்தில் அங்கம பெற முடியாதவர்களாக ஆகி இருக்கிறார்கள்—

அவர்கள் வாழும உலகே ஒரு தனி உலகு— அல்லாஹ்வின் நாட்டம அவ்வாற என்றால் எம்மால் மாற்றத்தான் முடியுமா!

அங்கவீன முஸ்லிம்களை அசட்டை செய்து ஒதுக்கி விடாமல் அவர்களை இணைத்து அரவணைத்து அவர்களை மகிழ்விக்க அவர்களின் வாழ்வு சிறக்க சகலரும உதவ வேண்டும—

முஸ்லிம அமகவீனர்கள் நிலைமை குறித்து நாம ரமழானில் ஆழமாகச் சிந்திக்க வேண்டியது அவசியமாகும—

முஸ்லிம அங்கவீனர்களின் நிலைமையைச் சீர்தூக்கிப் பார்க்கும போது, பரிதாபகரமாகவே இருக்கிறது—

முஸ்லிம அங்கவீனர்கள் குறித்து அவ்வளவு நாட்டம செலுத்தப்படாமையினால் அவர்கள் பிற மதத்தவரால் நடத்தப்படும அங்கவீனர் பராமரிப்பு நிலையங்களை நாட வேண்டிய நிர்ப்பந்தம ஏற்படுகிறது—

இதன் விளைவுகள் தாம பாரதூரமாக இருக்கின்றன

இவர்கள் இஸ்லாத்தை மறக்கிறார்கள்— இஸ்லாமியப் பண்பாடுகள் கட்டற கட்டமாக போக்கடிக்கப்படச் செய்யப்படுகின்றன—

வளரும இளம பருவத்தில் இருந்தே இஸ்லாத்துக்குப் பலத்த அடி விழுகிறது—

இதனால் சன்மார்க்க அறிவு அற்ற ஒரு கூட்டமாக இவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்—

முஸ்லிமகளால் நடத்தப்படாத இந்த நிலையங்களிலே இஸ்லாம கற்பிக்கவோ இஸ்லாமிய சூழல் ஏற்படவோ வழியில்லை! தான்

திகாரிய தால் மலையில் இயக்கும இஸ்லாமிய அங்கவீனர் நிலையற முஸ்லிம அங்கவீனர் பராமரிப்பில் மிகச் சிறந்த பணியாற்றி வருகிறது—

புனித ரமழானில் அல்லாஹ் இந்த நிலையத்தாரின் அரிய சேவையை அங்கீகரித்தே திருவான்—

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்.

— எப் எம பைரூஸ்

# பிரபா காட்டு வாழ்க்கை கண்கலங்க வைத்தது

"சிந்தாமணி"யின் எல்லா அமசங்களுமே மிக மிகச் சிறப்பாக இருந்தன! குறிப்பாக இள்மை என்னும கூட்டுக்குள் இருந்து கட்டுப்பாடு என்னும கமபிகளை உடைத்துக் கொண்டு பறந்து விட்ட இரு இளஞ் சிட்டுக்களின இதயத் துடிப்பைத் தத்ரூபமாக நட்டி இருக்கின்றார் ஓவியர் சாம! "காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர்கதையின் பதி நான்காவது அங்கத்து ஓவியம உயிர் பெற்று விட்டது போல் அமைந்து விட்டது! இளமையின் துடிப்பை கதாசிரியர் அழகாகவே படம பிடித்துக் காட்டி இருக்கிறார்!

— ஸமீனா டஹ்லான், பட்டு கொடை—

★

சென்ற வாரம "சிந்து"வில் இடமபெற்ற அனைத்து அமசங்களும சவூதி மன்னர் பஹ்த்தினால் வழங்கப்பட்டிருந்த பேரீச்சம பழம போன்று இனித்தன!

— யு எல் முஸமமில், கலீல் ரஹீம, சாதிக், ஹேனதெதர—

★

புல்லாயிரக்கணக்கான வாசகர்களின் பாராட்டுக்களைச் சுமந்து கொண்டு வாரந்தோறும வலம வரும "சிந்து"வில் மிளிர்கின்ற அமசங்கள் பாலிலும தேன் சுவை அதிகமாகவே கலந்திருக்கின்றன! சென்ற வாரம சிந்துவில் "முஸாபிர் பார்வையில்" "அல் குர்ஆன் பக்கம சற்றே திரும்புங்கள்" என்ற தலைப்பில் இடம பெற்ற கட்டுரையைத் திருமபத் திருமபப் படித்தேன்! முஸாபிரின் சேவை மேன் மேலும வளர்ச்சி அடைய என்னுடைய நல்வாழ்த்துக்கள்!

— தே ஆர் நிஷா, வெல்லம பிட்டிய—

★

"உண்ணா நோன்பு" என்ற சிறுகதை பிரமாதம! கொமபியூட்டர் பற்றி தொடர்ந்து வெளியிட்டு வரும கட்டுரை மிகவும உகந்தது— உண்மையில் சிந்துவை கொமபியூட்டர் பத்திரிகை என்றே கூற வேண்டும!

— டீ எம நப்ஹான், மன்னார்—

★

"திருமணப்பந்தல்" மூலம மணவாழ்க்கைக்கான ஜோடிகளைச் சேர்த்து வைக்கும பணியில் "சிந்தாமணி" ஈடுபட்டிருப்பது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்!

— திருமதி ராதா சிவபெருமாள், டவுன்சைட் எஸ்டேட்—

★

கடந்த வாரச் "சிந்து"வில் இடமபெற்ற சகல ஆக்கங்களும இனிமையிலும இனிமை!, கொமபியூட்டரின் (கணினியின்) கதை மிக மிக அருமையாகச் சென்று கொண்டிருக்கிறது! சுவையான பல கட்டுரைகளைத் தரும சிந்துவே நீ வாழ்க... வளர்க!

— எம எம ரிஸ்வான், புதிய காத்தான்குடி—

★

வாரந்தோறும "சிந்தாமணி"யில் பிரசுரமாகும முகப்புப் படம, சிந்துவுக்கே ஒரு "பிளஸ்பொயின்ட்!" அதற்கு ஏற்றாற் போல் மர்மக் கவிஞர் வடிக்கும கவிதைகளோ "வெரி இன்டரஸ்டிங!" திரிஞானி பதில்கள் தேன் போல் இனிக்கின்றன!

## பரஸ்பரம்

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" தொடர்கதை "சிந்து"வில் முன்பு வெளியான கதைகளை விட வித்தியாசமான கதையமைப்புடனும விறுவிறுப்பான நடையுடனும சென்று கொண்டிருக்கிறது! சிந்து தரும கட்டுரைகள் படித்துப் பயன் பெறக் கூடியவையாக இருக்கின்றன!

— செல்வி ஜே எம எச் சித்தி மர்ழியா, தியத்தலாவ—

★

"கவரும கானம" பகுதி விருமபத்தக்கதும பாராட்டத் தக்கதுமான பகுதி! எனவே அப் பகுதிக்கு நேயர்களின் விருப்பமாகத் தெரிவாகும பாடல்களில் இரண்டையாவது வாரந்தோறும பிரசுரிக்குமபடி வேண்டுகிறோம!

— எச் பிர்தவுஸ்கான், ஏ பாரிஸ்டர், உக்குவளை—

★

நாட்டு நலனும கூட்டு வாழ்வும ஒருங்கிணைந்த விடுதலைப் புலிகளின் காட்டு வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டிய நெடுமாறனின் கட்டுரை சுவாரஸ்யமாக அமைந்திருந்தது!

— நவஜோதி ரமணன், புளியாவத்தை மே பி—

★

"மனிதர்கள்" என்ற சின்னஞ் சிறுகதை சிந்திக்க வைத்தது!

— தே ஜி எச் சகீர்டீன், வறக்காமுறை—

★

"காட்டில் பிரபாகரன் வாழ்ந்தது எப்படி?" என்ற தலைப்பில் விரிவாக்கப்பட்டிருந்த சில அமசங்கள் கண் கலங்க வைத்தன! பிரபாகரனின் கடந்த கால உண்மையான நிலைப்பாட்டை தாராளமாகப் பிரசுரித்தமைக்கு சிந்தாமணியைப் பாராட்டுகிறேன்—

— ஆ பாரிஸ்டர், உக்குவளை—

★

நடுஜாமத்தில் நடுக்காட்டில் நடக்கும திகைப்பூட்டும சமபவங்களைக் கூட "காட்டில் பிரபாகரன் வாழ்ந்தது எப்படி?" போன்ற செந்தமிழ் தலைப்பிட்டு எம சிந்தனையைத் தூண்டும வ்தத்தில் அவைகளை நயக்கும நல்லமைப்பில் தொகுத்துத் தருவதில் சிந்துவொரு ஒளிவிளக்கு!

— எம எஸ் எம ராசிக், வறக்காமுறை—

★


"சிந்து"வில் வெளியாகும ஒவ்வொரு அமசமும பத்தரை மாற்றுத் தங்கமதான்! அதிலும மர்மக் கவிஞரின் முகப்புக் கவிதை வரிகள் "டொப்பே டொப்!" சார், அந்த மர்மக் கவிஞரை வாசகர்களாகிய எமக்கு அறிமுகப்படுத்தாத மர்மம என்னவோ?

— பரீக்கா அரிபீன், பதுளை.

★

"காதலி தேடிக் கொடுத்த மனைவி" சென்ற வாரம எங்களை மயிர்க்கூச்செறியச் செய்தது மட்டுமல்லாது மனக்கவலையையும உண்டாக்கியது!

— எம ஐ எம உவைஸ், எம ஐ எம மினாஸ், கல்குமுவை—



# அரண்மனைகளின் நகரம் அழிகிறதா?

## கல்கத்தாவை புனரமைக்கத் திட்டம்

இந்தியாவின் மிகப் பெரிய நகரமாக விளங்கும கல்கத்தா ... படியாக முன்னேறி வளர்ந்தது— 1715 ஆம ஆண்டில் அங்கு முதல் தேவாலயத்தை அங்கிலே... களுக்கும கமபீரமான கொட்டகைகளுக்கும பெயர் போன கல்கத்



வாகன நெரிசல் உள்ள வீதியொன்றில் காரின் கதவை இறங்குவதற்காக திறக்கும் போது பின்னால் வரும் வாகனம் மோதும் அபாயம் உண்டு- இந்த அபாயத்தை நீக்க புதுவித கார் ஒன்று பாவனைக்கு வந்துள்ளது- மேற்கு ஜெர்மனியில் இக்கார் வடிவமைக்கப்பட்டுள்ளது- காரின் கதவைத் திறந்ததும் கதவு மேலே போய் நின்று விடும்- இறங்குவதற்கும் அதிக இடம் கிடைக்கிறது- காரின் கதவு திறந்த நிலையில் இருப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம்! [த]

## இகத்தில் காணு...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவைகளிலிருந்து விடுபடுவதே பெரிய பாடாகிவிடும்! பிறவிக் கடலை கடப்பது சுலபமான தல்லதான் ஆனாலும் தீவிரமான அப்பியாசத்தாலும் வைராக்கியத்தாலும் வேறு எதிலும் பற்றுதல் இல்லாமல் அந்தத் தனி வழியைக் கடந்த விட்டால் மோட்ச சாமராஜ்யத்தில் நுழைந்து விடலாம்! அங்கே உங்களுக்கு ஒரு நிரந்தரமான இடம் உண்டு! முயற்சி செய்ய வேண்டும்!

[த-10]


# நியூ ரட்ணம்ஸ் டெயிலர்ஸ்

## NEW RATNAMS TAILORS

கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்டில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் உங்கள் வசதிக்காக அண்மையிலிருந்து கீழ்க் காணும் முகவரியில் தொடர்கிறது.

## நியூ ரட்ணம்ஸ் டெயிலர்ஸ்

இல. 93 2/5, மல்டி பிளாஸா
மெயின் வீதி, கொழும்பு—11.


## டெலிவிஷன்

15—4—1990

### ரூபவாஹினி

3-00 விளையாட்டு செய்திகள்
4-00 ராசற 10
5-00 கதைப் பக்கம்
5-30 உயிர்தெழுந்த நாள் செய்தி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-19 ஃப்ரேக்கிங் ஒஃப் த ரம்ழான் ஃபாஸ்ற்
6-30 செய்திகள் (சிங்களம்)
7-00 விளையாட்டு இதழ்
7-30 கீத மஞ்சரி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-30 சவசங்கீத
9-30 செய்திகள் (ஆங்கிலம்)
10-00 உயிர்தெழுந்த ஞாயிறு ஆராதனை
10-45 கொல்கொதா ஈஸ்டர் நாடகம்
12-15 ஒளிபரப்பு முடிவு

இந்தியாவின் மிகப் பெரிய நகரமாக விளங்கும் கல்கத்தாவுக்கு இப்போது வயது 300-

கல்கத்தா என்று கூறினால், உலகம் முழுவதும், அதை "சிட்டி ஆப் பேலசஸ்" என்று தான் கூறுவார்கள்- அதாவது, அரண்மனைகளின் நகரம் என்று அழைக்கிறார்கள்- அந்த அளவுக்கு கல்கத்தா நகரம் முழுவதும் அரண்மனை போன்ற கட்டிடங்களும் கம்பீரமான கோட்டைகளும் நிறைந்திருக்கிறது-

கல்கத்தா தோன்றி பல நூற்றுக்கணக்கான வருடங்கள் ஆகி இருக்கலாம்- அதை கணக்கிட முடியாது- ஆனால் இன்றைக்கு நாம் பார்க்கக் கூடிய கல்கத்தாவை 300 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கியது ஆங்கிலேயர்கள் தான்-

1690 ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆங்கில ஏஜெண்டான ஜோப் சார்னாக், முதன் முதலாக சுதானிதி என்ற இடத்தில் தங்கினார்- பிறகு, அவரைத் தொடர்ந்த வந்தவர்கள் கலிகதா என்ற இடத்தில் வந்து தங்கினார்கள்- அவர்கள் கலிகதா, கோவிந்பூர் ஆகிய இடங்களை சபர்ணா சவுத்ரி என்பவரிடம் இருந்து ரூபா 12 ஆயிரத்துக்கு விலைக்கு வாங்கினார்கள்-

இந்த கலிகதா என்பது தான், இப்போது கல்கத்தா என்று அழைக்கப்படும் மாபெரும் நகரமாக மாறி விட்டது-

தங்கள் வியாபார ஸ்தலமாக கல்கத்தாவை மாற்றிய பிறகு, பாதுகாப்புக்காக 1696 ஆம் ஆண்டில் வில்லியம் கோட்டையை அங்கு ஆங்கிலேயர்கள் கட்டினார்கள்- 1699 ஆம் ஆண்டில் கல்கத்தாவை வங்காளத்தின் தலைநகராக மாற்றி, வில்லியம் கோட்டையில் ஒரு கவர்னரையும் நியமித்தார்கள்-

அதன் பிறகு கல்கத்தா படிப்படியாக முன்னேறி வளர்ந்தது- 1715 ஆம் ஆண்டில் அங்கு முதல் தேவாலயத்தை ஆங்கிலேயர்கள் கட்டினார்கள்- ஆங்கிலேயர்களின் அசைக்க முடியாத கோட்டையாக கல்கத்தா மாறியது-

இதற்கிடையில் 1756 ஆம் ஆண்டில் வங்காள மன்னனாக இருந்த சுராஜ் உத்தவ்லா, கல்கத்தாவை அதிரடியில் கைப்பற்றினார். அப்போது தான் "பிளாக் ஹோல்" எனப்படும் சம்பவம் நடந்தது. 146 ஆங்கில ஆண், பெண்களை ஒரு சிறிய அறையில் அடைத்துப் போட்டு மூச்சுத் திணற வைத்த கொன்ற கொடுமையான நிகழ்ச்சி நடந்தது-

இதைக் கேள்விப்பட்ட ஆங்கில அதிகாரி கிளைவ், சென்னையில் இருந்து கல்கத்தாவுக்கு விரைந்து நாவாபை தோற்கடித்தார்-

இந்தியாவிலேயே முதல் செய்தித் தாள் கல்கத்தாவில் தான் 1780 இல் அச்சடிக்கப்பட்டது- 1800 ஆம் ஆண்டில் இந்தியாவிலேயே முதன் முதலாக ஒரு கல்லூரி கல்கத்தாவில் தொடங்கப்பட்டது- 1818 இல் முதல் பருத்தி ஆலையும் கல்கத்தாவில் தான் கட்டினார்கள்- 1830 முதல் மருத்துவக் கல்லூரியும் அங்குதான் தொடங்கப்பட்டது- 1833 லிருந்து 1912 ஆம் ஆண்டு வரையில் இந்தியாவின் தலைநகரமாக விளங்கியது கல்கத்தா.

திருமணம், சதி எனப்படும் உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை ஒழித்தல் போன்ற சமூக மாற்றங்களையும் கல்கத்தாவில் தான் ஆங்கிலேயர்கள் அறிமுகப்படுத்தினார்கள்.

இவ்வளவு சிறப்பும் பெருமைகளும் பெற்றிருக்கும் கல்கத்தாவின் நிலைமை இப்போது தலைகீழாக மாறி வருகிறது-

எழில் கொஞ்சும் கட்டிடங்களுக்கும் கம்பீரமான கோட்டைகளுக்கும் பெயர் போன கல்கத்தாவில் இப்போது நடை பாதைகளிலும் சாக்கடை ஓரங்களிலும் குடிசைகளை அமைத்துக் கொண்டு அவதிப்படும் லட்சக்கணக்கான மக்களை தான் பார்க்க முடிகிறது-

சர்வதேச நாடுகளின் கணக்குப்படி ஒரு நகரத்தில் 1000 பேருக்கு 4 ஏக்கர் நிலம் திறந்த வெளியாக இருக்க வேண்டும்- பசுமையான பூங்காக்களும், காற்று வீசுவதற்கு வசதியான முறையில் அகலமான தெருக்களும் நெருக்கமில்லாத வீடுகளும் அமைந்திருக்க வேண்டும் ஆனால் கல்கத்தாவில் இதில் எந்த வசதியுமே இன்று கிடையாது- 1000 பேருக்கு கால் ஏக்கர் நிலம்தான் திறந்த வெளியாக இருக்கிறது-


நகரில் மொத்தம் 12 பூங்காக்கள் இருக்கின்றன- அதிலும் பல காய்ந்த சுவனிப்பாரற்று கிடக்கின்றன. மக்கள் நினைத்த இடத்துக்கெல்லாம் மனம் போல செல்கிறது-

வீடுகள் எந்தவித சுகாதார அடிப்படையும் இல்லாமல் நெருக்கமாக கட்டப்பட்டு வருகின்றன- போக்குவரத்து நெரிசல் மழை நீர் குட்டைகள் சாக்கடைக் கடை கேக்கும், தண்ணீர் தட்டுப்பாடு ஆகியவற்றுக்கும் கல்கத்தாவில் குறைவில்லை-

ஒரு காலத்தில் இந்தியாவின் கலாசாரத்துக்கும், ஆராய்ச்சி, தொழில் நுட்பம், கல்வி சமுதாய விழிப்புணர்ச்சி ஆகிய எல்லாவற்றுக்கும் முன்னோடியாகத் திகழ்ந்து உலகப் புகழ் பெற்றிருந்த கல்கத்தா, இன்று அதன் சிறப்பை இழந்து மற்ற சாதாரண நகரங்களைப் போல மாறி வருவது வேதனைக்குரிய விஷயமாகும்-

(ம-10)

# பிரமாண்டமான சூரியன் பிரபஞ்சத்தில் ஒரு கடுகு



## பிரளயம் நடந்த பின்னரும்

## ஏகவஸ்துவாய் நிற்பது ஆகாயம்

ரூபவாஹினியில் "பூமியின் சீவராசிகள்" (Life on Earth) என்ற தொடர் நிகழ்ச்சி நடைபெறுகிறது. நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் கிரகத்தில் பல கோடி ஆண்டுகளாக ஏற்பட்ட வேதியியல் மாற்றங்களையும் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியின் வரலாறுகளையும் விளக்க முயன்றிருக்கிறார் "டேவிட் அற்றன் பேக்" என்ற ஆராய்ச்சியாளர்.

பூமியில் உயிரினங்கள் தோன்றிய வரலாற்றை ஆதாரபூர்வமாக துலக்குவதற்கு இன்றைய விஞ்ஞானத்தின் வளர்ச்சி போதுமானதல்ல. ஏதோ சில படிவங்களை அடிப்படையாகக் கொண்டு அனுமானங்களை வெளியிடலாமேயொழிய திட்டவட்டமாக எதுவும் கூற முடியாதென்பது வெளிப்படை.

பிரபஞ்சத்தின் தோற்றத்தைப் பற்றிய ஆராய்ச்சிகளும் வான் கோள்வியல் ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்படுகின்றன. இத்துறையில் காணப்பட்ட முன்னேற்றமும் மிகக் குறைந்தளவாகவே இருக்கின்றது.

எமது பூமி இந்த அகண்ட பிரபஞ்சத்தின் ஒரு சிறிய சூரிய மண்டலத்தில் 7926 மைல் விட்டத்தைக் கொண்ட ஒரு சிறிய கிரகம். சூரியனில் இருந்து 92,868000 மைல்களுக்கு அப்பால் இயங்கிக் கொண்டிருக்கிறது. எங்கள் சூரிய மண்டலத்தைச் சார்ந்த ஒன்பது கிரகங்களில் "சேணாரம்" (Pluto) என்ற கிரகம் இச் சூரிய மண்டலத்தின் எல்லைக் கோடியில் சூரியனில் இருந்து 3,666,000000 மைல்களுக்கு அப்பால் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இவ்வளவு பிரமாண்டமானதாக நாம் எண்ணிக் கொண்டிருக்கும் எங்கள் சூரிய மண்டலம் இப்பிரபஞ்சத்தில் ஒரு "கடுகு" போன்ற சிறியதே. எமது பூமி இச் சூரிய மண்டலத்தில் எவ்வ... ஞானிகள் தீவிரமாக இறங்கியுள்ளார்கள்.

இரவு வேளைகளில் நிலாவொளியில் வானகப்பால் வீதியில் லட்சக்கணக்கான விண் மீன்களைப் பார்த்து வியப்படைகிறோம். இந்த நட்சத்திரங்களில் இருந்து புறப்பட்ட ஒளியானது எமது கண்களை வந்தடைய 30,000 வருடங்கள் எடுக்கின்றன.

எமது விஞ்ஞான வளர்ச்சிக்கு எட்டிய வரையில் ஒளிதான் அதி விரைவாக பயணிக்கும் சக்தி. ஒரு வினாடிக்கு 186,270 மைல் (கிட்டத்தட்ட மூன்று லட்சம் கிலோ மீற்றர்) வேகத்தில் ஒளி பயணிக்கின்றது. சூரியனிலிருந்து புறப்படும் ஒளியானது எம்மை வந்தடைய எட்டு நிமிடங்கள் எடுக்கின்றது.

எங்கள் கண்களுக்குத் தெரிகின்ற பால் மண்டலங்களை (Galaxy) விட வேறு எத்தனையோ கணக்கிலடங்கா பால் மண்டலங்களும் இருக்கின்றன. எங்கள் கண்களுக்கு அவை தெரிவதில்லை. நவீன தொலை நோக்கிகளால் வான் கோள்



வியல் ஆராய்ச்சியாளர்கள் அவைகளை அவதானிக்கிறார்கள். நவீன ஒளிவாங்கிக் கருவிகளால் நிழல்படமெடுக்கின்றார்கள்.

பட்ட ஒளி எங்கள் கண்களை வந்தடையவும், படமெடுக்கும் கருவிகளின் வில்லை (Lens) லென்ஸ்களை வந்து சேரவும் பல ஒளி வருடங்கள் (Light Years) சென்றிருக்கின்றன.

ஒரு ஒளி வருடம் என்பது ஒளி ஒரு வருடத்துக்குக் கடந்து செல்லும் தூர அளவை. 5,880000 மிலியன் மைல்களை ஒளி ஒரு வருடத்தில் பயணிக்கின்றது. எனவே அப்பால் மண்டலங்கள் கற்பனைக்கடங்காத தொலைவில் இருக்கின்றன என்பதை யூகித்துக் கொள்ளலாம்.

பிரபஞ்சம் விரிவடைந்து கொண்டிருக்கின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். எட்வின் ஹபிள் என்னும் அமெரிக்க விஞ்ஞானி மிகத் தொலைவில் உள்ள பால் மண்டலத்தில் இருந்துவரும் ஒளி பூமியை அடையும்பொழுது அதன் தொலைவுக்கு ஏற்ப அதன் அலை நீளம் (Wave Length) கூடியிருப்பதை அவதானித்தார்.

ஒளி எங்கிருந்து ஆரம்பிக்கின்றதோ அந்த மையத்திலிருந்து அது விலகிச் செல்லச் செல்ல அதன் அலை நீளம் விரிவடையும் என்ற கோட்பாடு "டொப்ளர் விதி" (Dopplor Effect) என விவரிக்கப்படுகிறது. இவ் விதி ஒளிக்கு மாத்திரமல்ல ஒலிக்கும் பொருந்தும். உதாரணமாக ஒரு புகையிரதம் எம்மை அணு...

**அ. குமரகுரு**

...கிக் கொண்டிருக்கும்பொழுது அதன் எச்சரிக்கை ஒலி கீச்சொலியாக எமது காதுகளை எட்டுகிறது. அது எம்மை விட்டு விலகிச் செல்லும்பொழுது அவ் ஒலி தேய்ந்து குறைந்த ஒலியாக எமக்குக் கேட்கிறது.

எமது பால் மண்டலத்துக்கு அயலிலும் தொலைவிலும் அமைந்துள்ள பால் மண்டலங்களில் இருந்து வரும் ஒளியை அவதானித்து அம் மண்டலங்கள்



ஒரு திடீர் வெடிப்பொலியை அடுத்து ஆயிரம் கோடி பாகைகளுக்கு மேலான கடும் வெப்பம் நிலவியதென்றும் அவ் வெப்பத்தின் விளைவாக மூலப்பொருள்கள் உருவாகினவென்றும் காலக்கிரமத்தில் பால் மண்டலங்கள் ஒவ்வொன்றாக தோன்றினவென்றும் ஜோர்ஜ் கமோ (George Gamow) என்ற பௌதிகவியல் விற்பன்னர் கருத்து வெளியிட்டார்.

மேலும் பிரபஞ்சம் ஆரம்பமான நிறுத்தப் புள்ளியை மையமாக வைத்து விரிந்து கொண்டிருக்கிறது. அப் புள்ளியில் இருந்து வெளிப்படும் ஆகர்ஷண சக்தியின் காரணமாக பிரபஞ்சம் விரிவடையும் விரிவடைவு குறைந்து கொண்டு வருவதால் பிரபஞ்சம் விரியும் வேகமும் குறைந்து வருகிறது என்பது "பிக் பாங்" ஆதரவாளர்களின் கருத்து.

"பிக் பாங்" கருத்து சில வானாராய்ச்சியாளர்களுக்கு ஏற்புடையதாக இருக்கவில்லை. எனவே, 1948 ஆம் ஆண்டு ஹெர்மன் பொண்டி, தொமாஸ் கோல்ட், பிறெட் ஹொயில் என்ற அறிஞர்கள் "நிரந்தர பிரபஞ்சம்" (Steady State Theory) என்ற கருத்தை வெளியிட்டார்கள்.

இக் கருத்தின் பிரகாரம் பிரபஞ்சத்துக்கு ஆரம்பமும் இல்லை முடிவும் இல்லை. ஆனால் கருப்பொருள் (Matter) உண்டாகிக் கொண்டேயிருக்கிறது. இக் கருத்தும் பெரிய சர்ச்சைக்குள்ளாகியது.

பிரபஞ்சம் என்றென்றும் ... துக்களை வெளியிட்டு வருகிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ரிஷிகளும், ஞானிகளும் சுவானுபூதியில் தாம் பெற்ற ஞானத்தைக் கொண்டு பிரபஞ்சத்தின் மர்மங்களை விளக்கியுள்ளார்கள். இந்து வேதங்களில் பிரபஞ்சம் பற்றிய விளக்கங்கள் பொதிந்து கிடக்கின்றன. கபில முனிவரின் சாங்கிய தர்சனம் இயற்கையின் அமைப்பை விளக்குகிறது.

சூன்யத்திலிருந்து எதுவும் வெளிப்படவில்லை. சூட்சுமமாக இருக்கும் பிரபஞ்சத்திலிருந்து ஸ்தூலமாக இருக்கும் பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்படுகிறது. அதாவது மறைந்து கிடந்தது தோற்றத்துக்கு வருகிறது. அழிவு ஏற்பட்ட பின்னர் திரும்பவும் அது தோன்றாத நிலைக்குத் திரும்பிவிடுகிறது.

இயற்கையிலுள்ள யாவும் ஒரு பிந்த நிலையில் சூட்சுமமாக இருந்து, படிப்படியாக பரிணாமம் பெற்று ஸ்தூல நிலையை அடைந்து ஸ்தூல நிலையின் உச்ச நிலைக்குச் சென்றான பிறகு திரும்பவும் சூட்சும நிலைக்குத் திரும்பிவிடுகின்றன.

சீவராசிகளும், தாவரங்களும் இவ்வாறாகத் தோன்றி இனப் பெருக்கச் சுழற்சியில் தமது பங்கை செலுத்தி விட்டு திரும்பவும் அழிந்து சூட்சும நிலைக்குச் சென்றுவிடுகின்றன.

சடப் பொருள்களிடத்தும் இக் கோட்பாட்டைக் காண்கிறோம். சுவாமி விவேகானந்தர் இதற்கு உதாரணமாக இவ்வாறு கூறுகிறார். "மழைத் துளி ஒன்று வீழ்கிறது. வானத்தில் அது மேகம் நீராக மாறியது. பின்னர் துளியாகக் கீழே வீழ்ந்தது. திரும்பவும் ஆவியாகி மேலே செல்ல வேண்டிய கடமைப்பாடு அதற்கு உள்ளது.

"மலைகளின் மேல் படிகின்ற பனிக் கட்டிகளும் ஓடுகின்ற ஆறுகளும் அம் மலைகளை சிறிது சிறிதாக கோர்த்து மணல் மணிகளாக மாற்றி கடலுக்கு அடித்துச் செல்கின்றன. நாளடைவில் கடலினுள் அது கற்பாறையாகி பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின் மலையாக முளைத்து வெளிப்படுகின்றது.

இது போலவே பெரிய பெரிய சூரிய மண்டலங்களும் நட்சத்திரங்களும் பரிணமிப்பதும் அழிவதும் பின்னர் தோன்றுவதுமாக இருக்கின்றன. இயற்கையின் நியதி அணு முதல் அண்டம் வரை ஒரே பாங்கில்தான் நிகழ்கின்றது.

"தோற்றத்துக்கு அப்பால் இருப்பது பூரணம் தோன்றியுள்ளதும் பூரணம் பூரணத்திலிருந்து பூரணம் வந்த பின்பு பூரணமே எஞ்சி நிற்கிறது" என்று உபநிடதம் கூறுகிறது. தற்கால விஞ்ஞானிகள் பலவித ஆராய்ச்சிகளின் முடிவில் கூறும் யூகங்களுக்கும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் கபில முனி போன்ற ரிஷிகள் இவ் வையகத்தின் தோற்றம் பற்றிக் கூறியதற்கும் ஓரளவு உடன்பாடு காணப்படுகிறது.

பரம்பொருளுக்கு ஆதியும் இல்லை அந்தமுமில்லை. பரம பொருளில் இருந்து தோன்றிய பிரபஞ்சத்துக்கும் ஆரம்பமுமில்லை முடிவுமில்லை. தோற்றத்துக்கு வந்தவையெல்லாம் திரும்பவும் தோன்றா நிலைக்குச் சென்று மறுபடியும் தோற்றத்துக்கு வருகின்றன. எது இருக்கின்றதோ அது சர்வகாலமும் இருக்கிறது, என்பது வேதங்கள் கூறும் உண்மை.

ஆகாசம் (Matter) என்னும் மூலப்பொருளில் பிராணன் (Energy) என்னும் விசை செயல்படுவதால் அண்டங்கள் உண்டாகின்றன. சிருஷ்டிக்கு முன்பு பிரளயம் எனப்படும் பேரழிவு நிகழ்ந்து அதைத் தொடர்ந்து அண்டங்கள் யாவும் ஸ்தம்பித நிலையை அடைகின்றன.

பிரளயத்தின் போது முன்பிருந்த உலகங்கள் தோற்றங்கள் வடிவங்கள், வஸ்துக்கள் யாவும் அழிந்தொழிந்து ஆகாசம் என்னும் மூலப்பொருள்களில் ஒடுங்கி விடுகின்றன. பஞ்சபூதங்கள் எனப்படும் முதல் மூலப்பொருள்களில் ஆகாசத்தை தவிர்ந்த ஏனைய நாலு மூலப்பொருள்களாகிய பிருதுவி (மண்) அப்பு (நீர்) தேயு (நெருப்பு) வாயு (காற்று) ஆகியவை அழிந்து ஆகாசத்தில் ஒடுங்கி விடுகின்றன.

இந்த நான்கும் முதலில் ஒன்றிலொன்று மறைந்து ஒடுங்கிய பின்னரே ஆகாசத்தில் அடக்கமாகின்றன.

நிலம் போன்ற திண்ம வடிவங்கள் நீர் ஆகிய நுண் பொருளாக மாறிவிடுகின்றன. பின்னர் நீர் நிலையினின்று இன்னும் சூட்சும வடிவமாகி அக்னி நிலைக்கு மாறி எங்கும் வியாபகமாயிருந்து அதை விட சூட்சுமமான வாயு நிலைக்கு வந்து இறுதியில் ஆகாசத்தில் அடங்கி பழைய நிலைக்கு வந்துவிடுகின்றன.

கணக்கிலடங்கா யுகங்களுக்குப் பின்னரே பிரளயம் ஏற்படுகிறது. பிரளயம் நிகழ்ந்த பின்னர் ஏக வஸ்துவாய் இருக்கும் முதல் மூலப் பொருள் ஆகாசமே.

பிரளயத்தின் பின். அகண்டாகாரமாக இருக்கின்ற ஆகாசத்தின் மீது பிராணன் என்னும் விசை தாக்கிக் கொண்டிருக்கிறது. பின்னர் பிராணன் இயக்கத்தை உண்டாக்கிறது. அதிர்வுகள் எழுந்து அலைகள் பிறக்கின்றன. இந்த இயக்கத்தின் விளைவாக அண்டங்கள் தோன்றுகின்றன. இதை சிருஷ்டி என்கிறோம்.

பௌதிகவியல் ஆராய்ச்சிகளுடன் இயற்கை கடந்த ஆராய்வுகளும் (Metaphysics) ஒன்றிணையும் போதுதான் பேருண்மைகள் வெளிப்படுகின்றன.

இச் சூரிய மண்டலத்தில் எவ்வளவு சிறிய கிரகம் என்பதை யூகித்துக் கொள்ளலாம்—

எமது பூமிக்கு அண்மையில் உள்ள (238,840 மைல்கள்) சந்திரனை ஆய்வு செய்யவும், அக்கிரகத்தில் காலடி எடுத்து வைக்கவும், அண்மையில்தான் மனிதனால் முடிந்தது— அடுத்து வெள்ளி செவ்வாய் கிரகங்களையும் ஆய்வு செய்யும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்—

ஆராய்ச்சியாளர்கள் இன்று அவதானிப்பதும் படமெடுப்பதும் பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் அந்தக் கோள்கள் எந்த நிலையில் இருந்தனவோ அந்த நிலையிலேயே ஒழிய அவை இன்று இருக்கும் நிலையில் அல்ல— ஏனெனில் அந்தப் பால் மண்டலங்களில் இருந்து புறப்பட்ட ஒளி வந்தடைய பல கோடி ஆண்டுகள் செல்கின்றன. இத்துடன் அந்த மண்டலங்கள் எம்மை விட்டு விலகிச் சென்று கொண்டிருக்கின்றன என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள் அதாவது அண்டம் மேலும் மேலும் விரிந்து பரந்து கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள்—

ஆனால் பூவுலகை நடு மையமாக வைத்து ஏனைய பால் மண்டலங்களெல்லாம் எம்மை விட்டு விலகிச் செல்வதாக நினைத்துவிடக் கூடாது— வேறு பால் மண்டலங்களில் வசிப்பவர்களும் எம்மைப் போலவே பிற மண்டலங்கள் தம்மை விட்டு விலகிச் செல்வதாகக் கூறுவார்கள்— ஏனெனில் பிரபஞ்சம் எல்லையற்ற அகண்ட பெருவெளி— அது ஒரு எல்லைக்குள் அடங்காமல் விரிந்து கொண்டிருக்கிறது எனக் கருதப்படுகிறது

தலைசிறந்த பௌதிகவியல் மேதை ஐன்ஸ்ரைன் (Einstein) வெளிப்படுத்திய சார்பியல் கோட்பாடு விஞ்ஞான உலகத்தில் புதிய சிந்தனைகளுக்கு அடிப்படையாக அமைந்தது— அளவையாவும் ஒன்றையொன்று சார்ந்தவையேயன்றி அவை தனி நிலை பெறுபவை அல்ல (General Relativity) என்பதுதான் அவர் கண்டுபிடித்து வெளிப்படுத்திய தத்துவம்—

இத் தத்துவத்தின் அடிப்படையிலேயே பிரபஞ்சத்தின் ஆரம்பத்தைப் பற்றிய ஆராய்ச்சியில் "பிங் பாங்" (Bing Bang) என்ற பிரபல்யம் வாய்ந்த ஒரு கருத்து 1920ஆம் ஆண்டுவாக்கில் உருவாகியது— அதாவது 1500 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் முழு அண்டமும் ஒரு நிறைத்த புள்ளிக்குச் சுருக்கப்பட்டுக் கிடந்தது என்றும் ஒரு திடீர் வெடிப்பொலியின் பின்னரே அண்டம் உருவாகியதென்றும் விஞ்ஞானிகள் கூறினார்கள்—

பிரபஞ்சம் என்றென்றும் ஒரே பாங்கில் இருந்து கொண்டிருக்கிறதென்றால் மூலப்பொருள்கள் எப்படி உருவாகின என்ற கேள்வி எழுந்தது "பிங் பாங்" ஆதரவாளர்கள் சிருஷ்டி ஆரம்பிக்கும்போது ஏற்பட்ட கடுமையான வெப்பத்திலிருந்து மூலப்பொருள்கள் உண்டாகியதாகக் கூறினார்கள்— நிரந்தர பிரபஞ்சக் கருத்துக்கு ஆதரவானவர்களிடம் மூலப் பொருள்களும் நிரந்தரமானவைதானா என்று வினவப்பட்டது—

இவ் வினாவுக்கு வான் கோளியல் அறிஞர்கள் சிலர் விடையளித்தார்கள்— ஹியோ பிறே, மார்கரட் பேர் பிட்ச். வில்லியம் பவலர் ஆகியவர்கள் பிரபஞ்சத்தில் பிரமாண்டமான நட்சத்திரங்கள் இருக்கின்றன— அவை களின் மிகக் கடுமையான வெப்ப நிலைகளின்றது— அவை வெப்ப அணுசக்தி (Thermo— Nuclear Reacto,s) கள் போன்ற அவை செயல்படுவதால் மூலப் பொருள்கள் உருவாகின்றன என்றார்கள்—

இற்றைக்கு ஏறக்குறைய இருபது வருடங்களுக்கு முன்னர் "பிங் பாங்" கருத்துக்குச் சார்பான ஒரு கண்டுபிடிப்பு நிகழ்ந்தது— மிகக் குறைந்த மீற்றருக் குக் குறைந்த அலை நீளமுள்ள மின் காந்த அலைகளை (Micro Waves) பற்றிய ஆராய்ச்சியின்போது வெப்ப அலைகள் ஒரே அளவில் எல்லாப் பக்கங்களுக்கும் பரவுவதை விஞ்ஞானிகள் அவதானித்தார்கள் எனவே பிரபஞ்சத்தின் ஆரம்பம் ஒரே பாங்கில் இருந்திருக்கலாம் என்ற ஒரு கருத்தை விஞ்ஞானிகள் வெளியிட்டார்கள்

கிறிஸ்துவுக்குப் பின் இருபதாம் நூற்றாண்டில் பலவகைப்பட்ட ஆராய்ச்சிகளின் பின் விஞ்ஞானிகள் பலகாப்பட்ட காக்

# சமாதானம் நிலவட்டும்

— வீ. சித்தாராமன் —

அருளரசன் இயேசு பிரான் அதிசயமாய்
உயிர்த்தெழுந்த
பொருள் பல பொதிந்த புனித ஞாயிறு தினத்தொடு
இருளினை அகற்றி இங்கு ஒளி சேர்க்க வந்தாற்போல்
திருமகளாம் சித்திரையாள் தரணியிலே பிறந்தனளே!

★

கர்த்தரின் கருப் பொருளாம் கவின் மிகு சமாதானம்
அர்த்த மிக்கதாகிவிட சித்திரையும் ஜனித்தாள்
இந்நாளில்
குருத்தோலை ஞாயிறொடும் கருணையொளிர்
போயாவொடும்
கருத்துடை பெரிய வெள்ளியொடு உதித்தனளே
சித்திரையாள்

★

இத்தொடு இஸ்லாமியரின் ஏற்புடை நோன்போடு
தத்துவத்தை தனித்துவமாய் உணர்த்தி
சித்திரையாள் பிறந்தாள்
திருமறையின் பெருநாளும் திவ்விய பைபிளின்
திருநாளும்
ஒருமையாய் ஒருங்கிணைந்து உதித்ததும் அதிசயந்தான்

★

புத்தனவன் போதித்த புனித அன்பு மலரட்டும்
உத்தமனாம் இயேசுரைத்த அருளுணர்வும்
வளரட்டும்
எம்மிடையே என்றென்றும் ஒருமைப்பாடு
குலவட்டும்
இம்மண்ணில் எந்நாளும் சமாதானம்
நிலவட்டும்

# அறிவு வளர்ச்சி அடைய வேண்டும்

## கேள்வி ஞானம் அதற்கு உதவி

அறிவு என்பது வளர்ச்சியடைய வேண்டும்— இதற்கு புத்தகப் படிப்பு மட்டும் போதாது— அனுபவம் நிறைந்த பிறர் மூலம் கேட்டுத்தான் அறிவு வளர்ச்சியடைய வேண்டும் கேள்வி ஞானமே சிறந்தது என்றார்கள்— என்று கூறுவதாகும்—

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம் செல்வத்துளெல்லாம் தலை" என்பது குறள்— எல்லா செல்வங்களையும் விட செவி வழியாகக் கேட்டுப் பெறும் அறிவே பெரிய செல்வம்—

அறிவு வளர்ச்சி என்பது பள்ளியில் படித்த பட்டம் பெறுவதும் அறிவு தான் ஆனால், இந்த அறிவு சம்பாதிக்கவும், வாழ்க்கைக்கும் தான் உதவும் இதை அபரஞானம் என்பார்கள்—

ஆன்ம சுகத்திற்கும், பிறப்பை அறுப்பதற்கும் உதவக் கூடிய ஞானம் பர ஞானம்— இது ஒரு சத்குருவினிடமிருந்து செவி வழியாய்ப் பெற வேண்டுமென்பர்"

இந்த ஞானமே நித்யானந்தத்தை அளிக்க வல்லது— அப்படியானால் ஒரு சத்குரு யார்? நான் தான் உண்மையான குரு என்று பலர் போட்டியிடுகிறார்கள்—

ஏதோ ஜாலவித்தை செய்து காட்டி மக்களை மயக்குகிறார்கள்— இவர்களை எல்லாம் நம்பி விடாதே என்றார் திருமூலர்—

இவர்களை, "குருடர்களுக்கு கோல் காட்டிச் செல்லும் குருடர் என்கிறார்—

உண்மையில் குரு என்பவர் சிஷ்யனுடைய அஞ்ஞானத்தைப் போக்கி பிரம்ம வித்தையை போதிப்பவராவர்— இவரே ஜீவ ப்ரம்ம ஐக்கியத்தை போதிப்பவர்—

இப்படிப்பட்ட விஷயத்தை போதிக்கக் கூடிய குருவைத் தேடி அடைய வேண்டும் ப்ரம்மத்தை அறிந்தவனே பிறருக்கு அதை போதிக்க இயலும்—

வேத சாஸ்திர புராண ஞானம் மட்டும் போதாது— ஜீவ ப்ரம்ம ஐக்யத்தைப் பற்றிய ஞானமும் இருக்க வேண்டும்— எப்படி மேகமானது கடல் நீரை அருந்தி மழையாக பொழிந்து மதுரமான நீரை நமக்கு வழங்குகிறதோ அது போல் சத்குரு வும் சாஸ்திர சமுத்திரத்தின் நீரை அருந்தி சிஷ்யர்களுக்கு அவரவர் பக்குவ நிலைக்கு தகுந்தபடி உபதேசம் செய்து மேலான நிலைக்கு கொண்டு வருகிறார்—

சாஸ்திரங்கள் கடல் போல் விஸ்தாரமானது— அவை யாவற்றையும் ஒருவன் கற்றுணர அவகாசமும் ஆற்றலும் இல்லாமற் போகலாம்—

ஆனால் அவன் ஒரு சத்குருவை அடைந்து அவர் மூலமாகக் கிடைக்கும் ஒரு வாக்கியத்தின் மூலமே சகல சாஸ்திரங்களையும் அடைந்து அறிவு வளர்ச்சி பெற முடியும்— இத்தகைய குருவைத்தான் இறைவன் என்று கொள்ள வேண்டும்.

"எழுத்தறிவித்தவன் இறைவனாகும்" என்றார்கள் இங்கு எழுத்து என்பது "அ, ஆ. இ ஈ" போன்ற எழுத்தைச் சொல்லவில்லை— (மந்திர எழுத்துக் களை) உபதேசம் செய்கின்ற குருவையே இங்கு இறைவன் என்று கொள்ள வேண்டும்—

ஆக ஒரு சத்குரு ஒரு உத்தம சிஷ்யன் சேர்ந்து விட்டால் சிஷ்யனின் அறிவு வளர்ச்சியடையும் இதுவே உயர்வான அறிவு வளர்ச்சி! எல்லாருக்கும் அறிவு இருக்கிறது— அது இந்த வழியில் வளர்ச்சியடைய வேண்டும்—

(த–10)

—7—

# அந்தரங்க செயலாளராகவும் கொம்பியூட்டர் பணியாற்றும்

## மனிதனுடன் சதுரங்கம் ஆடி அவனை தோற்கடிக்கவும் அதனால் முடியும்

சித்ரா அருள்ராமலிங்கம்
Diploma in Computer Science, Madurai University

இது வரை கொமபியூட்டர் என்று சொல்லப்படுகின்ற கணினியின் ஐந்து தலைமுறை சரித்திரத்தைப் படித்தோம. இனி இந்தக் கணினிகள் பற்றி கொஞ்சம விவரமாக பார்ப்போம—

கணினிகளைப் பொதுவாக அவற்றின் வடிவம— இயக்கத் திறன் என்பவற்றின் அடிப்படையில் மூன்று வகைகளாகப் பிரிப்பார்கள்—

முதலாவது வகை மெயின் பிரேம கணினிகள் (Main Frame) இவை பொது உபயோக (General Purpose) கணினிகள் என்று அழைக்கப்படும— ஏனென்றால் இவை சகல கணக்கு—கணிப்பு வேலைகளையும செய்யும— இதனோடு தொடர்பு கொள்ள குட்டிக் குட்டிக் கணினிகள் பல்வேறு இடங்களில் பொருத்தப்பட்டிருக்கும—

உருவத்தில் மாத்திரமல்ல உபயோகத்திலும இந்தக் கணினிகள் பெரியவை— சீதோஷ்ண நிலை வேறுபாடுகளை தாங்காதவை எனவே குளிரூட்டிய அறைகளில்தான் இவை குடிகொண்டிருக்கும— பலர் ஒரே நேரத்தில் பல விஷயங்களுக்கு இதோடு தொடர்பு கொள்ள முடியும அத்தனை பேருக்கும டக்டக்கென்று தேவையான மறுமொழிகளை அளிக்கக் கூடிய செயல் திறன் உடையவை இவற்றின் சேமிப்புத் திறனும நினைவகமும விசாலமானவை.

இதனோடு தொடர்பு கொள்ளும குட்டிக் கணினிகளை அடிமைகள் (Slave Units — ஸிலேவ் யூனிட்ஸ்) என்று குறிப்பிடுவர்— ஏனென்றால் இவைகளுக்கு என்று தனி நினைவகம இருக்காது அப்படி இருந்தாலும அதன் கொள்திறன் மிகக் குறைவாகத்தான் இருக்கும தற்போது புழக்கத்திலுள்ள சில மெயின் பிரேமகள்—IBM 370, ICL 2900 ஆகியவையாகும—

இரண்டாவது வகை மினி கணினிகள் Mini Computers\ உருவத்தில் முன்னைய மெயின் பிரேமை விட சிறியவை பொது உபயோகத்துக்கு உதவுவதைப் பார்க்கிலும சில குறிப்பிட்ட விசேட உபயோகங்களுக்காக உருவாக்கப்படுபவை 1960அம காலத்து மெயின் பிரேமகளின் செயல்திறனுக்கு ஒப்பானவை மெயின் பிரேமைப் போல் குட்டிக் கணினிகள் மூலம தொடர்பு கொள்ளக் கூடியவை— IBM/36 என்ற மினிக்கணினி மினிக் கணினிகளில் பிரபல்யமபெற்ற கொன்

லாப் ரொப் மொடல் இவைகளை விமானப் பயணத்தின் போதும அல்லது காரில் செல்லும்போதும உபயோகப்படுத்த முடியும— சில வேளைகளில் நடமாடும அலுவலகம போல் இந்த சின்னக் கணினியில் அலுவலக விஷயங்கள் அதனது நினைவகத்தில் சேமித்து வைக்கப்பட்டிருக்கும—

இன்னும சில ரகங்கள் கைக்கு அடக்கமானவை— இவை Hand Held Model இவற்றில் நினைவக கொள்திறன் குறைவு ஆனால் இவற்றில் தரவுகளை சேகரித்த பின்னர் வீட்டில் உள்ள பெரிய ரகத்தில் ஊட்டிக் கொள்ளும வசதி உண்டு—

ஆரமப காலத்தில் வந்த பேர்சனல் கொமபியூட்டர்கள் உபயோகப்படுத்தப்பட்ட துறைகள் — மிகவும சொற்பமே. இன்று எந்தத் துறையை எடுத்தாலும, அங்கு பேர்சனல் கொமபியூட்டருக்கு ஒரு வேலை இருக்கவே இருக்கின்றது. வீடுகளிலும — தனியார் உபயோகங்களிலும இந்தக் கணினிகள் எப்படி உதவி செய்கின்றன?

உங்கள் வீட்டுக்கணக்கை போட்டுக் கொடுக்கிறது, வரவு செலவுகளை சரி பார்த்துக் கொடுக்கிறது. வருமானவரி கணக்குகளை செய்கிறது. உங்கள் குழந்தையின் பாடங்களுக்கு உதவுகிறது, சமையல் குறிப்புகளை மனதில் வைத்து — தேவையான போது திருப்பித் தருகிறது, கடிதம எழுதுகிறது. உங்கள் நண்பர்கள், வேண்டியவர்களது, முகவரிகளை குறித்து வைத்துக் கொள்கிறது. வீட்டுப்பொருட்களின் இருப்புக் கணக்குகளை செய்கிறது. உங்களது சந்திப்பு

யும், இன்று மழை பெய்யுமா? இல்லையா என்று காலநிலை பற்றி அறிந்து கொள்ள முடியும; பங்கு மார்கெட்டில் என்ன நடைபெறுகிறது என்று தெரிந்து கொள்ள முடியும; விமானப் பயணத்திற்கு இருக்கைகளை முன்பதிவு செய்து கொள்ளலாம; சில பெரிய ஸ்தாபனங்கள் பங்கு விற்பனைகளைக் கூட வீடியோ ரெக்ஸ் மூலம தான் புரிகின்றன.

இந்தக் கணினிகளுக்கு குறிப்பிட்ட செயல் திட்டங்களை செய்து ஊட்டிவிட்டால், மாலை ஆறு மணி என்றதும உங்கள் மின்சார விளக்குகளை எரியச் செய்யும, குறிப்பிட்ட நேரத்தில் அலாரம அடித்து உங்களை காலையில் எழுப்பும, எழுந்தவுடன் குடிப்பதற்கு வெந்நீர் போட்டு — காப்பி போட்டு வைக்கும. குளிப்பதற்கும வெந்நீர் ரெடியாக்கும, அன்றன்ற அலுவல்களை, சந்திப்புகளை குறித்து அலுவலக காரியதரிசி போல் வேலை செய்யும, குறிப்பிட்ட டெலிபோன் நமபர்களுக்கு அழைப்பு விடுத்து, உங்கள் அப்பொயிண்ட்மெண்ட்களை வைக்கும.

இனி தொழில் ரீதியிலும, வர்த்தக ரீதியிலும இந்த கணினிகள் புரியும பங்கைப் பார்ப்போம.

ஹோட்டல்களில அறைகளை முன்பதிவு செய்வது; கணக்குப் பார்ப்பது என்பவற்றை கணினி செய்கிறது. எலக்ட்ரானிக் மெயில் (Electronic Mail) என்ற திட்டத்தின்படி நீங்கள் கடிதங்களை எழுதி அனுப்ப வேண்டியதில்லை. கணினியில் கடிதத்தை "டைப்" பண்ணி, சுவிட்சு ஒன்றை அமுக்க வேண்டியது தான், அடுத்த சில செக்கனில் கடிதம அடுத்தவர் கைக்கு போய் விடும.

திருப்பி டைப் செய்யாமல், டைப் செய்ததை வேண்டிய இடத்தில் அடித்து திருத்தி, திருத்திய சுவடே தெரியாமல் ஒரிஜினல் பிரதி போல் கடிதத்தை, அறிக்கைகளை தயாரித்து கொடுக்கிறது.

இப்படிச் செய்தால் எவ்வளவு லாபம வரும? சமபளத்தைக் கூட்டினால் அடுத்த வருடம எவ்வளவு நட்டம வரும? இவ்வளவு வருமானத்திற்கு அடுத்த வருடம எவ்வளவு வரி கட்ட வேண்டும? என்றெல்லாம கணக்குப் போட்டுப் பார்ப்பதை Forecasting\ போர்க்காஸ்டிங என்பார்கள்.

ஒரு நிர்வாகத்திற்கு எதிர்காலத் திட்டங்கள் தயாரிக்க, இந்த Forecasting\ என்ற முன் கணிப்பு முறை அவசியம இதனை மனிதர்களால் செய்வதென்றால் பல நேரம விரயமாகும— திட்டத்தின் ஒவ்வொரு மாறுதலுக்கும ஒவ்வொரு புதிய கணக்கு போட்டுப் பார்க்க வேண்டும— ஆனால்

யாடும— ஒரு தடவை, உலக சதுரங்க வெற்றி வீரனை கணினி சதுரங்கத்தில் தோற்கடித்த சமபவமும நடைபெற்றுள்ளது.

இன்று கல்வித்துறையில் கணினியின் பங்கு பெரிதும போற்றப்படுகின்றது. இந்தத் துறையில் தான் கணினி பெரிதும வேண்டப்படுகின்றது என்று கூடச் சொல்லலாம. மேல் நாட்டில் 75 சதவீதமான உயர்நிலை கல்விக்கூடங்களில் கணினிகள் உபயோகமாகின்றன. எமது இலங்கையிலும உயர்தர கல்வி போதிக்கப்படும. பாடசாலைகளில் கணினியை அறிமுகப்படுத்த அரசு ஆவன செய்து வருகிறது.

கொம்பியூட்டர் கல்வி அலலது பயிற்சி பெறுவதற்கு மாத்திரம தான் பாடசாலைகளில் கணினி அறிமுகப்படுத்தப்படுகிறது என்று எண்ணாதீர்கள்.

கணினியைப் பற்றி எதுவும தெரியாதவர் கூட அதனை உபயோகித்து தன் கல்வியை வளம படுத்திக் கொள்ள முடியும.



இத்தகைய "பேர்சனல் கொமபியூட்டர்" மாணவர்களின் கல்விக்குப் பெரிதும உபயோகப் படுகிறது. (ம)

கண்டு பிடித்து தந்துவிடும். உலகில் சிறந்த அகராதியான ஒக்ஸ்போர்ட் ஆங்கில அகராதி முழுதும் கணினியில் உபயோகிக்க கூடியதாக கடந்த வருடம உருவாக்கப்பட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது—

கணினிகள் சுகாதார சேவையிலும மருத்துவத்திலும கூட அரிய பணிகளை ஆற்றுகின்றன


த்து வைக்கப்பட்டுள்ளது—

இலங்கை அரசுக்கு அந்தப் பட்டியலை அலச வேண்டுமானால் தொலைபேசி மூலமாக இங்குள்ள ஒரு கணினியை அந்த இன்டர்போல் மெயின் பிரேம கணினிக்கு தொடுத்துவிட்டால் அந்தப் பட்டியல் இங்குள்ள கணினியில் தோன்றும— இதனை டெலி கொமியூட்டிங Telecommuting என்பார்கள்—

இலங்கையில் சில மேல் நாட்டு தூதராலயங்களில் அந்த நாடுகளில் வசிக்கும இலங்கையரின் முழு விவரப் பட்டியல் அவர்கள் யார் எங்கு வசிக்கின்றார்கள்— எப்படி அங்கு போயினர்— அவர் பெற்றோர் சகோதரர்கள் இலங்கையில் யாருள்ளனர் என்ன வேலையில் உள்ளனர்—

போன்ற விவரங்கள் கணினியில் தொகுக்கு வைக்கப்பட்டுள்ளன அந்த மேல்நாட்டுக்குப் போக இங்குள்ள உறவினர்கள் எவராவது விரும்பி விசாவுக்கு விண்ணப்பித்தால் அந்த நாட்டில் வசிப்பவர் இவர்களை தாம அழைத்து ஆதரிப்பதாக (Sponsor ஸ்பொன்சர்) வாக்குறுதி

## 'கொம்பியூட்டர்' என்ற 'கனினி'யின் கதை



கணினியின் கையில் இந்தப் பிரச்சினையைக் கொடுத்து விட்டால் போதும, சில செக்கனில் நீங்கள் பதில் எடுத்து விடுவீர்கள், திட்டத்தின் ஒவ்வொரு படியிலும மாறுதல்களை செய்து அது மற்றப்படிகளில் எவ்வித மாற்றத்தை தரும என்று டக டக்கென்று பார்த்த விடலாம.

கல்வித்துறையில் உள்ள ஒவ்வொரு பாடத்திற்கும. கணினியில் கற்பதற்கு "கல்வி செயல் திட்டம" ஒன்று உண்டு. இந்த செயல் திட்டத்தை கணினிக்கு ஊட்டிவிட்டு. கணினி முன்னால் உட்கார வேண்டியதுதான். கணினி ஒரு ஆசிரியர் போல் உங்கள் பாடத்தை அதன் திரை

மருத்துவர்கள் தங்கள் பிணியாளர்களின் சகல விவரங்களையும பட்டியல் போட்டு வைக்க கணினி உதவுகிறது— நியூயோர்க் நகரில் ஒரு வைத்திய நிலையம தனது அமபுலன்ஸ் வண்டியில் கணினி வைத்துள்ளது தனது வாடிக்கை நோயாளிகள் பட்டியலை சகல விவரங்களோடு கணி

பார்க்கிலும் சில குறிப்பிட்ட விசேட உபயோகங்களுக்காக உருவாக்கப்படுபவை 1960ஆம் காலத்து மெயின் பிரேமகளின் செயல்திறனுக்கு ஒப்பானவை மெயின் பிரேமைப் போல் குட்டிக் கணினிகள் மூலம் தொடர்பு கொள்ளக் கூடியவை- IBM/36 என்ற மினிக்கணினி மினிக் கணினிகளில் பிரபல்யமபெற்ற தொன்றாகும்-

மூன்றாவது வகை மைக்கிறோ கொம்பியூட்டர் (Micro Computer) எனப்படும குட்டிக் கணினியாகும மற்ற வகை கணினிகளுக்கு அடைமொழியாக மெயின் பிரேம மினி என்று இருப்பதால் இவைகளை வெறுமனே கணினி என்று சொல்வது பொருத்தம அத்துடன் இன்று கணினிகளில் இந்த வகை கணினிதான் நிறைய உலகில் இருப்பதால் கணினி என்னும்போது மைக்கிறோ கொம்பியூட்டரையே கருதுவதாக பொதுவாகக் கொள்ளலாம-

இதனை பேர்சனல் கொம்பியூட்டர் - பீ ஸி (Personal Computer — PC) என்றெல்லாம அழைப்பார்கள் இதனது உயிரே ஒரு "சிப்" தான்! அந்தச் சிப்பில் மத்திய செயலகம பகுதி முழுவதும அடங்கியுள்ளது முதன் முதல் உருவகமான இந்த சிப் Intel 4004 ஆகும- இப்பொழுது Intel 8086 வகை Intel 80286 வகை, என்று Intel 80486 வரை பல மடங்கு சக்திவாய்ந்த மைக்கிறோ பரசெசர்களை - சிப்புகளை கொண்டு கணினிகள் தயாரிக்கப்படுகின்றன-

ஒவ்வொரு வகை "சிப்"பும வெவ்வேறு இயக்க வேகத்தை கொம்பியூட்டருக்கு கொடுக்கும

இந்த மைக்கிறோ கொம்பியூட்டர்கள் பலவித வடிவங்களில் உருவாகின்றன- மேசை மீது வைத்து பாவிக்கின்ற ரகங்கள் Desk TOP Model டெஸ்க் ரொப் மொடல் கையில் பிரீவ் கேஸ் (Brief Case) போல் தூக்கி எடுத்துச் செல்லவும மடிமேல் வைத்து உபயோகப்படுத்த கூடியவை Lap TOP Models


குழந்தையின் பாடங்களுக்கு உதவுகிறது, சமையல் குறிப்புகளை மனதில் வைத்து - தேவையான போது திருப்பித் தருகிறது, கடிதம எழுதுகிறது. உங்கள் நண்பர்கள், வேண்டியவர்களது, முகவரிகளை குறித்து வைத்துக் கொள்கிறது. வீட்டுப்பொருட்களின் இருப்புக் கணக்குகளை செய்கிறது. உங்களது சந்திப்புகள், நினைவுக் குறிப்புகள் என்பவற்றை மனனம பண்ணி வைத்துக் கொண்டு, நினைவுபடுத்துகிறது.

மெயில் (Electronic Mail) என்ற திட்டத்தின்படி நீங்கள் கடிதங்களை எழுதி அனுப்ப வேண்டியதில்லை. கணினியில் கடிதத்தை "டைப்" பண்ணி, சுவிட்சு ஒன்றை அமுக்க வேண்டியது தான், அடுத்த சில செக்கனில் கடிதம அடுத்தவர் கைக்கு போய் விடும.

பெரிய தொழில் நிலையங்களில் சமபளப்பட்டியல் போடுவது, இருப்பு கணக்குகள் பார்ப்பது, வரவேண்டிய கணக்கு,

கணினியின் கையில் இந்தப் பிரச்சினையைக் கொடுத்து விட்டால் போதும, சில செக்கனில் நீங்கள் பதில் எடுத்து விடுவீர்கள், திட்டத்தின் ஒவ்வொரு படியிலும மாறுதல்களை செய்து அது மற்றப்படிகளில் எவ்வித மாற்றத்தை தரும என்று டக் டக்கென்று பார்த்து விடலாம. இந்த Forecasting என்ற முன் கணிப்பு முறை கணினி வந்த பின்னர் நிர்வாகங்களுக்கு பெரிதும உத



இடத்துக்கு இடம தூக்கிச் செல்லக் கூடிய "லாப் மொடல்" ரக கணினியை முதலாவது படத்தில் காணலாம. கையில் கொண்டு செல்லக்கூடிய "மினி" கணினியை இரண்டாவது படத்தில் காணலாம. இதற்குள் இருக்கும "சிப்" வெளியில் எடுத்து காட்டப்படுகிறது. (ம)

வீடியோ ரெக்ஸ் (Video Tex) என்பது ஒரு வீட்டு வேலைகளில் கணினியின் பங்களிப்பில். சமீபத்தில் ஏற்பட்ட புதிய திருப்பம. கணினியையும, உங்கள் தொலைக்காட்சிப் பெட்டியையும, சில மின்சார உபகரணங்கள் உதவியுடன் இணைத்து வைத்துக் கொண்டு வீட்டிலிருந்தவாறே உலகில் எந்த கடையோடும வியாபாரம நடத்த முடி

கொடுக்க வேண்டிய கணக்குகளை நிர்வாகப்படுத்துவது, வரவு செலவு முடிப்பது, வருமானவரி கணக்கிடுவது, என்பதெல்லாம இந்த மைக்கிறோ கொமபியூட்டர் என்ற கணினி தான்.

அலுவலகங்களில் முன்னர் செயலர் (Secretary) பார்த்த வேலைகளை இலகுவாக்குகிறது கணினி. திருப்பித்

வியாயிருக்கின்றது.

விளையாட்டுகள், பொழுது போக்குகளிலும கணினி பங்கு பெறுகின்றது. சதுரங்கம் போன்ற விளையாட்டுகளை விளையாடுவதற்கு கணினிகளில் செயல் திட்டங்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. ஒரு கெட்டிக்கார வீரனைப் போல் மனிதருக்கு எதிராக கணினி சதுரங்கம விளை

கல்வித்துறையில் உள்ள ஒவ்வொரு பாடத்திற்கும. கணினியில் கற்பதற்கு "கல்வி செயல் திட்டம" ஒன்று உண்டு. இந்த செயல் திட்டத்தை கணினிக்கு ஊட்டிவிட்டு. கணினி முன்னால் உட்கார வேண்டியதுதான். கணினி ஒரு ஆசிரியர் போல் உங்கள் பாடத்தை அதன் திரையில் போதிக்கும. கேள்விகள் கணினியின் திரையில் தோன்றும,

நீங்கள் அந்தக் கேள்விகளின் விடையை முன்னாலுள்ள தட்டச்சு இயந்திரம போன்ற அமைப்பில் அடித்து கொடுக்க வேண்டும. உங்கள் பதில் சரியாக இருந்தால் பாடத்தின் அடுத்த பகுதிக்கு உங்களை அழைத்துச் செல்வார் கணினி, தப்பான விடை கொடுத்தீர்களென்றால், அதே பகுதியை சரியான விடை வரும வரை திருப்பித் திருப்பி செய்ய வைப்பார், இதனை கணினி வழி கல்வி முறை Computer Assisted Education — கொமபியூட்டர் அஸிஸ்டெட் எஜுகேஷன் என்று சொல்வர்.

புத்திசாலிகளுக்கு மட்டுமல்ல அறிவு வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கும் இந்த கணினி கல்வி முறை மிகவும உதவுதாக ஆய்வுகளிலிருந்து அறியப்படுகிறது- இந்தக் குழந்தைகளுக்கு சாதாரண முறையில் கல்வி ஊட்டப் போனால் காலவிரயமாவதும ஆசிரியர்களுக்கு அலுப்புத் தட்டி சலிப்பு ஏற்படுவதும இயற்கை ஆனால் கணினியைப் பொறுத்த மட்டில் அலுப்பு சலிப்பு இல்லாமல் அந்த பாடம மூளையில் படியும வரை ஆயிரம தடவையேனும திருப்பித் திருப்பி சொல்லிக் கொடுக்கும-

இன்று அகராதிகள் கலைக் களஞ்சியங்கள் யாவும கணினியில் வந்து விட்டன. உங்களுக்கு அர்த்தம் அறிய வேண்டிய சொல்லையோ அல்லது விளக்கம பெற வேண்டிய ஒரு பொருளையோ கணினியிடம கேட்டால் போதும உடனே அர்த்தத்தையோ விளக்கத்தையோ

மருத்துவர்கள் தங்கள் பிணியாளர்களின் சகல விவரங்களையும பட்டியல் போட்டு வைக்க கணினி உதவுகிறது- நியூயோர்க் நகரில் ஒரு வைத்திய நிலையம தனது அமபுலன்ஸ் வண்டியில் கணினி வைத்துள்ளது தனது வாடிக்கை நோயாளிகள் பட்டியலை சகல விவரங்களோடு கணினியில் சேமித்து வைத்துள்ளது இந்த நோயாளிகளிடமிருந்து அவசர அழைப்பு வந்து அமபுலன்ஸ் அவர்களை வைத்திய நிலையத்துக்கு அழைத்துவர பறக்குமபோதே அந்த நோயாளியை அவரின் நோயை அவருக்குப் பொருத்தமான சிகிச்சையை கணினியில் சில செக்கனில அறிந்து கொள்ளலாம- இதனால் கால தாமதமின்றி நோய்க்கு சிகிச்சை அளிக்க ஏதுவாகின்றது-

இன்னும சில கணினிகளுக்கு நோயின் குணம குறிகளை கொடுத்தால் என்ன நோயாக இருக்க முடியும- என்ன பரிசோதனைகள் செய்ய வேண்டும என்ன மருந்துகள் உபயோகிக்க வேண்டும என்றெல்லாம பட்டியல் போட்டுக் கொடுக்கும செயல் திட்டங்கள் உண்டு-

பாதுகாப்புத் துறையில் பிரபல குற்றவாளிகள் அவர்கள் குற்றம புரியுமபோது கையாளும வழி முறைகள் அவர்களின் கைவிரல் அடையாளங்கள் என்பவைகளை பட்டியல் போட்டு கணினியில் வைத்துள்ளார்கள்- ஒரு இடத்தில் குற்றம நடந்த உடனேயே குற்றவாளியைப் பற்றி கிடைக்க ஒரு சில ஆதாரங்களை கணினிக்கு கொடுத்தால் போதும கணினி தன்னிடமுள்ள ஆவணங்களை அலசிப் பார்த்து ஆதாரங்கள் பொருந்தி வருகின்ற குற்றவாளி பற்றிய முழு விவரங்களையும குறித்துத் தரும-

அகில உலக பொலீஸ் என்று அழைக்கப்படுகின்ற Interpol இன் ரேர்லரில் அகில உலக குற்றவாளிகள், போதை மருந்து கடத்தல்காரர்கள், பயங்கரவாதிகள் அனைவரினதும முழு விவரப் பட்டியல் ஒரு மெயின் பிரேம கணினியில் சேமி

போன்ற விவரங்கள் கணினியில் தொகுக்கு வைக்கப்பட்டுள்ளன அந்த மேல்நாட்டுக்குப் போக இங்குள்ள உறவினர்கள் எவராவது விரும்பி விசாவுக்கு விண்ணப்பித்தால் அந்த நாட்டில் வசிப்பவர் இவர்களை தாம அழைத்து ஆதரிப்பதாக (Sponsor ஸ்பொன்சர்) வாக்குறுதி கொடுக்க வேண்டும- அதன் பின்னர் இவர்களையில் உள்ளவாறு விசா விண்ணப்பத்தில் தந்துள்ள தகவல்கள் சரியானதா என்று கணினியில் உள்ள தகவல்களோடு சரிபார்க்கத்தான் கிடைக்கின்றது விசா தருவார்கள். "இங்குள்ள தூதரகத்திற்கு வெளிநாட்டில் உள்ள அண்ணன் பற்றி என்ன தெரிகிறது? ... ... ... ... ... ... தவறான தகவல்களைக் கொடுத்து கணினியிடம மாட்டிக் கொண்டு முழிக்க தமபிமாரின் கதைகள் ஏராளம-

இப்படி பல வேலைகளை புரிந்து வருகின்ற இந்த கணினிகள் எப்படிப்பட்டவை அவை எப்படி இந்த சிக்கலான வேலைகளை புரிகின்றன என்பதை அறிய முற்படுமபோது ஒரு அதிசயமான உண்மை எமக்கு புலப்படுகிறது

மனிதர்களே வியக்கும அரிய செயல்களை செய்கின்ற இந்த கணினிகளுக்கு அறிவு என்பது இல்லை- நினைவகம என்றொரு பகுதியை தனக்குள் வைத்திருந்தாலும சிந்தித்து செயலாற்றும திறன் இல்லை- பல இலக்கங்களில் கணக்குகள் செய்தாலும விண்வெளிப் பயணம எவுகணை ஆராய்ச்சி என்பவற்றின் கணித வேலைகளுக்கு கணினிகள் தான் பாக்கியம என்றிருந்தாலும கூட இந்த கணினிகளுக்குத் தெரிந்ததோ ஒரு கணிதம கூட்டல் ... ... இரண்டே இரண்டு இலக்கங்களைக் கொண்டு செய்யும கூட்டல் கணக்கைத்தான் கணினி செய்யும-

அப்படியானால் மொக்கில் ஒரு அறிவிலியான இந்த கணினி எப்படி இயங்குகிறது என்பதை அறிவது எம கடமையாகின்றது-

# விசுவாசிகள் உள்ளங்களில் இயேசு உயிர்த்தெழட்டும்



## இந்த நல்ல செய்தியை உறுதிப்படுத்தும் சாட்சிகள் நாமே

— எஸ். தேவநேசன் —

பரி. லூக்கா சுவிசேஷத்தில் லூக். 24:5 இல் உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? என்ற வசனத்தை பார்க்கிறோம்.

பரிசுத்த தேவ மைந்தன் இயேசு கொடிய இரக்க மனமற்ற மக்களினால் சிலுவையில் அறையப்பட்டு கொலை செய்யப்பட்டார்.

அவருடைய சரீரத்தை ஒரு கல்லறையில் வைத்து அதை ஒரு கல்லால் அடைத்து வைத்ததோடல்லாமல் சில போர் வீரர்களை அக்கல்லறையை காவல் செய்யும்படி கட்டளை கொடுத்தார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன் இயேசுவின் மரணத்தில் ஒரு அற்புதம் நடைபெற்றது. அது அவர் உயிர்த்தெழுந்தார் என்பதே.

பரிமத்தேயுவின் சுவிசேஷத்தில் 27 ஆம் அதிகாரம் வசனம் 62 தொடக்கம் அவ் அதிகாரம் முடியும்வரை வாசிக்கும் போது பிரதான ஆசாரியரும் பரிசேயரும் பிலாத்துவிடத்தில் கூடி "அந்த எத்தன் 3 நாளைக்குப்பின் எழுந்திருப்பேன் என்று சொன்னது எங்களுக்கு ஞாபகம் இருக்கிறது.

ஆகையால் அவருடைய சீஷர்கள் இராத்திரியில் வந்து அவனைக் களவாய் கொண்டு போய் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தான் என்று ஜனங்களுக்கு சொல்லாத படிக்கும்... கல்லறையை பத்திரப்படுத்தும்படி, கட்டளை பெற்றனர்.

அன்பின் இயேசுவின் சரித்திரத்தை பார்க்கும் போது இயேசு யூதருக்கு ராஜாவாக பிறந்தும், பல அதிசயங்களை ஆற்றியும தன்னகத்தே அத்தனை சர்வ அதிகாரம் கொண்டவராக இருந்தும் அவர் வாழ்ந்த வாழ்க்கை ஒரு அடக்கமான வாழ்க்கை, சாதாரண மனிதனுடைய ஒரு மனநிலை.

அதாவது தன்னை அவர் அதிகம் பிரசித்திபடுத்தாத ஒரு வாழ்வு. இந்த நிலை இப்படி இருக்க சாதாரணமாக ஒருவர் மரணம் அடைந்தால் ஒருவரும் அவருடைய கல்லறைக்கு போர் வீரர்களை காவலுக்கு வைப்பதில்லை, அதுவும் 200 ஆண்டுகளுக்கு முன் இப்படியான ஒரு செயல் ஏன் நடைபெற்றது?

இயேசு தானே மக்களுக்கு போதித்த போது நான் உலகத்தின் மீட்பர் என்றார். நான் என் ஜனங்களின் பாவத்தை மன்னிப்பேன் என்றார்.

நான் கடவுளின் திருமைந்தன் என்று இப்படி பல போதனைகளை அதிகாரத்தோடு செய்தும் இந்த பிரதான ஆசாரியர்களும், பரிசேயரும் நம்பவில்லை.

ஆனால் இயேசுவானவர் நான் சிலுவையில் அறையப்பட்டு 3 ஆம் நாளில் உயிருடன் எழும்புவேன் என்பதை தங்கள் மனதில் வைத்திருந்தனர்.

அதேவேளை இந்த இயேசுவின் உயிர்த்தெழுதல் சம்பவத்தை சத்தியத்துக்கு அப்பால் திரித்துக் கூற தீய சக்திகளின் ஏவுதலால் பலர் முயன்றனர். ஆனால் அது முடியவில்லை.

இப்படியாக இயேசு பிரானின் உயிர்த்தெழுதல் என்பது கடவுள் தன் சித்தப்படி மனுவுருவில் பிறந்து மக்களின் பாவங்களை தன் தோளில் சுமந்து, இப்போது 3 ஆம் நாளில் உயிர்த்தெழும்பும் சம்பவம் என்பது மரணத்தை ஜெயித்த ஒரு செயல். பிசாசிற்கு படுதோல்வியை ஈட்டிக் கொடுத்த ஒரு செயல்—

இன்று இச் சம்பவம் நடைபெற்று 2000 ஆண்டுகள் கடந்து நிற்கும் நாம் பரிசுத்த வேதாகமத்தின் மூலம் மாத்திரம் அல்ல இன்றும் அவர் ஜீவிக்கிறார் என்பதற்கு நாமே சாட்சிகள்.

அன்று அவர் உயிர்த்தெழுந்த

### கிறிஸ்தவ நற்பிரசாதம்

வல்லமை நிறைந்த செய்தியை முதலில் தன்னை தன் கல்லறையை காத்த போர் வீரர்களுக்கு கொடுத்தார் என்பதை எவரும் மறுக்க முடியவில்லை.

அவருடைய எதிரிகளைக் கொண்டே தான் உண்மையாக உயிர்த்தெழுந்தார் என்பதை எவ்வித சந்தேகமும் இல்லாமல் எவ்வித ஆள்மாறாட்டமும் இல்லாமல் கிறிஸ்து நிரூபித்தார்.

அன்று போர் வீரர்களுக்கு மட்டுமல்ல பரிசேயர், ஆசாரியர் பிலாத்து மகதலேனா மரியாள், சீஷர்கள் இவர்கள் மாத்திரம் அல்ல இன்று சர்வ உலகமே அறியச் செய்தார்

தன் சீஷர்களுக்கு தன் உயிர்த்தெழுதலை அறிவிக்க அதிகாலையிலே அவர் வைக்கப்பட்ட கல்லறையை பார்க்கச் சென்ற மகதலேனா மரியாளுக்கு காட்சியளித்தார். தோமா எனும் தன் சீஷன் தன் உயிர்த்தெழுதலை சந்தேகிக்கிறான் என்றறிந்து யோவா 20:27 இன்படி அவனது சந்தேகத்தைப் போக்கிறார்.

இன்று இலங்கை நாட்டில் நடைபெற்ற கலவரங்கள், கொலைகள் போராட்டங்கள், பல துக்ககரமான சம்பவங்களை கடந்து வந்த நாம், இந்த இலங்கை நாட்டுக்காகவும் இயேசு பிரான் உயிர்த்தெழுந்தார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும்.

இப்படி உண்மைத் தெய்வம், சகல அதிகாரம் கொண்ட தெய்வம் மரணத்தை வென்ற தெய்வம் என்றால் இயேசுவின் கல்லறையை காத்த போர் வீரர்களே கண்டு பிரமித்து செத்தவர்கள் போலாயிருப்பார்களே யானால் ஏன் இந்த நாடு இன்று இதை விசுவாசிக்க முடியாது.

இன்று உயிர்த்த கிறிஸ்துவுக்கு நாமே சாட்சிகள். இந்த வார்த்தைகளை வாசிக்கும் நாமே சாட்சிகள். ஆம் எமது சொந்த வாழ்வில் உறங்கிக் கிடக்கும் எம் அக வாழ்வில் இயேசு உயிர்த்தெழும்ப வேண்டும். இந்த நல்ல செய்தியை நாடு கேட்கக் கூறுவோமாக.

(த)






விலை: 12 கொண்டது ரூ. 24
20 கொண்டது ரூ. 40

ஜோன் பிளேயர் • கோல்ட் லீஃப்

அரசாங்க எச்சரிக்கை:
புகைப்பிடிப்பதால், உங்கள் சுவாசப்பைகளுக்குத் தீங்கு விளையக்கூடும்

JWT CTC 20625

# 21ஆம் நூற்றாண்டில் மனிதர்களை விஞ்ஞான மனிதர் ஆட்டிவைப்பர்

## சில தீவுகள் நீரில் மூழ்க புதிய நிலப் பரப்புகள் தோன்றலாம் என யூகம்

இன்னும் பத்தாண்டுகளில் உலகம 21ஆம நூற்றாண்டில் அடி எடுத்து வைத்து விடும. மக்கள் மிகவும் எதிர்பார்த்துள்ள இந்த 21ஆம நூற்றாண்டு எப்படியானதாக இருக்கும என்று ஏற்கனவே பல யூகங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

ஐரோப்பா ஒன்றிணைக்கப் பட்டு தனியொரு தலைமையின் கீழ் கொண்டுவரப்படும என்பதும சிறு தீவுகளும கரையோரப் பகுதிகளும நீரில் மூழ்கும அதே சமயம பல புதிய நிலப்பரப்புகள் தோற்றம எய்தும என்பதும எதிர்காலம பற்றிய ஆருடங்களில் சிலவாகும.

2050 ஆண்டளவில் அமெரிக்காவில் காசு புழக்கம பெரும பாலும மறைந்து விடுமாம. கிறடிட் கார்டுகள் ஆகியவை பணத்துக்கு பதிலாக அமெரிக்காவில் பெருமளவில் புழக்கத்தில் இருக்கின்றன.

எதிர்காலத்தில் பணம வங்கிகளில் மட்டுமே இருக்கும. காசோலைகள், டோக்கன்கள், கிறடிட் கார்டுகள், கமபியூட்டர்கள் மூலம பணத்தை வரவிலும செலவிலும வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும. சாதாரணமாக ஒருவர் பத்து டாலர்கள் மட்டில் கையில் வைத்திருப்பாராம, எதிர்பாராத சிறு செலவுகளுக்கு மட்டும என்று!

அவ்வப்போது நாம வீட்டில் உள்ள பொருட்களை இடம மாற்றி வைக்கிறோம அல்லவா, ஒரு மாற்றத்துக்கு என்று! எதிர்காலத்தில் சிரமப்பட்டு நாற்காலிகளையும மேசைகளையும தூக்கி இடம மாற்ற வேண்டிய அவசியம இருக்காது.

கமபியூட்டர் பொருத்தப்பட்ட தளவாடங்களிடம நீங்கள் எங்கெங்கு இடம மாறி நிற்க வேண்டுமென்று சொன்னால் அவையே தானாக இயங்கி அப்படியே இடம மாறி நின்று கொள்ளும!

மனைவியுடன் ஊடல் என்றால், "கட்டிலே நகர்ந்து போ!" என்று சொல்லிவிட வேண்டியதுதான். கட்டிலும அப்படியே ஏற்கனவே காசோலைகள் நகர்ந்து விடும. அப்படியானால் அலாவுதின், "திறந்திடு" என்றதும குகைக்கற்பாறை திறந்து வழிவிட்டது உண்மையா?

எதிர்காலத்தில் புல்வெளியை செதுக்கி அழகுபடுத்தவென கமபியூட்டர் கட்டுப்பாட்டில் இயங்கும புல்செதுக்கும கருவி கண்டு பிடிக்கப்பட்டிருக்கும.

21ஆம நூற்றாண்டின் முக்கிய கண்டுபிடிப்பு மனித அறிவுக்கு ஒப்பான திறன் படைத்த இயந்திர மனிதனாகத்தான் இருக்குமாம! சுமார் ஐமபதாண்டுகளின் பின்னர் வளர்ந்த நாடுகளில் இவ்வகை இயந்திர மனிதர்கள் பெருவாரியாக இருப்பார்கள் என்று ஆருடம தெரிவிக்கப்படுகிறது.

அதன் பின்னர் கண்டு பிடிக்கப்படும இயந்திர மனிதர்கள் மனித அறிவைக் காட்டிலும அதிக அறிவுத் திறன் கொண்டவர்களாக இருப்பார்களாம.

இன்னொரு வகை இயந்திர மனிதர்களும எதிர்காலத்தில் கண்டு பிடிக்கப்படுவார்கள். இந்த இயந்திர மனிதர்களை தூர இடங்களில் வைத்துக் கொண்டு இருந்த இடத்தில் இருந்தபடியே அவர்களை கமபியூட்டர் மூலம ஆட்டுவிக்க முடியும.

அதாவது கொழும்பில் இருந்தபடியே யாழ்ப்பாணத்தில் உள்ள உங்கள் வேலையாள் இயந்திர மனிதர்களுக்கு உத்தரவிட்டு வேலை வாங்கக் கூடியதாக இருக்கும.

இவ்வகை இயந்திர மனிதர்களுக்கு உலகெங்கும நல்ல கிராக்கி இருக்குமாம. அலுவலகத்தில் இருந்தபடியே, "மாலையில் நான்கு பேருடன் வீட்டுக்கு வருவேன். தேநீர் ரெடி பண்ணி வை" என்று வீட்டிலிருக்கும இயந்திர மனிதனுக்கு உத்தரவிடும வசதி கிடைக்கும.

21ஆம நூற்றாண்டில் அமெரிக்காவில் சிறைச்சாலைகளுக்கு வேலை இருக்காதாம. ஏனெனில் குற்றவாளிகளைப் பிடித்து அவர்கள் உடலினுள் சில ரசாயன மூலகங்களை உட்புகுத்தி அல்லது எலக்ட்ரானிக் சாதனங்களை உடலினுள்ளே பொருத்தி விடுவது மூலம அவர்களை பொலீஸாரால் கண்காணிக்கக் கூடியதாக இருக்கும. குற்றவாளிகள் நாட்டின் எப்பகுதியில் இருக்கிறார்கள், என்ன செய்கிறார்கள் என்பதையும அறிந்து கொள்ள முடியுமாம.

எதிர்வரும நூற்றாண்டின் மிக முக்கிய விடயமதான் உலகம அதிக உஷ்ணமடைவது. உலகில் வெப்பம அதிகரிப்பதால் துருவங்களின் பனிப் பிரதேசங்கள் இளக ஆரமபிக்கும. கடலின் நீர் மட்டம சில அடிகள் வரை உயர்ந்து பல தீவுகளையும அமெரிக்கா போன்ற நாடுகளின் கரையோரப் பிரதேசங்களையும கபளீகரம செய்து விடும. அதே வேளை கனடாவின் வட துருவத்தை அண்டியுள்ள பிரதேசங்களை மூடியுள்ள பனிக்கட்டிகள் இளகிக் கரைய ஆரமபிப்பதால் அங்கு புது நிலப் பரப்புகள் தோன்றும.

அப்பகுதிகளில் உஷ்ணம அதிகரிக்குமாதலால் மக்கள் புதிய நிலப்பரப்புகளில் குடியேறத் தொடங்குவர். ஆனால் அமெரிக்கர்கள் தம நாட்டை விட்டு நீங்கி வேறு நாடுகளில் புகலிடம தேடத் தொடங்குவார்களாம!

ஜீன்களே ஒரு மனிதன் எவ்வாறான உருவ அமைப்பு மற்றும குண நலன்களைக் கொண்டவனாக அமைய வேண்டும என்பதைத் தீர்மானிக்கின்றன. இதே ஜீன்களே பரமபரை நோய்களை ஒருவரிடம அறிமுகப் படுத்துகின்றன.

ஒரு மனிதனின் உடல் மற்றும உள குறைபாடுகளுக்கும இந்த ஜீன்களே காரணம. இந்த ஜீன்களை ஆராய்ந்து அவற்றில் காணப்படும குறைபாடுகளை முதலிலேயே களைந்துவிட முடியுமானால் தந்தையிடம உள்ள சர்க்கரை நோய் மகனுக்கும வராமல் செய்துவிட முடியும.

இப்போது ஆராய்ச்சியில் இருந்து வரும இந்த விடயம 2010ஆம ஆண்டளவில் நடைமுறைக்கு வந்து விடுமாம. அதாவது தாய், தந்தையரின் ஜீன்களில் காணப்படும குறைபாடுகளைக் களைவதன் மூலம சௌபாக்கியம வாய்ந்த மகனையோ அன்றி மகளையோ உருவாக்குவது சாதாரண ஒரு நடைமுறையாக இருக்குமாம!

இப்படி செய்வதாலும, சுகாதார மற்றும மருத்துவத்துறை முன்னேற்றம காண்பதாலும மக்களின் சராசரி உயிர் வாழும காலம மிக அதிகரித்து விடும. முற்காலத்தைப் போலவே 90 அல்லது 95 வயது வரை வாழ்வது என்பது சாதாரணமாகி விடும.

இதனால் 60 அல்லது 70 வயதுக்காரர்கள் எல்லாம நடுத்தர வயதுக்காரர்களாகவே கருதப் படுவார்கள். 40 வயதெல்லாம இளைஞர் பருவமாகி விடும,

90 வயது அன்னையார் தன் 70 வயது மகனிடம, "ஏய் குழந்தை! தண்ணீர் கொஞ்சம எடுத்து வாயேன்" என்று கொஞ்சலாகக் கேட்டுக் கொள்வது என்பது சாதாரணமாகி விடும. 21ஆம நூற்றாண்டில்!

இன்றைய தனிக்குடித்தனமே சிறந்தது என்ற சிந்தனை வரண்டு போய், கூட்டுக் குடித்தனமே சிறந்தது என்ற மனப்பான்மை ஓங்கி விடும! ஒரு பெரிய வீட்டில் பல தலைமுறையினர் வாழ்வதென்பது சகஜமாகி விடும அடுத்த நூற்றாண்டில்!

வீதிகளில் வாகனங்கள் பெருமளவில் அதிகரித்து விடும. இதனால் வாகனங்கள் வாயு வேகத்தில் பறந்து செல்வது என்பதெல்லாம பழங்கதையாகி விடும. 25 அல்லது 30 கிலோ மீட்டர்

---

## சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்: திரு. ஆர்வி

[15—4—1990 தொடக்கம 21—4—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி பரணி கார்த்திகை 1ஆம கால்

மேஷம்:— பொருளாதாரம நன்றாக இருக்கும— கொடுக்கல் வாங்கல் திருப்தியாக நடைபெறும— மனதுக்கொவ்வாத சில காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கும— தூர தேசப் பிரயாணம ஒன்றுக்கு அடிபோடப்படும— காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும—

### சிங்கம்

மகம் பூரம உத்தரம 1ஆம கால்—

சிங்கம்:— முகவசீகரத்தால் காரியங்களை இலகுவில் முடித்துக் கொள்ளலாம— எதிர்பாராத பிரயாணங்கள் ஏற்படும சென்ற இடங்களில் எல்லாம செல்வாக்கும புகழும உண்டு, காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும— உறவினர் ஒருவரால் கவலைப்பட நேரிடும—

### தனு

மூலம பூராடம் உத்தராடம் 1ஆம் கால்—

தனு:— குடும்ப நலன் நன்றாக இருக்கும— மனைவி வழியால் மகிழ்ச்சியும மன நிறைவும ஏற்படும— நீண்ட நாட்களாகப் பிரிந்திருந்த நண்பர்கள், உறவினர்கள் நெருங்கி வருவார்கள் திட்டமிட்ட பிரயாணம தடைப்படும— பழைய முதலீடுகள் பலன் தரும— கலைஞர்கள் ஏமாற்றம அடைவார்கள்—

### ரிஷபம்

கார்த்திகை 2 3 4ஆம் கால்கள்— ரோகிணி — மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் கால்கள்—

ரிஷபம்:— தொழில் — வியாபாரம நன்றாக நடைபெறும இருந்து வந்த பிரச்சினைகள்

### கன்னி

உத்தரம 2ஆம 3ஆம 4ஆம் கால்கள்— அத்தம், சித்திரை 1ஆம கால்கள்—

கன்னி:— பொருளாதாரம நன்றாக இருக்கும பழைய கடன்கள் நிவர்த்தியாகும— புதிய வரு

### மகரம்

உத்தராடம் 2 3 4ஆம் கால்கள்— திருவோணம் — அவிட்டம 1 — 2ஆம் கால்கள்—

மகரம்:— திட்டமிட்ட காரியங்கள் சில நல்ல முறையில் நிறைவேறும— அயலவரின் உதவி

---

## சிந்தாமணி எண் சோதிடம்

NUMEROLOGY

[15—4—1990 தொடக்கம 21—4—1990 வரை உள்ள பலாபலன்கள்]

இருந்து வந்த பிரச்சினைகள் நீங்கி அமைதியேற்படும்— எதிர் பாராதபடி சிறு விபத்துக்கள் ஏற்படலாம்— ஆகையால் தூர பயணங்களையும் உயரான இடங்களில் ஏறுதல், குளம் குட்டைகளில் குளித்தல் போன்ற வற்றையும் தவிர்ப்பது நலம்

கள் நிவர்த்தியாகும்— புதிய வரு வாய் ஏற்பட இடமுண்டு வெளி நாட்டில் இருந்துவரும் கடிதம் மகிழ்ச்சியைக் கொடுக்கும்— கடல் கடந்த பிரயாணம் ஒன்றுக்குத் திட்டம் தீட்டப்படும்— வாரக் கடைசியில் தேகாரோக்கியம் பாதிக்கப்படும்

நிறைவேறும்— அயலவரின் உதவி யும், ஒத்தாசையும் கிடைக்கும் இரத்தக் காயம் ஒன்று ஏற்பட இடமுண்டு கடின வேலை செய் வதிலும் வாகனம் ஓட்டுவதிலும் ஜாக்கிரதையாக இருப்பது நல் லது ஜவுளி வியாபாரிகள் ஆதாய மடைவார்கள்—

## மிதுனம்

மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால் கள்— திருவாதிரை — புனர்பூசம் 1 2 3ஆம் கால்கள்—

மிதுனம்;— தேகாரோக்கியம் அபிவிருத்தியடையும்— மறைமுக மாக இருந்துவந்த நோய்கள் குணமடையும்— பிறருக்காக மன விருப்பம் இல்லாத காரியங்க ளில் ஈடுபட நேரிடலாம்— எதிர் பாராத பண வரவுக்கு இட முண்டு— பழைய கடன்கள் மீளும் பிள்ளைகளால் கவலைப்பட நேரிடும்—

## துலாம்

சித்திரை 3 4ஆம் கால்கள்— சுவாதி விசாகம் 1 2 3 ஆம் கால்கள்—

துலாம்;— உத்தியோகத்தர்க ளுக்கு உத்தியோக உயர்வு சம பள உயர்வு போன்றவைகள் கிடைக்கும் மேலதிகாரியின் அன் பும் ஆதரவும் உண்டு— பிள்ளை களால் மகிழ்ச்சியும் புகழும் ஏற்படும்— காதல் விவகாரங்க ளில் பிரச்சினைகள் ஏற்பட்டா லும் மனக் கவலைக்கு இட மில்லை—

## கும்பம்

அவிட்டம் 3 4 ஆம் கால்கள்— சதயம் — பூரட்டாதி 1 2 3 ஆம் கால்கள்—

கும்பம்;— தொழில்துறையில் முன்னேற்றம் காணப்படும் எதிர் பார்ப்புவெல்லாம் நல்ல திருப் திகரமாக நிறைவேறும்— பலரு டைய உதவியும் ஒத்தாசையும் கிடைக்கும்— வெளியிடத்தில் இருந்து கிடைக்கும் செய்தி மன அதிர்ச்சியைத் தரும்— இரத்தக் காயங்கள் ஏற்பட இடமுண்டு

## கடகம்

புனர்பூசம் 4ஆம் கால்— பூசம் ஆயிலியம்—

கடகம்;— பணப் புழக்கம் நன்றாக இருக்கும்— இல்லத்தில் இனசன கொண்டாட்டங்களும் விருந்துபசாரங்களும் இடம் பெறும்— புதிய ஆடை ஆபர ணங்கள் சேரும்— கோர்ட் வழக் குகள் வெற்றியாக முடியும்— சிந் தனா சக்தியால் உழைப்பவர்கள் வெற்றியடைவார்கள்—

## விருச்சிகம்

விசாகம் 4ஆம் கால்— அனுஷம் கேட்டை—

விருச்சிகம்;— அலுவலகத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் குறையும்— நண்பர்கள் உதவியாக இருப்பார்கள்— வீடு, நிலம் போன்றவற்றால் செலவுகள் அதிகரிக்கும்— கடிதப் போக்கு வரத்து அனுகூலமாக அமையும் செல்லப் பிராணிகளால் கவலை யேற்படும்— தாய்வழியில் ஒரு துக்க சம்பவம் நடைபெறும்—

## மீனம்

பூரட்டாதி 4 ஆம் கால்— உத்தி ரட்டாதி — ரேவதி—

மீனம்;— குடும்பத்தில் ஒற் றுமையும் நிம்மதியும் ஏற்ப டும் மனைவி முங்கள காரியங்கள் ளில் ஈடுபடுவாள்— சூது விளை யாட்டு முதலிய போட்டிகளில் வெற்றியும் இலாபமும் கிடைக் கும்— வாகன வியாபாரிகள் அதிக ஆதாயம் அடைவார்கள் கடல்கடந்த பிரயாணம் ஒன் றுக்கு இடமுண்டு—

[15—4—1990 தொடக்கம் 21—4—1990 வரை உள்ள பலாபலன்கள்]

## 1

1,10,19,28 ஆம் திகதி களில் பிறந்தவர்களுக்கு —

காரியசித்தி, பலவித பொருட் பேறு, புத்திரர்களால் நன்மை, கொடுக்கல், வாங்கலில் பிரச்சி னைகள் உருவாகுதல், அயலவர் பகை, ஆயுத பயம்—

அதிஷ்ட நாட்கள்— திங்கள், வெள்ளி—

## 2

2, 11 20 29 ஆம் திகதி களில் பிறந்தவர்களுக்கு —

இல்லச் சிறப்பு, உத்தியோக உயர்ச்சி, சத்துரு வெற்றி, தேக மெலிவு, நித்திரையின்மை, பிர யாணக் கஷ்டம், ஸ்திரீ மூலமான நன்மை, போசன சுகம்—

அதிஷ்ட நாட்கள்— திங்கள், வியாழன்

## 3

3, 12, 21, 30 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

பிரயாசை மிகுதி, வியாபாரத் தில் இலாபம், அக்கினி, ஆயுத பயம், இரத்தப் பெருக்கு, நண் பர்கள் உதவி கடிதப் போக்கு வரத்து அனுகூலம்—

அதிஷ்ட நாட்கள்— ஞாயிறு, புதன்—

## 4

4, 13, 22, 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

வாக்கு வசீகரம், காரிய சித்தி, நிலைப்பிரிவு, இனசன விரோதம், போசன சுகக்குறைவு, வழக்குக ளில் வெற்றி வீட்டுப் பிரச்சினை தேகாரோக்கியக் குறைவு—

அதிஷ்ட நாட்கள்— திங்கள், வியாழன், வெள்ளி

## 5

5, 14, 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

மனமகிழ்ச்சி, சத்துருஜயம், நன்மதிப்பு, இனசன உதவி, வாக னப் பேறு, சரீர சுகக்குறைவு, பயனற்ற செய்கை, அதிக செலவு, அதிக யோசனை—

அதிஷ்ட நாட்கள்— புதன், வெள்ளி—

## 6

6, 15, 24 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

பிரயாசை மிகுதி, செய்காரிய ங்களில் தடங்கல், ஆரோக்கியக் குறைவு, வைத்தியச் செலவு, கள த்திர சுகம், புத்திரரால் மகிழ்ச்சி, போசன சுகம் நன்று—

அதிஷ்ட நாட்கள்— புதன், சனி.

## 7

7, 16, 25 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

புதிய ஸ்தானப்பேறு, சத்துரு ஜயம், பணவரவு, சிநேகிதரால் தொல்லை, சயன போசனச் சுகம், குறைவு, குடும்பப் பிரச்சினை தீர் தல், நன்மதிப்பு, பிரயாணம்—

அதிஷ்ட நாட்கள்— வியாழன், வெள்ளி—

## 8

8, 17, 26 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

அதிகார விருத்தி, நடைக் நஷ்டம், கோபமிகுதி, வாக்குக் கலகம், மனயோசனை அதிகம் எதிர்பாராத பிரயாணம், போசன நிறைவு, புத்திரரால் மகிழ்ச்சி

அதிஷ்ட நாட்கள்— வியாழன், சனி—

## 9

9, 18, 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு—

வாக்கு வன்மை, புகழ், இலட் சுமீகரம் கொடுக்கல் வாங்கலில் திருப்தி, இரத்தப் பெருக்கு, உறவினர் ஒருவரால் தொல்லை. வீண் கவலை—

அதிஷ்ட நாட்கள்— ஞாயிறு, சனி—

25 அல்லது 30 கிலோ மீட்டர் வேகத்தில்தான் நகர வீதிகளில் வாகனங்கள் செல்லக் கூடிய தாக இருக்குமாம்.

ஆனால் வீதி விபத்துகள் பெரும்பாலும் குறைந்து விடு மாம் பெரும் நகரங்களில். ஏனெனில் கார்கள் கம்பியூட்டர் களைப் பொருத்திக் கொண்டிருக் கும். வேகமாக சென்றால் எச்ச ரிக்கை விடுக்கும். பின்னால் வரும் காரிடம். உனது வேகம் அதிகம். கொஞ்சம் கட்டுப் படுக்கிக் கொள் என அட்வைஸ் செய்யுமாம் முன்னால் செல்லும் கார்.

எதிர்வரும் நூற்றாண்டில் நைட்ரைடர் கார்கள் விற்பனை க்கு வந்து விடும்! இந்தக் கார் களுக்கு சாரதிகள் தேவைப்பட மாட்டார்கள். ஆட்டோமாட்டிக் காக இக்கார்கள் இயங்குமாம்!]

வீட்டுத் தோட்டங்களில் பூச்செடிகளை கண்ணும் கருத்து மாக வளர்க்க வேண்டிய அவசி யம் இருக்காத 21ஆம் நூற் றாண்டில். ஏனெனில் செயற்கை பூச்செடிகள் கடைகளில் விற் பனைக்கு இருக்கும்.

இவற்றை வாங்கி வீடுகளில் வைத்து விட்டால் உங்களுக்குத் தேவையான நேரத்தில் இவற் றின் தோற்றத்தையும் வர்ணத் தையும் மாற்றி விடலாம்.

ரசனைக்கும் பாஷனுக்கும் ஏற்ற விதத்தில் இந்த செயற் கைத் தாவரங்களை மாற்றி அமைத்துக் கொள்ளக் கூடிய தாக இருக்கும் இல்லத்தரசி களுக்கு!

(ம—032)

# வசந்தகாலப் பொழுதிலே வந்துதித்த சித்திரையாள்



பழையன கழிதலும் புதியன புகுதலும் மனித வாழ்க்கையில் இயல்பானவையாகும்— கடந்துபோன கசப்பான அனுபவங்கள் புதுவருடத்தில் உண்டாகாமல் நல்லவையே நடக்க வேண்டுமென்று மனித மனங்கள் விரும்புவதும இயல்பே! சித்திரையில் இயற்கைத்

## ஸிங்கார நங்கையே



— அகிலா குணராஜா —

சித்திரையே சிஙகார நித்திலமே
சித்திதனை சிரமேந்தி வந்தனையோ
இத்தரையில் இனிதன்னும இஙகிதத்தை
இலவசமாய் தருவதற்கு முயல்வாயோ
சத்தியத்தால் உருவாகும சாமியத்தை
சித்திரையே எமக்களித்து மகிழ்வாயோ
உத்தமத்தை உணர்வுகளை மதிப்பளிக்கும
உதயத்தை வழங்குதற்கு மறுப்பாயோ?

★

தத்துவஙகள் பேசிநிதம தப்பிதமாய்
தந்திரமாய் வாழ்பவரை வெறுப்பாயோ
புத்திதனை பாவியாமல் பித்தரைப்போல்
புதிராக இருப்பவரை புரிவாயோ
எத்திக்கும இனிமைக்கு தடைக்கல்லாம
எத்தர்களை எதிர்ப்பதற்கு துணிவாயோ
நித்தமுமே நல்வாழ்த்து நல்குதற்கு
நஙகைநீ நிறைவாக நகைப்பாயோ?

## பழையன கழித்து புதியன புகுத்தி அமைதித் தென்றலை வீசிடட்டும்

தாய் பொலிவுடன் பூரிப்புடன் மிளிர்வாள்— நில நல்லாள் பல வர்ண மலர்களால் ஆடை போர்க்கப்பட்டு எழிலுடன் காட்சி தருவாள்— அவளைப் பார்க்கும மனித மனஙகள் ரம்மியத்தில் மயஙகி இதயத்தில் இன்ப சுகானுபவம காணும மெல்லென வந்து மெய்யினைத் தீண்டும இளம தென்றல் தரும இதம!

வசந்தத்தின் வனப்பு என்பன பூலோகத்தில் சொர்க்கத்தைக் கொண்டு வந்த நிறத்துவன?

லாம—

தமிழர் பெருவிழாக்கள் சித்திரையில் சீருடனும சிறப்புடனும இந்திர விழாக்களாக நடந்ததை இலக்கியக் காட்சிகளில் புலவர்கள் சொல்லோவியஙகளாக்கி மகிழ்ந்தனர்—

பண்டைய நாகரீகம் மலர்ந்த மெசப்பத்தேமியாவில் புத்தாண்டு விழாவினை "அக்கித்த" விழா என்பர்— வயல்களுக்கு மத்தியிலே சிறப்பாக தெற்கென நிர்மாணிக்கப்பட்ட கோயிலிலே இவ்

— காவேரி யோகநாதன் —

இத்தகைய இயற்கை இன்பம தரும சித்திரைப் பொன்னாளை புது வருட மடந்தையாகத் தமிழர்கள் வரித்துக் கொண்டதில் வியப்பு என்ன? சித்திரை வெறும புத்தாண்டாக மட்டுமன்றி முத்தமிழ் விழாக் காணும காலமாகவும் விளஙகியதை செந்தமிழ்க் காவியஙகளில் பரக்கக் காண

விழாக் கொண்டாடப்பட்டது—

அவர்களுடைய நிஸன்மாத [மார்ச் ஏப்ரல்] முதல் திகதியிலேயே புத்தாண்டு விழாக் கொண்டாடப்பட்டது—

கால மாற்றத்துடனும வனப் பெருக்கத்துடனும புத்தாண்டு விழா தொடர்புடையதாய்

இருந்தது என்பதை இத்தகவல் உறுதிப்படுத்துகின்றது—

வட பிரதேசத்தில் "பைசாகி" என்றும கேரளத்தில் விஷு

பூஞ்சோலைகள் பசும புத்தாடை பூண்டிருக்கும— புல்லும பூண்டும செடியும கொடியும மரமும் விருட்சமும புத்



என்றும இதைக் கொண்டாடுகின்றார்கள்— சித்திரை மாதத்தில் வசந்த காலம எனும இளவேனிற் காலம தொடஙகுகின்றது— மாந்துளிர்கள் செழித்தும வெப்பம பூ பூத்துக் குலுஙகும் காலமிது!

மனித வாழ்க்கையில் இனிப்பும கசப்பும கலந்தே இடம பெறுகின்றன— அதாவது

தளிர் பூண்டு புது வாழ்வுக்குத் தயாராகும காலமிது— உழுதுண்டு வாழ்ந்த மக்கள் தஙகள் உழைப்பின் பலனைக் களஞ்சியத்தில் சேர்க்கும காலமும இதுதான்!

இயற்கைக்கே புத்துணர்வை புத்துயர்வை வழஙகும் வசந்த காலம தனது வாழ்வுக்கு வசந்தம தரும என்ற நமபிக்கையில்

வீட்டுக் களஞ்சியத்தில் நெல் இயற்கையில் உன்னதமான வசந்த காலத்தில் வாழ்வு இவை போதாவோ? சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தைத் திருவாதிரையில் முடித்தருளினார்— திருஞானசமபந்தர் பெருமான் திருப்பதிகம அருளிச் செய்யத் தொடஙகிய நாளும சித்திரைத் திருவாதிரை நாளாகும—

அப்பர் பெருமான் சிவஞான வடிவாக இறைவன் திருவடி நிழல் அடைந்ததும சித்திரைச் சதய நாளாகும— எனவே இம மாதத்தை சிறப்பு பெருக்கும சித்திரை எனக் கொள்ளலாம—

தமிழ் வருடப் பிறப்பு ஒவ்வொரு வருடமும ஆஙகில மாதம ஏப்ரல் 13ஆம திகதி அல்லது 14ஆம திகதி வரும பண்டிகை! புது வருடத்தின் முதல் மாதமான சித்திரையன்று தான் பிறக்கின்றது—

"சுக்கிலப்" பெண்ணாள் போக கடந்த வெள்ளிக்கிழமை பின்னிரவு நாடி 47 விநாடி 42 (மணி 1,11) இல் அபர பக்ஷ சதுர்த்தி திதியில் அனுஷ நக்ஷத்திரத்தின் 3ஆம பாதத்தில் வியதீபாதநாம யோகத்தில் பவக் கரணத்தில் மகர லக்கினத்தில் மீன நவாமசத்தில் செவ்வாய் கால வோரையில் செவ்வாய் சூக்கும வோரையில் ராசதகுண வேளையில் நக்ஷத்திர பக்ஷியாகிய கோழிசாவத் தொழிலும சூக்கும பக்ஷியில் தொழில் செய்யுங காலத்தில் பிரமோதூத வருஷம பிறந்தது—

அன்று இரவு 9–10 முதல் 5–10 வரை விஷு புண்ணிய காலமாகும்—

புத்தாண்டில் வைரம முத்து நீலம என்பவற்றாலாகிய ஆபரணம அணிந்து சுகந்த சந்தனம பூசி நறுமலர் சூடி தத்தம குலதெய்வ வழிபாடு செய்து இயன்ற தான தருமஙகளியற்றி குரு பெற்றோர் முதலிய பெரியோரை வணஙகி அவர்களின் ஆசி பெற்று உற்றார் நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உண்டிகளுடன் பொரி கடுகு எள் புளி நெல்லிக்கனி சேர்த்த

# கடவுளை ஏமாற்ற நினைக்கலாமா?

## மனிதனுக்கு ஏமாற்றமே கிடைக்கும்

சமுதாய தர்மத்தைப் பாது காக்கு சட்டம பயமுறுத்தி சட்டத்தின் மூலம தொண்டு ட்டுத்தனமும தில்லுமுல்லும என்னிடம ஒருவர் வேலை

# மனிதனுக்கு ஏமாற்றமே கிடைக்கும

சமுதாய தர்மத்தைப் பாதுகாக்க சட்டம பயமுறுத்துகிறது — தர்மம் கெஞ்சுகிறது—

கெஞ்சும போது பணியாதவன் பயமுறுத்தினால் பணிந்து விடுகிறான்—

இந்த அவசரச் சட்டத்தில் எனக்கொரு மகிழ்ச்சி!

நமது வேதங்களும் சாஸ்திரங்களும எவ்வளவு போதித்தன? அவை யாருக்குப் புரிந்தது?

"அரசனை ஏமாற்றுவது தெய்வத்தை ஏமாற்றுவது போல்" என்கிறது சாஸ்திரம!

நம்மில் பலரோ அரசனை மட்டும ஏமாற்றவில்லை— தெய்வத்தையே நேரடியாக ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம—

"புத்தி இது மகனே" என்று போதிக்கும போது பலருக்கு சிரிப்பு வரும— ஆனால் "சக்தி இது மகனே" என்று காட்டும போதுதான் புத்திவரும—

"இது வழியல்ல" என்று போர்டு போட்டிருக்கும இந்தியன் அந்த வழியாகப் போவான்!

"இங்கே நிறுத்தாதே" என்று எழுதியிருக்கும— அங்கே நிறுத்துவான்—

"பிறர் பொருளைத் திருடாதே" என்று உபன்யாசகர் பேசிக் கொண்டிருப்பார்— அங்கேயும இந்தியன் "பிக்பாக்கட்" அடிப்பான்!

"சர்க்கரை இல்லை" என்று கடைக்காரன் போர்டு போட்டிருப்பான் தனியாகப் போய்க் கேட்டால் ஐந்து ரூபாய் கூடுதலாக வாங்கிக் கொண்டு கொடுப்பான்!

ஒழுக்கத்தில் தனி மனித ஒழுக்கம சமுதாய ஒழுக்கம என்று இரண்டு வகை உண்டு!

"தனி மனித ஒழுக்கத்தைச் சட்டத்தின் மூலம கொண்டு வர முடியாது" என்று நான் எழுதியிருக்கிறேன்— அதுவும முடியும போல் இன்று தோன்றுகிறது—

தனி மனித தர்மத்தை மொத்தமாகச் சேர்க்கும போதுதான் சமுதாய தர்மம் உண்டாகிறது—

இந்திய சமுதாயத்திற்கு நடுநிலை உணர்வு கிடையாது—

போனால் "எல்லாமே எனக்கு வேண்டும" என்று ஓடுகிறது— இல்லையென்றால் "ஒரு கோவணம கூட எனக்கு வேண்டாம என்று" குப்புறப் படுத்துக் கொள்கிறது—

இரண்டையும இணைத்துச் சமப்படுத்தினால் தான் சராசரி சமுதாயம உருவாகும—

— தர்மம், இதைத்தான் சாதிக்க முயன்றது!

தர்மோபதேசம தோன்றிப் பல்லாயிரம ஆண்டுகள் ஓடிவிட்டன—

அதைப் பலர் நமபவில்லை— ஒப்புக் கொள்ளவில்லை— சிலரோ கேலியும செய்தார்கள்—

தர்மத்தைக் கைவிட்ட மனிதர்களை இப்போது சட்டம் பிடித்துக் கொண்டது!

சட்டம பிடித்த பிறகுதான் தர்மத்தைப் பற்றிய புத்தி வருகிறது—

எந்த ஊருக்குப் போகிறோம என்பது குதிரைக்குத் தெரிந்து விட்டால் சாட்டையும லாகனும தேவையில்லைதான்! ஆனால் நமது குதிரைகளோ காட்டுக் குதிரைகள்!

"மயிலே மயிலே" என்றால் இறகுபோடாது இரண்டு அடி அடித்தால் இறகு உதிருகிறது—

இருநூறு ஆண்டுகளுக்கு முந்தி வரையில் இந்திய சமுதாயத்தில் இந்த அளவுக்கு திருட்டுத்தனமும தில்லுமுல்லும இருந்ததில்லை— ஓரளவுக்கு இருந்தது— அதையே வெள்ளைக்காரன் அதிகம என்று நினைத்தான்—

அவனது ஆதிக்கத்தின் கீழ் இருந்த காலனிகளில் இந்தி



யாவுக்கு மட்டும சில விஷேச சட்டங்களைச் செய்தான்—

"குற்றப் பரமபரைச் சட்டம" ஜாமீன் வழக்குச் சட்டம "கடன் வாங்கியவன் திருப்பிக் கொடுக்கவில்லை என்றால் "கைது செய்யும சட்டம" — இவையெல்லாம இந்தியாவுக்கு வெள்ளைக்காரன் அளித்த விசேஷப் பரிசுகள்!

காரணம உலகத்திலேயே இந்தியாதான் நாணயம கெட்டவன் என்று அவன் கருதினான்—

அன்றைக்கே அப்படியென்றால் இன்றைக்கு எப்படி?

என்னிடம் ஒருவர் வேலை பார்த்தார்—

அவர் தமக்கு ஐந்நூறு கிடைக்கிறது என்றால் எனக்கு ஐயாயிரம ரூபாய் நஷ்டம ஏற்படுத்த தயங்க மாட்டார்!

எந்தத் தர்மத்தைப் போதித்து அவரைத் திருத்துவது?

சட்டத்தால் தர்மத்துக்கு ஒரு லாபம உண்டு!

அதாவது அதுதான் தர்மத்தையே நினைவுபடுத்துகிறது—

இப்போது பழைய தர்மோபதேசங்களை மீண்டும பேச ஆரமபியுங்கள்— கடைக்காரர்களெல்லாம கைகட்டிக் கொண்டு கேட்பார்கள்—

அதையும சிறைச்சாலையிலே போய்ப் பேசுங்கள்— "ஓம முருகா... ஸ்ரீ கிருஷ்ணா" என்று உரத்த குரலில் உச்சரிப்பார்கள்—

இன்றைய சட்டம அரசியல்வாதிகளுக்கு எப்படித் தோன்றுகிறதோ எனக்குத் தெரியாது!

ஆன்மீகத்துக்கு இது பெருத்த லாபம!

தூக்கு மேடைக்குப் போகும போதுதானே கொலை செய்யக் கூடாது என்ற தர்மம் கொலைகாரனுக்குப் புரிகிறது—

தர்மம வலுவிழந்த இடத்தில் சட்டம அதற்குத் துணை செய்கிறது—

நான் இன்றைய சட்டத்தை வரவேற்கிறேன்— இந்தியாவின் சமுதாய தர்மத்தைக் காப்பதற்காக!

[ம—024]

— கவியரசர் கண்ணதாசன் —

காலமிது!

மனித வாழ்க்கையில் இனிப்பும கசப்பும கலந்தே இடம பெறுகின்றன— அதாவது வாழ்க்கையில் இன்பமும துன்பமும மாறி மாறி அனுபவிக்க வேண்டியிருக்கிறது— இந்த உண்மையை உணர்த்துவது போல புதுவருட தின சமையலில் இனிப்பு காரம உப்பு புளிப்பு கசப்பு துவர்ப்பு என அறுசுவையும கலந்தே மக்கள் உண்பர்!

வருடப் பிறப்புத் தினத்தன்று வீட்டு முற்றத்தை மெழுகிக் கோலம போட்டு வாயிற்படிக்கு மஞ்சள் குங்குமம் பூசி மாவிலைத் தோரணம கட்டி தூப்புரவாக வைத்துக் கொள்வர்—

இவ்வாறு செய்வதால் வாயிற்படியிலே லட்சுமி வாசம செய்கின்றாள் என நமபுகின்றனர்— ஆரியரும திராவிடரும காலந்தொட்டு வருடப் பிறப்பை சித்திரையில் தான் கொண்டாடினார்கள்—

இயற்கையோடு இயைந்து வாழும இந்துக்கள் சித்திரையைப் புத்தாண்டின் முதற் திங்களாய்த் தேர்ந்தெடுத்ததில் அர்த்தங்கள் நிறைய இருக்கின்றன— வாழ்க்கைக்கு நமபிக்கையூட்டும காலத்தை இயற்கையாகவே சித்திரைப் பெண்தான் தருகின்றாள்—

பருவ காலங்களில் இனிமையானது வசந்தம எனும இளவேனில் இன்ப சுகம் சித்திரைப் பெண்ணுக்கே உரியது— மாரி மழைத் தாக்கும் கோடை வெயில் நலிவு முன்பனிக் குளிர் பின்பனி பாதிப்பு இவற்றுக்கும மத்தியில் மனித வாழ்வுக்குக் கிடைத்த காலம இது!

இலையுதிர் கால இழப்புகள் இளவேனில் காலத்தில்தான் மறைகின்றன— இயற்கை அன்னையே புதுப் பொலிவும புது வாழ்வும் பெறும காலமிது—

இயற்கைக்கே புத்துணர்வை புத்துயர்வை வழங்கும் வசந்த காலம தனது வாழ்வுக்கு வசந்தம தரும என்ற நமபிக்கையில் அந்தக் காலத்தை வருடப் பிறப்பாக கொண்டான் தமிழன்!

ஆசி பெற்று உற்றார் நண்பர்களுடன் அளவளாவி அறுசுவை உண்டிகளுடன் பொரி கடுகு எள் புளி நெல்லிக்கனி சேர்த்தருந்தி தாம பூலந் தரித்து கண்ணாடியில் முக தரிசனஞ் செய்து புதிய

(24ஆம பக்கம பார்க்க)

## சித்திரைச் செல்வி புன்னகை பூத்தாள்



— க. ரெட்ணையா —

முத்தமிழ்க் கன்னி சித்திரைச் செல்வி
முற்றத்தில் வந்தாள் முத்தங்கள் தந்தாள்
சித்திரை மலர்கள் மெத்தைதான் போட்டு
சிங்காரப் பெண்ணாள்தனை வரவேற்க
இத்தரைதனில் இனிய மகளும
இனிதாய் வந்தாள் இன்பங்கள் தந்தாள்
புத்தம புதிய ஆடையணிந்து
பூவையும வந்தாள் புவி வளம சிறக்க

★

மண்ணிலே மாந்தர் மகிழ்வுற்று வாழ
மாமன்னன் பாரி மகளென வந்தாள்
கண்ணிலே பரிவெனும கருணையை வளர்த்து
காசினிதன்னில் பூமகள் வந்தாள்
எண்ணில்லா எழிலவள் மேனியில் ஜொலிக்க
இடையது அசைந்து கால் நடைதனில் வந்தாள்
புண்ணியவதியவள் தனை வரவேற்க
புலரும காலையில் எதிர்பார்த்து நின்றேன்

★

தென்றல் வந்தவள் வரும சேதி சொல்ல
தோரணம கட்டி மாக்கோலமிட்டு
என்னேரம வருவாள் இங்கவளென்று
எதிர்பார்த்து நின்றேன் முகமது வேர்க்க
தென்றலைத் தூதுவிட்ட நற்கன்னி
தேடியே வந்தாள் பாடினேன் பாக்கள்
புன்னகை பூத்தாள் என்னையே மறந்தேன் — தன்
புகழ் பாடச் சொன்னாள் சித்திரைச் செல்வி.

# மாண்புமிகு ரமழான் நோன்பு மனிதரை புனிதராக்கும்

## ஏழையின் பசியை உணரச் செய்து ஏற்றமிகு வழியைக் காட்டுகிறது

Hண்ணியம பூத்துக் குலுங்கும கண்ணியமான ரமழான் மாதம நம்மை வந்தடைந்துவிட்டது இத னால் முஸ்லிம்களின் உள்ளங்களிலெல்லாம ஒருவித இன்ப உணர்வு தோன்றியுள்ளது- "விசுவாசிகளே நீங்கள் இறை புக்தர்களாகுவதற்காக உங்களுக்கு முன் வாழ்ந்தவர்களுக்கு விதியாக்கப்பட்டது போல் உங்களுக்கும நோன்பு விதியாக்கப்பட்டுள்ளது-

எனவே, உங்களில் யாராவது ரமழான் மாதத்தை அடைந்தால் நோன்பு நோற்கவும என்று திருமறையின் மூலமான அல்லாஹ்-த்தஆலாவின் கட்டளை இடுகிறான். இந்த கட்டளையை ஏற்று ஒழுகிய மக்களுக்கே இது இனிய மாதம ஆகும-

ஏனெனில், நோன்பு நோற்ப வர்களுக்கே அதன் பிரதிபலனை அனுபவிக்க முடியும-

நோன்பு நோற்பது இரு வகையான நன்மைகளை பெறுவதற்கு வித்திடுகின்றது. ஒன்று தனி மனிதனையும நன்மைகள் மற்றையது சமூகமடையும நன்மைகள் நோன்புலகில் பிறந்த முஸ்லிமகள் அனைவருக்கும (சில விடயங்களுக்காக மட்டும தவிர கட்டாயமாக்கப்பட்டுள்ளது

நோன்பு நோற்பவர்கள் பசித்திருக்கும வேளை அதிகமாகையால் உடலுறுப்புகளில் பலவிதமான மாற்றங்கள் ஏற்படுகின்றன- பதினொரு மாதங்களும் உணவு உண்பதால் ஓயாது இயங்கிக் கொண்டிருந்த வயிறு ஓய்வு பெறுகிறது-

இதனால் இரத்த அழுக்கம், இருதயக் கோளாறு போன்ற இன்னோரன்ன நோய்கள் குணமடைவதாக மருத்துவர்களே ஏற்றுக் கொள்கின்றனர்-

புகைத்தல் நோன்பு நோற்பவர்களால் நிறுத்தி வைக்கப்படுகிறது- புகைத்தலால் ஏற்படும கொடிய விளைவுகளிலிருந்து அவர்களால் மீட்சி பெற முடிகிறது- அது மட்டுமன்றி புலர் புகைப்பதை அடியோடு விட்டு விடவும நோன்பு வழிகோலுகிறது

பட்டினி கிடத்தலே நோன்பு என்று எண்ணுதல் அறிவீனமாகும- ஏனெனில் உலக இச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதன் முதற்படியாக பட்டினி கிடத்தல் உள்ளது- இதனாற்றான் நோன்பு பட்டினியிருத்தலை முக்கியமாகக் கொண்டுள்ளது-

நோன்பிருக்கும மனிதன் அல்லாஹ்வுக்காகத் தனது இச்சைகளையெல்லாம அடக்கிக் கொள்கிறான், இதன் மூலம பசி, தாகம அவனுக்குப் பயிற்றப்படுகின்றன- வாழ்வில் வறுமை போன்ற வீழ்ச்சிகள் ஏற்படும போது அதை ஜீரணிக்கும வலிமை உண்டாகிறது-

அல்லாஹ்வுக்காகத் தன் பொருட்களையே ஒதுக்கி வைக்கிறான்- இத்தகைய நோன்பாளி பிறர் பொருளிற்கு எந்த வகையிலும ஆசைப்பட மாட்டான்; தீய நெறியைத் துளியும ஒழுக மாட்டான்- இதனால் அல்லாஹ்வின் உவப்பைப் பெறுகிறான்-

இதனால்தான் அண்ணல் நபி (ஸல்) அவர்களும "தீய பேச்சையும தீச் செயலையும விடாதவர் பசித்திருப்பதிலும தாகித்திருப்பதிலும எதுவித தேவையும அல்லாஹ்வுக்கில்லை என ஆணித்தரமாகக் கூறியுள்ளார்கள். இதிலிருந்து தீய கருமங்களை முற்றாகத் தடுப்பதும நோன்பின் ஒரு நோக்கமாகும என்பதை உணர முடிகிறது-

தனி மனிதன் நோன்பால் அடையும நன்மைகளைப் போலவே நோன்பினால் சமூக ரீதியாகவும நன்மைகள் ஏற்படுகின்றன- செல்வந்தன் ஏழை, முதலாய எந்த வேறுபாடுமின்றி முஸ்லிமகள் யாவரும நோன்பு நோற்றேயாக வேண்டுமாயிருப்பதால் ஏழைகளின் பசியை பணக்காரரும உணர்ந்து அனுபவிக்கின்றனர்- இதனால் அவர்களுக்காக இரங்கி உதவி புரிகின்றனர்-

கூட்டுத் தொழுகைகள் அதிகமாக சந்திக்கும வாய்ப்பில்லாத அனைவரும ஒன்று சேருகின்றனர்- தத்தமது கஷ்ட நஷ்டங்களைப் பிறரிடம சொல்லுகின்றனர்-

இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்கின்றனர்- பொதுப்படையாக நோக்குமபோது நோன்பு தரும நன்மைகள் சமூக ரீதியாகவோ தனி மனித ரீதியாகவோ அளப்பரியன-

இத்தனைக்கும மணிமகுடம வைத்தாற்போல் அல்லாஹ் அல்குர்ஆனில், "நோன்பு எனக்காகச் செய்யப்படும வணக்கம அதற்கு நானே கூலி கொடுப்பேன்" என்று உரைக்கிறான்-

எனவே, இத்தகு மாண்புகள் மிகுந்த நோன்பை நோற்பவர்கள் நமது சமூகத்தில் எத்தனை பேர் என்பதால் மிகச் சொற்பம என்பதே வேதனைக்குரிய விடயமாகும. உடல் வலு மற்றும ஏனைய வளங்கள் யாவற்றையும நமக்களித்து போஷித்துப் பாதுகாக்கும அல்லாஹ்வை வணங்குவதில் இத்துணை தயக்கம காட்டுதலாகாது-

"இளமையிலிருந்தே நோன்பு பிடிப்பவர்களால்தான் எல்லா நோன்புகளையும நோற்க முடியும, எங்களால் ஒரு சில நோன்புகளைத்தான் நோற்க முடியும" என்று தப்ப முயலும ஒருசாராரும எம மிடையே உள்ளனர்-

தீராத நோயுள்ளவர்களைத் தவிர மிக முக்கிய காரணங்களுக்காக நோன்பை விடுபவர்கள் கூட விட்ட நோன்பை களாச் செய்தல் வேண்டும- இஸ்லாத்தின் கட்டளைகள இப்படியிருக்குமபோது மறைக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலைகளில் உட்கார்ந்து உணவருந்துவதும பகற் காலங்கள் முழுவதும புகைத்துக் கொண்டு திரிவதும எந்த வகையில் நியாயமாகும?

எனவே சிறந்த சிந்தனையுள்ள யாவரும நன்கு சிந்தித்து தீமைகளைக் களைந்து மனிதரைப் புனிதராக்கும மகத்துவம வாய்ந்த நோன்பை நோற்கச் சித்தமாக வேண்டும-

ஆகவே, இதுவரை நோன்பை விட்டவர்கள் இன்றிலிருந்து மீதமுள்ளவற்றை நோற்று இறைவனின் அன்பிற்குப் பாத்திரமான "ஸாலிஹீன்"கள் வரிசையில் சேர்ந்து கொள்ள முயல்வார்களாக!

("ஆமீன்!")

(-வ)

— ஜாபீர் இப்றாஹீம் —

### அருள் சொரியும் மாதம்

— மதியன்பன் —

அடிவானிற் தெரிகின்ற பிறையைக் கண்டு
அல்லாஹ்வை துதி செய்வர், நோன்பே என்று
விடியாத வேளையிலே எழுந்திருந்து
விருப்பமுடன் ஏதேனும உணவை உண்டு,
பிடித்திடுவர் நோன்புதனை, பின்னர் இறையின்
பேரருளை வேண்டி நிதம அவனைத் தொழுவர்
குடிபானம, உணவு தனை மறந்திருந்தோர்
கூட்டாக சேர்ந்து மாலை விரதம நீப்பர்!

★

இல்லாத ஏழைகள் இரந்து வந்தால்
இருப்பதிலே ஏதேனும ஈந்து நிற்பர்
பொல்லாத தீமைகள் பொய்யுங் களவும
புறங்கூறல் அத்தனையும விட்டொழிப்பர்!
அல்லலுறும மாந்தருக்கு உதவும பணியில்
அயராது உழைத்திடுவர், அன்பைச் சொரிவர்!
நல்லமலைச் செய்வதிலே முந்திக் கொண்டு
நள்ளிரவு வரை விழித்து வணக்கம செய்வர்!

★

இப்படியாய் ஒருமாதம நோன்பை நோற்று
இறைவணக்கம தனைச்செய்த உள்ளம எல்லாம
தூய்மையாய் புத்தாடை புனைந்து அந்த
தூயோனை வணங்கியபின் பெருநாளன்று
ஒப்பில்லா மகிழ்ச்சியிலே உவகை பூண்டு
உளங்களிக்க உறவினரின் இல்லம செல்லும
இப்படியே நோன் பென்னும மாதம போகும
இறையருளும, அளவின்றி வந்து சேரும!

### நோன்புயர்வே

— நியாஸ் எம். ஸமத் —

இகத்தினில் வாழும இலாதோன் நிலையை
உணர்ந்திடவும
அகத்தினில் அன்னவர் பாலும இரங்கி நடந்திடவும
சுகத்தினில் கூடவும சேர்ந்திடச் செல்வரை
மாற்றவைக்கும
இகபரம மீதினில் உன்னதன் ஆக்கிடும நோன்புயர்வே!

★

நோற்றவின் நோன்பினால் நோய்கள் நழுவும
நமதிருந்து
நோற்றவன் நாவால் நலதே நவிலத் துணையிருக்கும
நோற்றவன் நல்ல நெறியில் நடக்க வழிசமைக்கும
ஆற்றலில் வல்லவன் "நல்லமல்" என்றவிந் நோன்புயர்வே
பசித்தோன் உணர்வினைப் பாரில் பலரும
உணர்ந்திடவே
புசித்தல் "ரமழான்" பகலினில் பாவம எனவுரைத்து
சுசிவுள் மனதாய் உலகில் மனிதனை மாற்றியவர்
அசிங்க உணர்வை அறவே தவிர்த்திடும
நோன்புயர்வே.

# தினசரி கீரை உணவு

# 60 வருடம் முஸ்லிம்களுக்கு இருந்த தடை நீங்கியது

உஸ்பெக் குடியரசின் தெற்கெல்லையிலுள்ள ஹதீம-அல்-திர்மிஸி நினைவாலயம இஸ்லாமிய மக்களுக்கு ஒரு புனித யாத்திரை ஸ்தலம.

நடவடிக்கை எடுத்துக் காட்டுகிறது என நாங்கள் எண்ணுகிறோம். சோவியத் இஸ்லாமிய மக்களின் வாழ்க்கையில் பெரும மாறுதல்கள் அண்மைக்காலத்

ரான இமாம-கதிப் கதஜா அப்துல் ஹாபீஸ் எடுத்துரைத்தார்.

இதேவேளையில் அஸர்பைஜானுடனும ஈரானுடனுமான பிரச்சினைகளில் ...

# கண்களுக்கு பாதுகாப்பு

ஆயிரக்கணக்கான மக்கள் கண் பார்வை அற்றவர்களாக உள்ளதற்குக் காரணம் சத்துணவு பற்றாக்குறையே! குறிப்பாக வைட்டமின் "ஏ" பற்றாக்குறையாகும்.

உயிர்ச்சத்து "ஏ" அதன் மூலப் பொருளான கேரோடினாக கீரைகளில் அதிக அளவில் இருப்பதால் நாள்தோறும் கீரையை உணவில் சேர்த்துக் கொள்வதால் கண் சம்பந்தமான கோளாறுகளை தவிர்க்கலாம்.

கீரைகளில் ஏராளமான வகைகள் உள்ளன. அவற்றில் சிலவற்றின் சத்துக்களும் மருத்துவ குணங்களும் வருமாறு—

முருங்கைக் கீரை — இதில் உயிர்ச்சத்து "ஏ" "சி" மற்றும் இரும்புச் சத்து நிறைய உள்ளது. கண் பார்வைக்கு சிறந்தது. சர்க்கரை வியாதிக்காரர் தினந்தோறும் உணவில் சேர்த்துக் கொள்ள நோய் கட்டுப்படும். காச நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. முருங்கை இலைச்சாறு வயிற்று வலி போக்கும். இலைச்சாற்றுடன் சிறிது சுண்ணாம்பு தேன் சேர்த்து குழைத்து தொண்டைக் குழியில் தடவ இருமல் குரல் கம்மல் நீங்கும்.

* வெந்தயக் கீரை— இது கல்லீரல் மண்ணீரல் இவற்றை தூண்டி நன்றாக பசிக்கச் செய்கிறது. அதிகமாக சிறுநீர் வெளியேற்றத்திற்கும் உதவுகிறது. இலையில் அதிகமாக புரதமும் தாதுப் பொருள்களும் உயிர்ச்சத்து "சி"யும் அடங்கியுள்ளன. இக்கீரையை பருப்புடன் கடைந்தெடுத்து உண்ணலாம். ரத்த மூலம் வயிற்றுக்கடுப்பு முதலியவை நீங்கும்.

* கறிவேப்பிலை — இது ஒரு கீரையா என்ற சந்தேகம் ஏற்படுகின்றதா? நிச்சயமாக கீரை வகையை சேர்ந்ததே! குணத்தை அறிந்தால் இலையில் இருந்து எடுத்த எறிய மாட்டீர்கள். கீரைகளிலேயே தலையாய குணமுடையது. தலைமுடி கொட்டுவதை நிறுத்தவும் மயிர்க்கால்களுக்கு உரமளிக்கவும் இதற்கு ஈடு எதுவும் இல்லை.

சமையலில் கறிவேப்பிலை இடம்பெறாமல் இருக்காது. ரசம் சாம்பார் சட்னி எதிலும் வாசனைக்காக கறிவேப்பிலை இடம்பெறுகிறது. ஆனால் இதை ஒரு கீரையாக யாருமே நினைப்பதில்லை. கறிவேப்பிலையில் மற்ற எல்லா கீரைகளையும் விட அதிக அளவில் உயிர்ச்சத்து "ஏ" உள்ளது. எனவே இதை பச்சையாக மிளகாய் புளி உப்புடன் சேர்த்து துவையலாக அரைத்து சாப்பிட வேண்டும். இரும்புச் சத்து அதிகமாகவுள்ளது. கண்பார்வைக்கு சிறந்தது.

பித்தம் அஜீரணம் ரத்த சோகை இவற்றைப் போக்கும். இரப்பைக்கு வலுவைக் கொடுக்கும். சாதாரண கறிவேப்பிலையிலேயே இவ்வளவு சத்துக்கள் அடங்கியுள்ளன.

* தூதுவளை— இதனை வதக்கி துவையல் கூட்டு செய்து சாப்பிட்டு வர நெஞ்சில் உள்ள கபம் நீங்கும். நெய்யிலிட்டு காய்ச்சி உபயோகித்து வர சயரோகம் கட்டுப்படும். எல்லாவற்றிற்கும் மேலாக அறிவில் தெளிவு ஏற்படும். தூதுவளை புற்று நோய் வராமல் தடுக்கும் என கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இன்று தொழிலாளருக்காக அதை செய்தோம இதைச் செய்தோம என்பவர்கள், அமைச்சர்களாக இருந்துகொண் கொ ண் டு, தோட்டத் தொ ழி லா ள ரே அதிக வருமானத் தோடும வசதிகளோடும வாழ்கின்றார்கள் என்று கூறுகிறார்கள்.

ஒரு தொழிலாளியின் வீட்டில் படுக்க பாய் விரித்தால் நிமமதியாக கால்களை நீட்டத்தான் முடியுமா?"

காலமெல்லாம "குடுமபத் திட்ட" குளிகைகளும, சாதனங்களும ஒருபோதும நிர்வாக முடியாத தொழிலாளர்கள் மிதிக்கப்படுகின்றனர்.

இக்குறைபாடுகளை நிரப்பும பணியில் தொழிற் சஙகஙகள் சேர்ந்து செயற்படும சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும.

தொழிலாளருக்கு வீடுகளை உரிமையாக்குவது; சொந்த வீடுகளைக் கட்டிக் கொடுப்பது என்றெல்லாம பேச்சாக இருக்கிறது.

ஒட்டியிருந்து கேட்டுப் பெறுவது அல்ல போராட்டம தட்டிக் கேட்டும கிடைக்காத போது முட்டிப் பெறுவது தான் போராட்டம.

## லயத்து வாழ்க்கை

— சித்தி சண்முகநாதன் —

குன்றெஙகும இளநஙகை கொழுந்தைக் கிள்ளும
குமரியவள் மென்மனதோ சுகத்தில் நாட்டம
நர்த்தனஙகள் புரிதுளொத்த காலிரண்டும
நயமாக தினந்தோறும மலையிலோட்டம

★

பாவையவள் இயல் போன்ற கண்ணிரண்டும
பார்வைதனில் அவளுணர்வை வெளியிற் சொல்லும
கொஞ்சு தமிழ் குரலினின்று வெளியில் வர — அது
குயிலோசையென கேட்கும காற்றில் மெல்ல

★

குமரியவள் முதுகினிலே கூடை தொஙக — கேள்வி

— மலைவண்ணன் —

இவற்றிற்காக தோட்டஙகள் தோறும செலவழிக்கபடும பணத்தில் அதே அளவு வீடுகள் கட்டிக் கொடுப்பதற்காகவும செலவு செய்யப்பட்டால் ஓரளவுக்காவது இப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம.

தொழிலாளருக்காக குரல்

பாவம என்று பரிதாபபட்டு அள்ளிக் கொடுப்பதல்ல விடுதலை, தன்மான உணர்வு கொண்டு தானாகப் போராடிப் பெறுவதுதான் விடுதலை.

அப்படியிருக்க செப்படிவித்தைகாரர்களைப் போல கூச்சல் போட்டுவிட்டு, பின்னர் எவரையும ஒட்டிக் கொண்டு எதை

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

ஈஸட் ஏ எம பைசல,
அறனாயக.

கே— உஙகள் வாழ்க்கையில் எப்பொழுதாவது "இன்ஷா அல்லாஹ்" என்று கூறியிருக்கிறீர்களா?

ப— எப்பொழுதாவதா? எப்பொழுதுமே அல்லவா?

★

நிஸ்ரியா நதீர்,
மல்வானை.

கே— இன்றைய காலகட்டத்தில் நீஙகள் உஙகளுக்காக அதிகம சமபாதிக்க விருமபுவது எதை?

ப— பணத்தை! அப்போது தானே ஏறும விலைவாசிகளுக்கு ஈடு கொடுக்க முடியும!

★

ஐ ஹுமாயுன் கபீர்,
மாதிப்பொளை.

கே— எதைச் செய்யக் கூடாது என்று நினைக்கிறோமோ — அதையே செய்யும நிர்ப்பந்தம ஏற்படுகிறது! இதுபோன்ற அனுபவம தஙகளுக்கு ஏற்பட்டதுண்டா?

ப— இந்த அனுபவம எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்குமே உண்டு!

★

ஏ எம மர்சூக்,
மதவாச்சி.

கே— தூஙகவென்று படுக்கையில் விழுந்த பின்னும நித்திரை வராமல் அவதிப்பட்ட அனுபவம உண்டா? காரணம என்ன?

ப— படுத்ததும எனக்குத் தூக்கம வந்துவிடும! ஏனென்றால் தூக்கம வந்தவுடன்தான் நான் படுக்கிறேன்!

★

செல்வி சசிகலா சுப்பிரமணியம,
உலப்பனை.

கே— வளர்ந்து வரும இளைய எழுத்தாளர்களுக்கும கவிஞர்களுக்கும தாஙகள் கூறும அறிவுரை என்ன?

ப— பத்திரிகைகளில் உஙகள் படைப்பு வெளிவரா விட்டாலும தொடர்ந்து எழுதிக் கொண்டே இருஙகள் என்பதுதான் என்



புத்த பகவான்

சொல்வார்களே! அது ஏன்?

ப— ஏழைகளின் தலையில் பொழுது படியும என்பது விடியும என்று மாறி விட்டது! பணக்காரர்கள் சொகுசாக நிழலில் வாழ, ஏழைகள் வெய்யிலில் வேலை செய்ய வேண்டியிருக்கும என்பது இதன் பொருள்!

★

வி முராவ்டீன்,
கந்தளாய்.

கே— உயர்வு, தாழ்வு என்ற நிலை எதனால் மனிதனுக்கு ஏற்படுகிறது?

ப— பொருளால்!

★

ஏ எஸ்,
பதுளை.

கே— டி வியில் மாலை 6 மணிக்கு "மும்மணிகளுக்கு அஞ்சலி" என்ற நிகழ்ச்சி ஒளிபரப்பாகின்றதே — "மும்மணிகள் என்பதன் கருத்து என்ன?

ப— புத்த பெருமானையும, அவர் போதித்த தர்மத்தையும, அதைப் பரப்புகின்ற சஙகத்தையும "மும்மணிகள்" என்று கூறுவது பௌத்தர்களின் வழக்கம!

★

செல்வி நஸ்லி அலீஸ்,
காத்தான்குடி — 03.

ப— கட்டில், தலையணை வியாபாரம படுத்து விட்டிருக்கும!

★

கிறிஸ்டபல், ஜெயா,
கமபளை.

கே— சுடுகாட்டில் உஙகளுக்குத் தோன்றக் கூடிய எண்ணஙகள் என்ன?

ப— புதைப்பதற்குப் பதிலாக எரித்து விட்டால் எத்தனையோ பேருக்கு வீடு கட்ட இடம கிடைக்குமே என்பதுதான்!

★

சியானா கலீல்,
கல்ஹின்னை.

கே— ஒரு ஆண் ஒரு பெண்ணை விருமபுவது அவளின் அழகுக்காகவா? அல்லது அவளின் குணத்துக்காகவா?

ப— இரண்டுக்குமாக அல்ல — தேவைக்காக!

★

நிஸானா தாலிப்,
நீர்கொழும்பு.

கே— எனக்குப் பதவி ஆசையே இல்லை என்று ஓர் அரசியல்வாதி கூறினால் அதற்கு என்ன அர்த்தம?



குமரியவள் முதுகினிலே கூடை தொஙக — கேள்வி
குறி போல ஒக்கும பாவை நலிந்த மேனி
எத்தனை நாள் தொடர்ந்துவரும இந்தத் துன்பம
என்ற வொரு கேள்விக்கேன் பதிலேயில்லை.

★

மாலையிலே வீடு வந்து மனைப்பில் சாய்ந்தால்
மற்றவர்கள் கால் வந்து தலையில் முட்டும
வீடதுதான் எட்டடியில் லயத்துக் கோட்டம ெ
விதியதுதான் என நினைந்து படுத்தே விட்டாள்.

லாம.

தொழிலாளருக்காக குரல் கொடுப்போர் பழைய தொழிற் சட்டஙகளைத் திருத்தி அமைக்க முன்வர வேண்டும.

சட்டத்திருத்தஙகளை அவ வப்போது கொண்டுவர முற் படாது விட்டு விட்டதே இன்று நிர்வாகஙகளுக்கு சறுக்கி விளையாடும பனிப்படலஙகளாக

போட்டுவிட்டு, பின்னர் எவரையும ஒட்டிக் கொண்டு எதையும பெறவேண்டும என்று நினைத்துக் கொண்டு இருக்க முடியாது.

தொழிலாளர்கள் தஙகள் தாழ்வு மனப்பான்மையைக் களைந்து விட்டு தன்னம்பிக்கையோடு ஒன்றுசேர வேண்டும.

(த-ங)

தொடர்ந்து எழுதிக் கொண்டே இருஙகள் என்பதுதான் என் அறிவுரை! இப்படித்தான் நான் செய்தேன்!

★

நஸ்லியா பௌஸுல்,
கிந்தோட்டை.
கே- எளியவர்கள் தலையில் தான் பொழுது விடியும என்று

# இரண்டும் கெட்டான் நிலையில்

# ஆசிரியர் பயிலுநர்கள்

பொறுப்பு வாய்ந்த பிரதேச தமிழ் கல்வி அதிகாரிகள் சிலர், கொடுத்த விளக்கஙகளினால் தோட்ட பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு தெரிவாகியுள்ள ஆசிரியப் பயிலுநர்கள் இரண்டும கெட்டான் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக பெரும்பாலான ஆசிரியப் பயிலுநர்கள் தற்போது நடைபெறும பயிற்சியில் முழுமையாக மனதை ஈடுபடுத்த முடியாதபடி பல்வேறு குழப்பஙகளுக்கும, சந்தேகஙகளுக்கும ஆளாகி இருக்கின்றனர்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு தெரிவாகியுள்ளவர்களில் அநேகர் ஏற்கனவே கல்வி அமைச்சில் வழஙகப்பட்ட 25,000 ஆசிரியர் நியமனத் திட்டத்தின் கீழ் தெரிவாகி நியமனம பெற்றிருக்கின்றனர்.

தோட்டப் பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கான விண்ணப்பம கடந்த 1988ஆம ஆண்டு ஜனவரி மாதத்தில் கோரப்பட்டது.

அதே ஆண்டு ஏப்ரல் மாதத்தில் போட்டிப் பரீட்சையும நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ் தெரிவாகும ஆசிரியப் பயிலுநர்களுக்கு அதே ஆண்டில் டிசமபர் மாதமளவில் ஆசிரியப் பயிற்சி வழஙகப்படும என்று அப்போது கூறப்பட்டது.

ஆயினும மேற்படி தோட்டப் பாடசாலை பயிற்சி ஆசிரியர் தெரிவில் இடமபெற்ற வெளியார் ஊடுருவல், ஊழல் போன்ற சமபவஙகளைத் தொடர்ந்து இந்த தோட்டப் பாடசாலை பயிற்சி ஆசிரியர் திட்டம (பி எஸ் டி பி) இடைநிறுத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில் 1989ஆம ஆண்டு நடுப்பகுதியில் 25,000 ஆசிரியர் நியமனத்திற்கான விண்ணப்பம கோரப்பட்டது.

ஏற்கனவே மேற்கூறப்பட்ட தோட்டப் பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்தின் கீழ் 1988ஆம ஆண்டில் விண்ணப்பித்த பெருமபாலானவர்கள் இந்த 25,000 ஆசிரியர் நியமனத்திற்கும விண்ணப்பித்தனர்.

இவர்களில் அநேகர் 25,000 ஆசிரியர் நியமனத் திட்டத்தின் கீழ் ஆசிரியப் பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

பயிற்சி இன்றியே இவர்கள் தமக்கு கொடுக்கப்பட்ட பாடசாலைகளில் இப்பொழுது கடமையாற்றுகின்றனர். பலர் நியமனஙகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த 1988ஆம ஆண்டு கோரப்பட்டிருந்த தோட்டப் பாடசாலை ஆசிரியர் பயிற்சித் திட்டத்திற்கு தெரிவானவர்களின் பெயர்ப் பட்டியல் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்டது.

25,000 பயிற்சி ஆசிரியர் நியமனத்தின் கீழ் தெரிவாகி பாடசாலைகளில் கடமையாற்றும அநேகர் இந்தப் பெயர்ப்பட்டியலில் காணப்படுகின்றனர்.

தோட்டப் பாடசாலை ஆசிரியப் பயிற்சித் திட்டத்திற்கு தெரிவானவர்களுக்கான ஆசிரியப் பயிற்சி கடந்த மாதம 16ஆம, 17ஆம திகதிகளில் தலவாக்கொல்லை தமிழ் மகா வித்தியாலயத்திலும, அட்டன் ஹைலன்ட்ஸ் கல்லூரியிலும ஆரமபமானது.

ஒரே சமயத்தில் 25,000 பயிற்சி ஆசிரியர் நியமனத்தின் கீழும, ஆசிரியர் பயிலுநர் திட்டத்தின் கீழும தெரிவாகியுள்ளவர்கள் இதனால் பெரும குழப்பம அடைந்திருக்கின்றனர்.

இந்த இரு ஆசிரியர் நியமனஙகளில் எதை ஏற்பது? எதை விடுவது என்று முடிவெடுக்க முடியாமல் ஆசிரியர் பயிலுநர்கள் அஙகலாய்க்கின்றனர்.

ஆசிரியப் பயிலுநர்களுக்கான பயிற்சியின் ஆரமப நாளன்று ஆசிரியப் பயிலுநர்கள் தமது நிலையை பிரதேச தமிழ் கல்வி அதிகாரிகளிடம கூறி ஆலோசனை கேட்டனர்.

அப்போது சமபந்தப்பட்ட தமிழ் கல்வி அதிகாரிகள் 25,000 பயிற்சி ஆசிரியர் நியமனம சந்தேகத்திற்கு இடமானது. திருப்தியற்றது என்றும —

இதன் கீழ் தெரிவாகியுள்ள ஆசிரியப் பயிலுநர்களுக்கான பயிற்சிகள் எதுவும இன்று வரை திட்டமிடப்படவில்லை.

இந்த நிலையில் பார்த்தால் இந்த 25,000 பயிற்சி ஆசிரியர்களுக்கு எப்போது பயிற்சி வழஙகப்படும, எப்போது நிரந்தர ஆசிரியர் நியமனம வழஙகப்படும என்பது சந்தேகத்திற்கு இடமாகவே உள்ளது.

ஆகவே ஆசிரியப் பயிலுநர் திட்டம சிறந்தது. இதன் கீழ் பயிற்சி பெற்றால் ஒரு வருடத்தின் பின் நிரந்தரமான நியமனமும, அதிக சமபளமும கிடைக்கும என்றும ஆலோசனை கூறினர்.

25,000 பயிற்சி ஆசிரியர் நியமனத்திற்கு தெரிவான பலர் இந்த கல்வி அதிகாரிகளின் ஆலோசனைகளுக்கு அமைய அந்த ஆசிரியர் நியமனஙகளை ராஜினாமாச் செய்து விட்டு பயிற்சித் திட்டத்தில் சேர்ந்து கொண்டனர்.


இப்போது இதே தமிழ் கல்வி அதிகாரிகள் ஆசிரியப் பயிலுநர்கள் பயிற்சி பெறும நிலையஙகளை மேற்பார்வை செய்ய வருமபோது தோட்டப் பாட

[21ஆந் பக்கம பதுர்க்க]

செல்வி நஸ்லி அவஸீஸ்,
காத்தான்குடி - 03.
கே- கிளி மாதிரிப் பெண்டாட்டி இருந்தாலும குரஙகு மாதிரி வைப்பாட்டி இருக்க வேண்டும என்று சொல்கிறார்களே... வைப்பாட்டியை குரஙகிற்கு ஒப்பிடுவது ஏனோ?
ப- பிடுஙகும குணம இருப்பதால்!

★

எம என் எம றிமஸான்,
வெலிப்பெனை.
கே- பணம - குணம - அறிவு இவை மூன்றிலும உஙகளுக்கு விருப்பமானது எது?
ப- நான் எப்பொழுதும பணத்தின் கட்சியைச் சார்ந்தவன்!



மண்டேலா

செல்வி கோ தேவலதா,
கந்தளாய்,
கே- பெண்ணை "வஞ்சி" என்றும அழைப்பதன் காரணம என்ன?
ப- "வஞ்சிக்கும குணம" அவர்களிடம இருப்பதாலோ?

★

நஸ்லிஹா, வஹீரா,
தந்துறை.
கே- தூக்கம என்ற ஒன்று இல்லா விட்டால் உலகம எப்படி இருக்கும?



ஔவையார்

ப- "இல்லை" என்பதற்கு "இருக்கிறது" என்று அர்த்தம்!

★

ஸஹீட் அஹமட்
முஹலமட் பௌஸர்,
பறகஹதெனிய.
கே- புதுக் கவிதையின் தாத்தா மு மேத்தாவின் கவிதைகளை நீஙகள் படித்துச் சுவைத்ததுண்டா?
ப- புதுக்கவிதைக்குத் தாத்தா கிடையாது! பாட்டிதான் உண்டு! அவர்தான் ஔவைப் பாட்டி! "ங" போல் வளை என்ற ஔவைப் பாட்டியின் புதுக்கவிதைக்கு உஙகளுக்குப் பொருள் விளஙகுகிறதா?

★

பாதிறா ஜெலால்டீன்,
ஹிஜ்றாகம.
கே- கண்ட கண்ட ஆண்களைக் காதலித்துக் கைவிடும பெண்களின் எதிர்காலம என்னவாகும?
ப- வெறும ஏமாற்றமாகும!


★

கே வசந்தன்,
மவுண்ட்ஜீன் எஸ்டேட்,
கே- அண்மையில் 27 வருடஙகள் சிறைவாசம இருந்து விடுதலை செய்யப்பட்ட நெல்சன் மண்டேலாவின் எதிர்கால வாழ்க்கை எப்படி இருக்கும?
ப- மண்டேலா நோயாளியாக வெளிவந்திருக்கிறார்! அவர் நீண்ட காலம வாழ்வாரேயானால் அவர் எதிர்காலம ஒளிமயமானதாக இருக்கும!

சினிமா



பாம்பின் சீற்றத்தை முகத்தில் தந்திடும் வண்ணம் கண்களுக்கு வர்ண "காண்டாக்ட் லென்ஸ்" போட்டிருக்கிறார், டிஸ்கோ சாந்தி— படம் "மனைவி ஒரு மாணிக்கம்" [ம—10]



பிள்ளை இல்லாத வீட்டிலே இந்தக் கிழவன் துள்ளிப் பாய்கிறாரோ? "வரவு நல்ல உறவு" படத்தில் விசு — அன்னபூரணி— [ம—10]

# சினிமா என்றால் கீதாவுக்கு காதல்!

கீதா "பைரவி" படத்தில் ரஜனியின் தங்கையாக அறிமுகம, "நினைத்தாலே இனிக்கும்" படத்தில் ரஜனிகாந்த் சைட் அடிக்கும ஹோட்டல் ரிசப்ஷனிஸ்ட். அப்புறம நினைவு படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் சமீபத்திய படங்களான கடமை கண்ணியம கட்டுப்பாடு, கலியுகம, இப்படி தமிழில் அவ்வப்பொழுது முகம காட்டிக்கொண்டிருக்கிறார் கீதா.

தெலுங்கு, கன்னடம, மலையாளம என்று வாய்ப்புகள் வர ஆரமபித்ததும "பிஸி"யாகி விட்டார். தெலுங்கில் எல்லாக் கதாநாயகர்களுடனும நடித்திருக்கிறார்.

"நடிகையாக வேண்டுமென்கிற ஆர்வம சமூகத்தில் நடிகைகளுக்கு இருக்கும புகழ், பணம இதைப் பார்த்து ஏற்பட்டதுதானே" என்று கேட்ட போது,

"அப்படியெல்லாம சொல்ல முடியாது புகழினாலா பணத்தினாலா என்றில்லை — சினிமா மீதுள்ள ஒரு காதல் அவ்வளவு தான். கீதா என்று சொன்னால் உடனே நினைவிற்கு வந்துவிடுகிற பிரபல்யமா நான்? புகழ் இல்லாத நிலையில் பணம, சமபாத்தியம இல்லாமல் தொழில் செய்ய முடியுமா? அதற்காக கிடைக்கிற ரோலிலெல்லாம நடித்து பணம பண்ணுகிற நிலையில் இல்லை நான். ஓரளவு பணம, வசதி, புகழ், ஓரளவு வாய்ப்பு கிடைக்கிற சில நல்ல ரோல்கள். அவ்வளவு மட்டுமே எனக்கு தேவை.

தமிழ், மலையாளம, தெலுங்கு என்று முக்கியமான படங்களில் தான் நடித்துக் கொண்டிருக்கிறேன். தமிழில் சொல்லவேண்டுமென்றால் பாலசந்தர் சாரின் "புதுப்புது அர்த்தங்கள்" பாலசந்தர் சார் டைரக்ஷனில் "கன்னடம" இந்திப் படங்களில் கூட நடித்திருக்கிறேன். அவர் படத்தில் நடிப்பதென்பது வாழ்க்கையில் அபூர்வமாய்க் கிடைக்கிற சந்தோஷம போன்றது"

தமிழ்ப் படங்களில் நிலையாக நடிக்க சந்தர்ப்பம வந்ததும ஒரு நடிகைக்கு மிக உதவியாக இருக்குமே என்று ஆவலாய் பரதம, குச்சுப்பிடி, ஒடிசி, ஓரியண்ட் போன்ற நடனங்களைக் கற்றுக்கொண்டேன். அந்த நடனங்களை பயன்படுத்துகிற வகையில் கூட வாய்ப்பு கிடைக்காத நிலைதான் மிகவும பாதித்தது. இன்னும நடன அரங்கேற்றம கூட செய்யவில்லை. அரங்கேற்றம ஆசை கூட விட்டுப்போயிற்று.

நடனத்தில் தான் ஆர்வமாய் கவனம செலுத்தினேன். சினிமாவில் அதற்கான வாய்ப்பு இல்லை என்று ஆகிவிட்டதும அதிலிருந்த ஆர்வமும குறைந்து போயிற்று. இப்போதைக்கு நடிப்பில் மட்டுமே ஆர்வமாய் இருக்கிறேன்."

— இவ்வாறு கூறுகிறார் கீதா.

(ம—10)



விஜியின் கட்டான உடல் கவர்ச்சிப் பெட்டகமாக இருந்து பெருமை தருகிறது— "புல்லானாலும பொஞ்சாதி" படத்தில் இந்தத் தோற்றம! [ம—10]

# சம்பன் பள்ளத்தாக்கில் முதல் தமிழ் படம் வளரும்

"புலன் விசாரணை" வெற்றி படத்தை தயாரித்த ஐ வி சினி புரொடக்ஷன்ஸ் அடுத்து பிரமாண்டமான முறையில் புதிய படம தயாரிக்கிறது—

இந்தப் புதிய படத்திற்கு "கேப்டன் பிரபாகரன்" என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது— இதில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார்—

இளையராஜா இசையமைக்கிறார்—

லியாகத்அலிகான் வசனம

இந்தப் படத்தை இப்ராகிம் ராவுத்தர் வழங்க இரா சுந்தர்ராஜ் — ரவீந்திரன் ஆகிய இருவரும தயாரிக்கிறார்கள்—


படம "சினிமாஸ்கோப்பில்" உருவாகிறது—

படப்பிடிப்பு மத்திய பிரதேச மாநிலத்தில் உள்ள சமபல் பள்ளத்தாக்கில் நடைபெறும—

அடர்ந்த காடுகளிலும படப்பிடிப்பு நடைபெறும— ஒரு தமிழ்ப் படத்தின் படப்பிடிப்பு சமபல் பள்ளத்தாக்கில் நடைபெறுவது இதுவே முதல்முறையாகும— (ம—10)

## மௌனம்சம்மதம் பார்க்க நீங்கள்

...க்கு வர இருக்கும இந்த படத்தில் மம்முட்டி, ஜெய்சங்கர், நாகேஷ், ஜெய்கணேஷ், சரத்குமார், சார்லி, தியாகு, அமலா, சத்யப்ரியா, சுகுமாரி மற்றும



[ம-10]

லியாகுத்அலிகான் வசனம எழுத ஆர் கே செல்வமணி கதை திரைக்கதை எழுதி டைரக்ட் செய்கிறார்—

திரைப்படக் கல்லூரி மாண வரான இவர் "புலன் விசா ரணை" படத்தை டைரக்ட் செய் தவர்!

## ...சம்மதமா?

கே சி பிலிமஸ் சார்பில் கோவை செழியன் தயாரித்துள்ள "மௌனம சமமதம" படப் பிடிப்பு முடிவடைந்தது—

தமிழ் புத்தாண்டு தினம திரை,

சத்யப்ரியா, சுகுமாரி மற்றும பலர் நடித்துள்ளனர்—

எஸ் என் சாமி எழுதிய கதைக்கு குணா வசனம எழுதி மத டைரக்ட் செய்துள்ளார்—

இசை, இளையராஜா, ஒளிப் பதிவு விபின்தாஸ்—

(ம-10)...



கனகாவை ரஜனிகாந்த் கைக்குள் போடுவதற்கு கமலா காமேஷ் துணை போகிறாரோ?, "அதிசயப் பிறவி" படத்தில் வரும கட்டம!

[ம—10]

# கோடம்பாக்கம் டயரி

"புதுப் புது அர்த்தஙகள்" வெற்றி பெற்றதைத் தொடர்ந்து ரகுமானின் அந்தஸ்து உயர்ந்திருக்கிறது— "அவர் பழக்க வழக்கஙகளை மாற்றிக் கொண்டு அனுசரித்து நடந்து கொண்டால் இன்னும அவருடைய மார்க்கெட் உயரும" என்கிறார் பிரபல தயாரிப்பாளர் ஒருவர்!

★

மஞ்சுளாவின் வாரிசாக அறிமுகமாகியுள்ள புதுமுகம சிந்து நல்ல கறுப்பு— இவர் விழாக்களுக்கு வரும போது முகம நிறைய "மேக்-அப்"புடனும கழுத்து நிறைய நகைக ளுடனும நாகரீக உடையில் ஆடமபரமாக வருகிறார்— தயாரிப்பாளர் - டைரக்டர்கள் முகம சுளிக்கிறார்கள்!

★

"ஆராரோ ஆரிரரோ" படத்தின் மூலம நல்ல பெயர் சமபாதித்த பானுப்ரியாவுக்கு படஙகள் குவிகின்றன. இது இன்னொரு கதாநாயகி நடிகைக்கு கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. அவர் வேறு யாருமல்ல. சோபனா தான்.

★

"இதயத்தைத் திருடாதே" கிரிஜா "சிருஙகார யாத்ரா" என்னும தெலுஙகுப் படத்தில் படு கிளுகிளுப் பான ரோலில் நடித்துக் கொண்டிருக்கிறாராம.

★

"இப்போதும நான் விருமபாத செயல் ஒன்று உண்டு என்றால், அது என் அனுமதியில்லாமலேயே நான் நடிப்ப தாக சிலர் வெளியிடும செய்திகள் தான், இதனால் பாதிக் கப்படுவதும நான் தான்" என்று அழாக்குறையாகச் சொன்னார் ரூபிணி.


★

பாடகர் மனோவை சில தயாரிப்பாளர்கள் படஙகளில் நடிக்க அழைத்தார்களாம. ஆனால் பாடுவது தான் ஆண்டவன் அளித்த பிரசாதம, எனவே நடிப்பு வேண்டாம என்று கூறிவிட்டாராம மனோ.

★

சமீப காலமாக மதம் பற்றியும, பிரபலமானவர்களின் சுய சரிதைகளையும விருமபிப் படிக்கிறார் சிவகுமார்.

(ம-10)



தஙகச் சிலைகளைப் பார்த்த மயக்கத்தில் நாகார்ஜுன் இருக்கும போது சசிகலாவின் தஙக உடல் மதி மயஙக வைக்கிறது— "இதோ இன்னொரு தேவதாஸ்" படக்காட்சி—

[ம—10]

# பாண்டியராஜன் முன்னேற உதவும் டெலிவிஷன் ராசி

பாண்டியராஜனுக்கு "பச்சைக் கொடி" கைகொடுத்து இருக்கிறது. பொஙகலுக்கு வந்த படஙகளில் "பச்சைக் கொடி" தேறி விட்டது. பாண்டியராஜனுக்கு இது உற்சாக "டானிக்"

சமீபத்தில் அவருக்கு பிறந்த இரண்டாவது பையனின் ஜாதகம நன்றாக இருக்கிறதாம.

பாண்டியராஜனுக்கும, டெலிவிஷனுக்கும ஒரு ராசி உண்டு. அவருடைய "ஆண் பாவம" டெலிவிஷனில் திரையிடப்பட்ட அன்று மூத்த மகன் "பல்லவராஜன்" பிறந்தான். அவர் நடித்த "கதாநாயகன்" டி வி யில் காட்டப் பட்ட அன்று இரண்டாவது மகன் பிறந்திருக்கிறான்.

அதனால் பாண்டியராஜனின் மூன்றாவது படத்தை டெலிவிஷன் இப்போது காட்டக்கூடாது என்கிறாராம அவருடைய மனைவி,

இதேநேரத்தில் நாகார்ஜுன் - அமலா நடித்த "ஷிவா" என்ற தெலுஙகுப் படம "உதயம்" என்ற பெயரில் தமிழில் மொழி மாற்றம செய்யப்பட்டு வெளிவர்துள்ளது!

இந்தப் படத்தின் மொழி மாற்ற உரிமையை அமலா வாஙகி இருக்கிறார். படத்தயாரிப்பு அமலாவுக்கு ராசியாக இருக்குமா?

(ம-10)



ராமாயண சீதையாக வந்து ரசிகர்களை மயக்கிய இந்தி நடிகை தீபிகாவிடம் ராஜசேகர் மனதைப் பறி கொடுத்து விட்டாரா? படம் "மன்னிக்க வேண்டுகிறேன்"

[ம—10]

# தனிமை நோய்க்கு ராதிகாவின் மருந்து

காதல் திருமணம் தோல்வியில் முடிந்தது. பின்னர் வந்த காதல் உறவும் முறிந்து விட்டது. எனவே ராதிகாவைத் தனிமை வாட்டுகிறது. இந்தத் தனிமை நோயைத் தீர்க்க ராதிகா பயன்படுத்தும் மருந்து என்ன? அவரே கூறுகிறார்:-

தனியே உட்கார்ந்து சிந்திப்பதும், அப்படியே ஆங்கில மெல்லிசை கேட்பதும் எனக்கு மிகவும் பிடித்த பொழுது போக்கு. சில நாட்களாக இப்படி உட்கார்ந்து பொழுது போக்குவதுதான் எனக்கு மிகுந்த மன அமைதியைக் கொடுக்கிறது.

வெளியூர் படப்பிடிப்பு என்றால் எனக்கு நல்ல வசதி. உல்லாசப் பறவையாக ஊரெல்லாம் சுற்றிப் பார்க்க முடியும்.

பல நாட்களுக்குப் பிறகு என் தோழி. அதுவும் அவள் கல்யாண நாளில் என்னை விருந்துக்கு அழைத்திருந்தாள்! அவளுடன் அன்று இரவு விருந்தில் கலந்து கொண்ட போது, நாங்கள் இருவரும் ஒன்றாக படித்த நாட்களின் நினைவுகளை அவள் கணவரிடம் கொட்டித் தீர்த்தோம். ஆர்வத்துடன் அவரும் கேட்டார். அன்று வீடு திரும்பிய போது மனமொத்த அந்தத் தம்பதிகளுடன் பொழுது போக்கிய என் மனது நிறைந்திருந்தது.

மன அமைதி வீட்டிலிருப்பவர்களோடு கழிப்பதிலும் உண்டு. விருந்தாளிகள் வரும்போது தனிமையில் வாழும் எனக்கு அது... ஒரு மருந்தாகவும், அமைவதைப் போல் எனக்குள் ஓர் உணர்வு ஏற்படும்.

பகலில் படப்பிடிப்பு இருந்தாலும், மாலையில் விருந்தாளிகள் எனக்காக வீட்டில் காத்திருந்தனர். "தென்றல் சுடும்" படப் பிரின்டை அவர்களுக்காக வரவழைத்துப் போட்டுக் காட்டினேன். ஒவ்வொரு காட்சியையும் பார்த்த போது, அந்தக் கதாபாத்திரத்திற்காக லண்டனில் மேக்அப் சாமான்களுக்காக கடைகளில் நான் ஏறி ஏறி இறங்கியது நினைவுக்கு வந்தது. நான் மிகவும் விரும்பி நடித்த ரோல் அது. படுக்கையில் படுத்த பின்பும் எனக்குள் காட்சிகளைப் புரட்டிக் கொண்டுதானிருந்தேன்.

தேகப்பயிற்சிக்காக ஹெல்த் கிளப்பிற்குத் தவறாமல் போக நான் முடிவு செய்தேன். முதல் நாள் தேகப்பயிற்சிக்குப் போய் விட்டு வந்த போது மனதுக்கு மட்டுமல்ல, உடலுக்கும் புத்துணர்வு பிறந்தாற் போலிருந்தது.

இவ்வாறு கூறினார் ராதிகா.

(ம-10)



சித்தாராவுடன் நடித்த நேரம் ரகுமானுக்கு நல்ல நேரம் போலும்- படம் "மனைவி வந்த நேரம்"

[ம—10]

## கமல் நான்கு வேடம்

### தாங்கி நடிக்கும் படம்

"தம்பிக்கு எந்த ஊரு" "எங்கேயோ கேட்ட குரல்" "கல்யாண ராமன்" "ஜப்பானில் கல்யாண ராமன்" "குரு சிஷ்யன்" ஆகிய படங்களை தயாரித்த நிறுவனம் பி ஏ ஆர்ட் புரொடக்ஷன்ஸ்! இந்த நிறுவனம் தயாரிக்கும் புதிய படம் "மைக்கேல் மதனகாமராஜன்"

இதில் கமல்ஹாசன் நான்கு வேடங்களில் நடிக்கிறார்- அவருக்கு ஜோடியாக ரூபினி, குஷ்பு, ஊர்வசி ஆகிய மூவரும் நடிக்கிறார்கள்-

படப்பிடிப்பு பெங்களூரில் தொடங்கி தொடர்ந்து 20 நாட்கள் நடைபெற்றது-


சிங்கீதம் சீனிவாசராவ் டைரக்ட் செய்கிறார்- இளையராஜா இசை அமைக்கிறார்- கவுரிசங்கர் ஒளிப்பதிவு செய்கிறார்-

இந்த படத்தின் கதையை கமல்ஹாசன் எழுதியுள்ளார்-

கிரேசி மோகன் வசனம் எழுதி இருக்கிறார்-

இதில் ஜனகராஜ், டெல்லி கணேஷ், மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள்-

(ம-10)



## "முதல் முயற்சி"

ஏ கே ஜி சினி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கும் "முதல் முயற்சி" என்ற படம்




ரூபினியின் தலையிலுள்ள மலர்கள் சத்யராஜை மயக்கி விட்டன- "மதுரை வீரன் எங்க சாமி" படத்தில் இந்தக் காட்சி!

[ம—10]

நேரம் ரகுமானுக்கு நல்ல நேரம் போலும்- படம் "மனைவி வந்த நேரம்-"

[ம—10]




ரஞ்சனத்தின் "மார்க்கெட்" மலையாளத்தில் படு சூடாக இருக்கிறது- இடத்துக்கு தகுந்த மாதிரி கொஞ்சம் திறந்த மனதுடன் நடந்து கொள்கிறார்!]

★

இந்திப் படவுலகில் நான் நிலைத்து நிற்க முடியாமல் போனதற்கு காரணம் என் தந்தைதான் என்று ஆத்திரப்படுகிறார் குஷ்பு நடிகை! இந்திப் படவுலகில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமாகி கதாநாயகி அந்தஸ்துக்கு உயர்ந்த போது ஏராளமான "உப்புமா" படக் கம்பெனிகளிடம் "அட்வான்ஸ்" வாங்குவதிலேயே குறியாக இருந்தார் அப்பா- இதனால் நல்ல பட வாய்ப்புகள் கிடைக்காமல் போய் விட்டது என்று தந்தை மீது குறைபட்டுக் கொள்கிறார்- தற்போது அப்பாவுடன் "டு" விட்டுக்கொண்டு அவர் தனியே வசிக்கிறார்-

★

மாநிறம், மயக்கும் முக வசீகரம், பெரிய விழிகள் கொண்ட அந்த மூன்றெழுத்து மா...ரியான நடிகையை இப்போது சில நடிகர்கள் - நடிகைகள், தொழில் நுட்ப கலைஞர்கள் அண்ணி... அண்ணி என வாய் மணக்க அழைக்க, அவரும் அதைக் கேட்டு கேட்டு மகிழ்கிறாராம், அண்ணி என்று அழைப்பது சரி, அந்த அண்ணன் யார்? அவர் ஒரு திரைப்பட இயக்குனராக இருந்தாலும் இருக்குமோ!]

★

கரகாட்டக்காரனுடன் ஜோடியாக நடிக்க இன்று பெயர் பெற்ற நடிகைகள் வட்டமடித்து தூது மேல் தூது விட்டுக் கொண்டிருக்கும் இந்த நிலையில் இதயத்தை திருடாதே என்று வந்த நடிகை அந்த "வில்லேஜ் மேன்" உடன் ஜோடியாக நான் நடிப்பதா? என்று கேட்டாராம் ஒரு அதிரடம்.

★

தாடிக்கார வல்லவர் தன்னம்பிக்கை துணை கொண்டு கட்சியும் தொடங்கினார். அதில் உறுப்பினராக சேர விருப்பம் தெரிவித்த இளைஞர்களிடம் இருந்து தினசரி கடிதங்கள் வந்து குவிகின்றன. இவர்களுக்கு பதில் எழுதுவதற்கு என்று அலுவலகமும் தொடங்கி இருக்கிறார். (ம-10)



விஜயகாந்த் ம ண்டியிடும் அளவுக்கு அமலா என்ன செய்தாரோ? "புதுப் பாடகன்" படத்தில் இந்தக் காட்சி!]

[ம—10]

## "முதல் முயற்சி"

ஏ கே ஜி சினி ஆர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் ஏராளமான பொருட் செலவில் தயாரிக்கும் "முதல் முயற்சி" என்ற படம் வளர்ந்து வருகிறது புதுநடிகர் டி ராஜ் அருண் கதாநாயகனாக நடிக்க, கதாநாயகியாக நடிக்கிறார் ரூபினி-

பானுசந்த., ராதாரவி, செந்தாமரை, விஜயகுமார், தியாகு கே ஏ. தங்கவேலு, டிஸ்கோ சாந்தி நடிக்கிறார்கள்- கதாநாயகனாக நடிக்கும் டி ராஜ் அருண் கதை திரைக்கதை வசனம் பாடல்கள் எழுத, கோபிநாத் ஒளிப்பதிவை கவனிக்க, ஜி கே எஸ் ஹரி இசை அமைக்க சோமசுந்தரம் தயாரிப்பு நிர்வாகத்தில் வளரும் புதுப் படம் "முதல் முயற்சி"

(ம-10)



ரூபினியின் தலையிலுள்ள மலர்கள் சத்யராஜை மயக்கி விட்டன- "மதுரை வீரன் எங்க சாமி" படத்தில் இந்தக் காட்சி!

[ம—10]

## மலேஷிய வாசு இயக்கும் படம் துரித வளர்ச்சி

உஷா புரொடக்ஷன்ஸ் சார்பில் உஷா வாசுதேவன் தயாரிக்கும் படம் "நீ சிரித்தால் தீபாவளி-

மலேஷிய வாசுதேவன் கதை திரைக்கதை, வசனம் எழுதி டைரக்ட் செய்யும் இந்த படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு ஊட்டி, குன்னூர் ஆகிய இடங்களில் தொடர்ந்து 30 நாட்கள் நடைபெற்றது-

இரண்டாவது கட்ட படப்பிடிப்பு சென்னையை சுற்றியுள்ள பகுதிகளிலும், ஊட்டியிலும் நடைபெற்றது-

இந்தப் படத்தில் சிவகுமார், முகம் ஹரிஷ், "நிழல்கள்" ரவி, ஜனகராஜ், "வெண்ணிற ஆடை" மூர்த்தி, சுலக்ஷனா, சோனியா மற்றும பலரும நடிக்கிறார்கள்-

இளையராஜா இசை அமைக்கிறார்-

(ம-10)

## டைரக்ஷன் துறைக்கும் தாவுகிறார் கமலஹாசன்

கமலஹாசன் ஓய்வு நேர பேச்சு மூச் செல்லாம பலமொழி வெற்றிப் படங்களின் கதை. திரைக்கதை அமைப்பு பற்றி அலசுவது தான். திரைப்பட கதை எழுதுவதில் நாட்டம் கொண்டுள்ள கமலஹாசன் விரைவில் டைரக்ஷன் துறைக்கும தாவினாலும தாவலாம என்கிறார்கள்.

அதேநேரத்தில் கதை வசனம எழுதி டைரக்டும செய்து கொஞ்சம கொஞ்சமாக சேர்த்ததை எல்லாம சொந்தமாக படம எடுக்க வந்ததில் விட்டுவிட்டு மனம வருந்தி நிற்கிறார்களாம மணிவண்ணன், சுந்தரராஜன், கலைமணி ஆகியோர்.

இந்நிலையில் கமலஹாசன் டைரக்டர் ஆனால் இவர்களின் நிலை என்ன?

மறுபுறத்தில் குழந்தைகளுக்கு ஏற்படும போலியோ வியாதிகளின் கொடுமையை விளக்கி கூறியிருக்கிறார் ரஜனிகாந்த். 'இப்படி ஒரு டாக்குமென்ரியில் நடித்தது கூட ஒரு சிறு பொதுத் தொண்டு தானே" என்றார் அவர்.

ஊமைவிழிகள் எடிட்டர் ஜெயசந்திரனின் தமபி கோபிநாத்தும இப்போது எடிட்டர் ஆகியுள்ளார்.

பாக்யராஜ் அவசர பொலீஸ் 100 என்ற படத்திற்காக தீவிரமாக உழைத்து வருகிறார்.

(ம-10)

# தியாக வடிவம்

— எம். எஸ். பெனடிக் —

எனது பன்னிரெண்டு வருட கால மருத்துவ சேவையில் இதற்கு முன் இப்படியொரு அனுபவத்தை நான் சந்தித்ததே இல்லை அன்பைப் பற்றி பலர் பல விதமான விளக்கங்கள் கொடுத்தாலும, அந்தச் சொல்லுக்கு உயிரூட்டிய ஒரு எட்டு வயதுச் சிறுவனின் செயல் என்னை மெய் சிலிர்க்க வைக்கிறது—

அந்த நிமிஷத்தில் எனக்கு ஏற்பட்ட உணர்வு சந்தோஷமா? ஆச்சர்யமா? அவனது தியாக மனப்பான்மைக்கு முன்னால் எனது படிப்பு, அறிவு, தொழில் எல்லாம எம்மாத்திரம என்ற தாழ்வு மனப்பான்மையா? அல்லது மனிதர்களுக்குள் இறை அன்பை சுவைத்து விட்ட பெருமிதமா?

எனக்குள் ஏற்பட்ட உணர்ச்சிகளுக்கு என்னாலேயே விளக்கம கொடுக்க முடியாத நிலையில் வார்ட் நமபர் பத்திலிருந்து வெளியே வருகிறேன்—

மறுபடியும மறுபடியும அவனது கேள்வி என் மனசுக்குள் ஒரு மௌன ராகத்தை இசைக்க வைக்கிறது—

"டாக்டர் நான் சாகிறதுக்கு இன்னும எத்தனை நிமிஷம இருக்கு? சொல்லுங்க டாக்டர் இன்னும எத்தனை நிமிஷத்தில் நான் சாவுவன்?

அந்தக் கேள்வியில் அவனை ஒரு மனிதப்பிறவியாக அல்ல; தெய்வத்தையே மனித உருவில் தரிசித்து விட்ட திருப்தி—

ஆஸ்பத்திரி முன்னால் காத்துக் கொண்டிருக்கும காருக்குள் நுழைந்து வார்ட் நமபர் பத்தைப் பார்க்கிறேன்—

பக்கத்திலுள்ள மாதா கோயிலில் உயிர்ப்பு விழா திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருப்பதை ஒலிபெருக்கி உணர்த்த மனசில் ஒரு சின்னக் கேள்வி எழுகிறது!

இன்று கொண்டாடப்படும உயிர்ப்பு விழாவிற்கும் நடந்து முடிந்த இந்த சமபவத்திற்கும ஏதாவது சமபந்தம இருக்கிறதா? நிச்சயமாக இருக்கிறது—

தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைக் காட்டிலும மேலான அன்பு வேறொன்றும இல்லை என இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு உரைத்த இயேசு

மெயின் ரோட்டை நோக்கி செலுத்துகிறேன் நடந்து முடிந்துவிட்ட அந்த சமபவம என் மனக்கண் முன்னால் வருகிறது—

ஒவ்வொரு வருஷமும இந்த ஈஸ்ட்டர் திருப்பலி பூஜையில் நான் பங்கெடுத்துக் கொள்ளத் தவறுவதேயில்லை— என்னதான் டாக்டராக இருந்தாலும மருத்துவ சக்திக்கும மேலான ஒரு தெய்வ சக்தி உண்டு என்பதில் அசைக்க முடியாத நமபிக்கை கொண்டிருப்பவன் நான்—

கோயிலிற்குப் போவதற்கு உடுத்திக் கொண்டு வீட்டிலிருந்த

செய்தி வரணும. இந்த வருஷம மட்டும எப்படி ஈஸ்ட்டர் திருப்பலியை மிஸ் பண்றது? முக்கியமான கிறிஸ்தவ பெருநாட்களின்

அந்த விநாடிகளில் நான் இப்படி யோசித்தாலும, அதை மறுகோணத்திலிருந்து பார்க்கவும மனசு தூண்டியது—


தொடுக்க துணிந்திருக்கிறான் இவன்—

நான் காரை ஸ்டார்ட் பண்ணி கோயிலிற்குப் போவதற்காக

நீங்க எத்தனை மணிக்கு வருவீங்க?"

எனக்கு தர்மசங்கடமாக இருந்தது— இந்த நேரத்திலயா இந்த

வழிபாட்டுச் சடங்குகளின் பங்கெடுத்துக் கொள்வது ஒரு கிறிஸ்தவனுக்குரிய கடமையில்லையா?



கடமையைச் சரிவரச் செய்வது கடவுளை வணங்குவதற்கு சமம்தானே!

"ஓ கே இன்னும பத்து நிமிஷத்தில வாரேன்" சொல்லி போனை வைத்துவிட்டு காரை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு விரைந்தேன்—

நிஜமாகவே அந்தப் பிள்ளை மஞ்சுவோட நிலைமை மோசமாகத்தான் இருந்தது— அவளை காப்பாற்றுவதற்கு ஒரே வழி சில மாதங்களுக்கு முன்பு இதே நோயால் பாதிக்கப்பட்டு குணமாகிய அவளின் எட்டுவயது சகோதரன் கோபியின் இரத்தத்தை கொடுப்பதுதான்—

அந்தக் கட்டிலில் ஒரு புறாக் குஞ்சைப் போல உறங்கிக் கொண்டிருக்கும மஞ்சுவையே வைத்த விழி வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்கும கோபியைப் பார்த்துக் கேட்டேன்—

"கோபி உன்னோட ரத்தத்தை கொடுத்தாத்தான் உன் தங்கச்சிய காப்பாத்தலாம நீ என்ன சொல்ற"?

அந்த அகன்ற கண்கள் ஒரு கணம அச்சத்தால் விரிந்தது. பிறகு தயங்கி... தயங்கி மெல்லிய குரலில் சொன்னான் "ஓ கே டாக்டர் நான் ரத்தம கொடுக்கத் தயார்"

அடுத்த ஒரு மணித்தியாலத்தில் இரத்தம செலுத்தி முடித்த பின்புதான் என்னை உறைய வைத்த அந்தக் கேள்வியை ஒரு விதக் கலக்கத்துடன் நடுங்கிக் கொண்டே கேட்டான்!

"டாக்டர் நான் சாகிறதுக்கு இன்னும எத்தனை நிமிஷம இருக்கு சொல்லுங்க டாக்டர் நான் நான் இன்னும எத்தனை நிமிஷத்துல சாவேன்?

அந்தக் கேள்வியில் யாரோ என்னை பெரட்டிலடித்தாற்போலிருந்தது— அப்போதுதான் உணர்ந்தேன்— இரத்தம கொடுப்பதை தனது வாழ்க்கையையே கொடுப்பதாக நினைத்திருக்கிறான் அவனது இரத்தம முழுவதையும எடுத்து கொடுப்பதாக எண்ணியிருக்கிறான்—

இன்னொரு உயிரைக் காப்பாற்ற தெரிந்தோ தெரியாமலோ தான் சாவதாக நினைத்துக் கொண்டு இரத்தம கொடுத்த இந்த பிஞ்சு உள்ளத்தின் அன்பு!

ஓ... ஜீசஸ்!

## பாரம் சுமத்திவிட்டேன்

— சோமலிங்கம் —

நினைப்பது எல்லாம கதைக்காமல் மன
நிமமதியோடு வாழுகிறேன்
பணத்துக்கு அடிமை ஆகாமல் தினம
பண்பைக் காத்து திரிகின்றேன்
குணத்தைப் பேணிக் காக்கின்றேன்
குலத்தை காத்து நடக்கின்றேன்
சினத்தைத் தின்று அடக்கி விட்டேன் இனி
தெய்வத்தில் பாரத்தை சுமத்தி விட்டேன்!

★

எண்ணி எதையும செய்கின்றேன் பல
எண்ணம கவலை அண்டாமல்
பண்ணும செயலில் திறமையுற்ற
பலிதம பெற்றே மகிழ்வுறவேன்
கண்ணில் காணும உயிரெல்லாம உயர்
கடவுள் வடிவில் மதிக்கின்றேன்
தின்னக் கிடைப்பதை உண்ணுகிறேன் தினம
தெய்வத்தில் பாரத்தை சுமத்தி விட்டேன்!

★

பாடுபட்டு உழைக்கின்றேன் எந்த
பழியும என்னைத் தீண்டாமல்
கூடுவிட்டு போகுமட்டும பல
கொடு நோய் வந்து தீண்டாமல்
நாடும பொருளை நல் வழியில்
நாளும செலவு செய்திடுவேன்
ஆடும வரைக்கும ஆடிவிட்டு நான்
அவனில் பாரத்தை சுமத்தி விட்டேன்!



சிறுகதை

இதைத்தான் அன்பு என்பதா? அன்பு என்பது உதடுகளால் உச்சரிக்கப்படுவதல்லை. இதயங்களால் மட்டுமே ஸ்பரிசிக்கப் படுவது என்பது எத்தனை சாத்தியமானது.

"தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதைக் காட்டிலும மேலான அன்பு வேறொன்றுமில்லை" என உரைத்த இயேசுவே நீ மானிட நேசத்திற்காக மரித்து உயிர்த்த இந்த நன்நாளை கொண்டாடுவது கோயிலுக்குச் சென்று வழிபாட்டுச் சடங்குகளில் பங்கெடுத்துக் கொள்வதோடு மட்டுமல்ல—

உமமை எமது வாழ்க்கையிலே பிரதிபலிக்க வேண்டும உன்னை எமது உள்ளத்தில் உயிர்பெறச் செய்ய வேண்டும— உன்னை பின்பற்றுவதாக இருந்தால் நாம தான் இன்றைய கிறிஸ்துக்களாக நிகழ்கால கிறிஸ்துக்களாக யதார்த்த உலகில் காணக்கூடிய கிறிஸ்துக்களாக வாழ வேண்டும, அப்போது தான் இந்த உயிர்ப்பு விழா ஒரு அர்த்தமுள்ள விழாவாக மாற முடியும—

ஓ.. இறைவா இந்த உண்மையைத்தான் அந்த குழந்தை கோபியின் உருவில் எனக்கு உணர்த்தச் செய்தாயோ என எண்ணியவாறு ஆலய முற்றத்தில் காரை நிறுத்திவிட்டு உயிர்த்த இயேசுவை ஆராதிக்க ஆலயத்துள் நுழைகிறேன்.

(மு)

# தாவரங்களின் வளர்ச்சி வேகம்

## அதிகரிக்க உதவும் இனிய சங்கீதம்

...வைத்த மட்டற்ற அன்பின் அடையாளமாக விலைமதிக்க முடியாத தன் உயிரையே பலியாக்கினார்-

இன்று! இன்னொரு ஜீவனின் வாழ்வுக்காக தன் உயிரைக்...

...போன் மணி அலறியது-

நர்ஸ் ரஞ்சனிதான் பேசினாள்

டாக்டர் 10 ஆம நமபர் வார்ட்டுல அட்மிட் பண்ணியிருக்கும மருங்கிற ஆறு வயசுப் பிள்ளைக்கு ரொமப சீரியசா இருக்கு...

# கை கொடுப்பான்

— அ. கௌரிதாசன் —

ஓலையாய் உள்ள வீட்டை
ஓலையை நீக்கி வீட்டின்
காலையும மாலையும நான்
காதலாய் உழைத்த தாலே,
ஓலையை நீக்கி வீன்டின்
ஒருபுறம ஓடு போட்டேன்
பாலையாய் வளஙகள் குன்றிப்
படுகிறேன் பெரிய பாடு!

★

காதலி தந்த செல்வம
கவினுறு மழலை மூன்று
நீதிலார் வழஙகு கின்ற
சிரிப்பினால் துயர்கள் தீரும
சாதனை! உலகோர் கண்ணில்
சஞ்சலம அற்ற வாழ்க்கை
வேதனை; எனையே விட்டால்
வேறெவர் அறிய வல்லார்?

★

வேதனம என்றெ னக்கோ,
வெகுபாதி கிடைப்ப தில்லை
மாதனம வயல்கள் தோட்டம
மற்றமோர் வரவு இல்லை
ஆதலால் வாழ்வில் இன்னல்,
அடிக்கடி வந்து சேரும
காதலாய் யான் வணஙகும
கடவுளே கை கொடுப்பான்!

★

இனிமையான சஙகீதம மனதுக்கு அமைதியை வழஙகும சக்தி கொண்டது. இதேபோல தாவரஙகளின் வளர்ச்சிக்கும இசை உதவுகிறது, இது பழைய விஷயம. ஆனால் லேட்டஸ்ட் என்னவென்றால் இசைக்கு இருக்கும இந்தச் சக்தியை மூலதனமாக்கி வர்த்தக ரீதியாக அதைப் பயன்படுத்தி பணம சமபாதிக்கத் தொடஙகியிருக்கிறார்கள் வெளிநாடுகளில் என்பது தான் இப்போது லேட்டஸ்ட்.


விவசாய பண்ணைகளில் ஒலிக்கச் செய்யவென ஸ்டீரியோ செட்டுகள் இப்போது ஜப்பானில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன, பீத்தோவன், மொஸார்ட் போன்ற சாஸ்திரிய இசையானாலும சரி, பீட்டில்ஸ் பாடல்களானாலும சரி, இச் செட்டுகள் மூலம ஒலிக்கச் செய்வதன் மூலம தாவரஙகளின் வளர்ச்சி வேகத்தை அதிகரிக்கச் செய்ய முடியுமாம்.

முறைக்கு 15 நிமிடஙகள் என்ற ரீதியாக தினத்துக்கு மூன்று தடவைகள் தாவரஙகளுக்கு இசை விருந்து வழஙக வேண்டுமாம.

கட்டுக்கோப்பான ஸ்டீரியோ அதிர்வுகள் தாவரஙகளின் போட்டோ சிந்தசிஸ் எனப்படும சூரிய சக்தியை ரசாயன சக்தியாக மாற்றும நடவடிக்கையை ஊக்குவிக்கிறதாம.

நோயாளர்கள் சுமமா படுக்கையில் படுத்திருக்கும போது இனிமையான மெல்லிய இசையை அஙகு ஒலிக்கச் செய்வது அவர்களிடையே இதமான உணர்வை ஏற்படுத்துகிறது. வீட்டுப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, நவீன வாழ்க்கை முறை ஏற்படுத்தக் கூடிய மன எரிச்சல், பளு ஆகியவற்றை அதற்கென உள்ள விசேஷ மூட் இசையை ஒலிக்கச் செய்வது மூலம அகற்ற முடியும என்கிறார்கள் ஜப்பானிய மனோதத்துவ நிபுணர்கள்,

டோக்கியோ யூஹாமா நகர் கல்லூரி ஆஸ்பத்திரியில் ஓய்வாக இருக்கும எலும்பு நோய்க்காளான வியாதியஸ்தர்கள் கேட்பதற்கென நல்ல இசையை ஒலிக்கச் செய்கிறார்கள். இதை டாக்டர்கள் சரீர சானிக் முறை (பொடி சானிக் சிஸ்டம) என்ற பெயரிட்டு அழைக்கிறார்கள்.



ஒருவருக்கு சத்திர சிகிச்சை நடைபெறும போது அவருடைய இரத்த அழுத்தம பத்து சதவீதத்தால் சரீர சானிக் முறையைப் பயன்படுத்துவது மூலம குறைக்க முடிகிறது என்கிறார்கள் இஙகுள்ள ஜப்பானிய டாக்டர்கள்.

ஜப்பானில் மன அமைதியூட்டும நிலையஙகள் அமைக்கப்பட்டுள்ளன. பலர் இந்த மன அமைதியை வேண்டித்தானே குடியிலும போதைப் பொருட்களிலும தம பணத்தையும நேரத்தையும செலவிடுகின்றனர்!,

இதே மன அமைதியை நீஙகள் இந்த நிலையஙகளில் இசை மூலம பெற முடியும. இஙகுள்ள சாய்வான இருக்கைகளில் ஓய்வான நிலையில் உடலை வளர்த்திக் கொண்டு கேட்கும கருவிகளைக் காதில் பொருத்திக் கொண்டீர்களானால் அருமையான தேர்ந்தெடுக்கப்பட்ட இசையை உஙகள் காதுகளில் தவழவிடுகிறார்கள்.

மஙகலான வெளிச்சம கொண்ட அறையில் கறுப்புக் கண்ணாடியையும அணிந்து கொண்டு இந்த இசையை கேட்கும போது மனம இளகி துன்பம, பளு எல்லாம பறந்து புதிய உத்வேகம மனதில் தோன்றி விடுகிறது.

இது ஏன் தெரியுமா? உஙகளுக்கு விருப்பமான பாடல் அல்லது சரியான அதிர்வுகளைக் கொண்ட இசையானது மூளையைக் கட்டித் தழுவும போது மூளை அல்பா அலைகளை வெளிவிட ஆரமபிக்கிறது. இந்த அல்பா அலைகள் அமைதியைத் தோற்றுவிக்கக் கூடியவை.

மனதின் இயக்கஙகளைக் கட்டுப்படுத்தி எண்ணஙகளை ஒருமிக்கச் செய்யக் கூடியவை, அதாவது நவீன தியான முறை என்று இதைத் தைரியமாக நாம அழைக்கலாம!

சோனி நிறுவனம காமபெக்ட் டிஸ்க்கில் இந்த அல்பா இசையைப் பதிவு செய்து விற்பனை செய்து வருகிறது. அதாவது இப்போது இந்த அல்பா சிகிச்சையை வீட்டிலேயே செய்து கொள்ளலாம.

இருதயத்துக்கான சிறந்த மருந்து என்ற பெயருடன் இந்த அல்பா இசைத் தட்டுகள் விற்பனையாகி வருகின்றன. மேலும வர்த்தகர்களுக்கான இசை என்றும வேலை செய்யும பெண்களுக்கான இசை என்றும ஒவ்வொரு துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் மன அமைதியை உறுதிப்படுத்தும இசைத் தட்டுகள் வெளியாகியுள்ளன ஜப்பானில்!

அலுவலகஙகளிப் இனிமையான இசையை மெல்லியதாகப் பரவ விடுவது மூலம வேலை செய்வோரின் ஆற்றலை அதிகரிக்கச் செய்ய முடியும என்பது விஞ்ஞான ரீதியாக நிருபிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பல ஜப்பானிய அலுவலகஙகளில் இனிய இசை ஒலிக்கத் தொடஙகியிருக்கிறது.

இசையாவது மனதில் அமைதியை உண்டாக்குவதாவது என்று இசையைக் கேட்டதும காதுதூரம ஓடுபவர்கள் நமமில் சிருக்கத்தான் செய்கிறார்கள். இசை தலைவலியைத் தான் உண்டாக்கும என்ற இவர்கள் சாதிப்பது வழக்கம.

இவர்கள் சொல்வதில் உணமை இல்லாமல் இல்லை. ஏனென்ல் தெருவோர சைவ ஹோட்டல்களிலும திருவிழாக்களிலும அலற விடப்படும கர்ணகடூர பாடல்களையும, மினி பஸ்களில் பொறுமையைச் சோதிக்கும "இசை"யையும கேட்டு வருகிறவர்கள் இசை என்றதும பிடறியில் பாதமபட ஓடுவதில் ஒன்றும வியப்பில்லைதான்!

(த-032)

# பழைய ஆண் அழகன்

## இன்று அழகு ராணி!

காளையரைச் சுண்டி இழுக்கும கட்டான உடல் அழகிக்கு அழகுராணிப் பட்டம கிடைத்தது- ஆனால் அவள் ஒரு பழைய ஆண் அழகன் என்பது எவருக்கும தெரியாது!

28 வயதான அந்த இத்தாலிய அழகியின் நெளிவு சுளிவுகளில் மனதைப் பறி கொடுத்து மயங்கியவர்களுக்கு அதிர்ச்சிதான் ஏற்பட்டது!

ஜினாகாஸ் என்னும கட்டழகியை இங்கு காண்கிறீர்கள். இவர் மொரிசியோ என்னும பெயரில் ஒரு சமயம கட்டழகனாகக் காட்சியளித்தவர்!

ஆணாகப் பிறந்த இவர் பால் மாற்ற சத்திர சிகிச்சை செய்து கொண்டு பேரழகியாக மாறி இப்படிக் காட்சியளிக்கிறார்!

தன் பெண்மையை பலர் முன்னிலையில் நிரூபிக்க விரும்பிய இவர் இத்தாலிய அழகிப் போட்டியொன்றில் கலந்து கொண்டு யாரும சந்தேகப்படாத வகையில் அழகியாகத் தெரிவானார்-

இப் போட்டியில் நடுவர்களாக விளங்கிய பத்துப் பேரும ஏகமனதாக "முன்னாள்" ஆண் அழகனை வெற்றி பெற்ற அழகியாகத் தேர்ந்தெடுத்தனர்-

ஆனால் கடைசி நேரத்தில் விஷயத்தைத் தெரிந்து கொண்ட போட்டி ஏற்பாட்டாளர்கள் பட்டத்தை பறித்தெடுத்தனர்!

இவர் ஒரு சமயம ஆணாக இருந்தவர் என்ற விஷயம எப்படி வெளியே தெரியவந்தது என்பது இன்னுமொரு சுவாரஷ்யமான விஷயம!

ஆணாக இருந்த சமயம இவர் ஒரு தடவை பச்சை குத்தும இடமொன்றுக்குச் சென்று உடலில் பச்சை குத்திக் கொண்டார்.

அப்போது அவருக்கு பச்சை குத்தி விட்டவரது உதவியாளரே அன்றைய அழகுராணிப் போட்டியில் சிகை அலங்காரத்துக்குப் பொறுப்பாக இருந்தார்-

அழகுராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரது பின்புறத்தில் தனக்குப் பரிச்சயமான பச்சை



# மணம் வீசாத மலர்

## நீண்ட காலம் வாடாது

நெதர்லாந்து எப்படி டியூலிப் மலர் ஏற்றுமதிக்கு பேர் போனதோ அதேபோல மொரோக்கோவும ரோஜா மலர் ஏற்றுமதிக்கு பேர்போன ஒரு நாடு-

இந் நாட்டின் மரகேஷ் என்ற பிரதேசத்தில் பெருமபாலான விவசாயிகள் ஏற்றுமதிக்கென விசேஷமாக ரோஜா மலர்களை வளர்க்கிறார்கள்-

இம மலர்கள் உலகெங்கும பல நாடுகளுக்கு விமான மூலம அனுப்பி வைக்கப்படுகின்றன

கடந்த பத்தாண்டு காலப் பகுதியில் 80 தொன்னாகவிருந்த மலர் உற்பத்தி இப்போது இரண்டாயிரத்து 300 தொன்களாக அதிகரித்துள்ளது-

ஆனால் இந்த மரகேஷ் ரோஜா மலர்கள் மணம வீசுவதில்லை- அழகு மாத்திரமதான் வேண்டுமென்றேதான் இவர்கள் மணம வீசாத மலர்களை உற்பத்தி செய்கிறார்கள்-

மணம வீசும இனங்கள் இரண்டு நாட்களில் வாடிவிடுமாம- ஆனால் மணமற்ற இந்த மரகேஷ் மலர்கள் ஒரு வார காலம வரை பொலிவுடன் இருக்கக் கூடியவை!

(ம—032)

# இளவரசருக்கு வாய் நீளுகிறதா?

பிரிட்டிஷ் மகாராணியாகவோ அல்லது அரசராகவோ வீற்றிருப்பது மிகவும கௌரவம மிக்க ஒன்றானாலும மிகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டியது முக்கியம-

சமீபத்தில் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸ் லண்டனில் ஆற்றிய உரையொன்றில் மலேஷியாவின் சரவாக் மாநிலத்தில் வாழ்ந்து வரும பெனான்ஸ் என்றழைக்கப்படும பழங்குடி மக்களை அந் நாட்டு அரசாங்கம படுகொலை புரிந்து வருகிறது என்றும இம மக்கள் மீது சர்வதேச ரீதியிலான அனுதாபம காட்டப்படுவது அவசியம என்றும குறிப்பிட்டு விவகாரத்தில் சிக்கிக் கொண்டார்-

இதைக் கேட்டு மலேஷிய அரசாங்கம வெகுண்டெழுந்தது இளவரசர் இப்படி ஒரு குற்றச் சாட்டைச் சுமத்துவது சரியா என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு கோலாலமபூரில் உள்ள இங்கிலாந்து தூதரகத்திடம தமது கடும ஆட்சேபனையைத் தெரிவித்துக் கொண்டது!

[ம—032]



பண்டைய உயிரினங்களின் எஞ்சிய சிதைவுகளை உயிரியல் ஆய்வாளர்கள் பாதுகாத்து வருகிறார்கள்- 17 ஆம நூற்றாண்டைச் சேர்ந்த ஆங்கில போர் வீரர் ஒருவரின் கையெலும்பின் ஒரு பகுதியை பொடி செய்து அதை நைட்ரஜன் அமிலத்தில் பாதுகாத்து வைக்கிறார் இவர்-

ஏழாயிரம ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவரது மக்கிப் போன மூளையும இந்த நூதனசாலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது- [ம—032]

# ஜோன் கொலின்சுக்கு வழுக்கை விழுகிறதா?

டினஸ்டி தொலைக் காட்சி தொடரில் பல வர்ண ஆடைகளில் தோன்றி ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும ஜோன் கொலின்சின் வயது 56- அவருக்கு முடி உதிர்ந்து வழுக்கை விழவும ஆரமபித்துவிட்டது! படத்தில் நாம காண்பதெல்லாம விக் அணிந்த அவரது தலையையே-



தின் பின்னர் சாசா கபோரவுடன் இனிமேல் பேச்சுக்கே இடமில்லை என்று உறவை வெட்டி முறித்திருக்கிறார், கொலின்ஸ்!

[ம—032]

# சோவியத் விண்கலத்தில் ஈரானியர்

ஈரானுக்கும சோவியத் யூனியனுக்கும இடையில் தற்போது நடைபெற்று வரும பேச்சுவார்த்தை வெற்றி பெற்றால் 1993 ஆம ஆண்டில் ஈரானிய வீரரொருவர் சோவியத் விண்கலத்தில் அண்டவெளி செல்லலாம!

இரு நாடுகளுக்கும இடையிலான பொருளாதாரக் கமிஷன் இவ்விஷயத்தை தெஹ்ரானில் ஆராய்ந்துள்ளது- கூட்டு அண்டவெளிப் பிரயாணம குறித்து பல நாடுகள் சோவியத் யூனியனை அணுகியுள்ளன!

# குட்டித் தூக்கம் நல்லதுதான்!

கர்புர் என்று கர்ண கடூரமாகக் குறட்டை விடுகிறவர்கள் மறு தினத்தை எரிச்சல் மற்றும கோபத்துடன்தான் கழிக்க வேண்டியிருக்குமாம. ஏனெனில் கிரமமான மூச்சு விடுதலைக் குறட்டை தடுத்து விடுவதோடு ஆழ்தூக்கத்தையும கெடுத்து விடுகிறதாம.

ஆனால் பகலில் சிலர் குட்டித் தூக்கம போடுகிறார்களே அது ஒன்றும கெட்ட பழக்கமில்லை.

# மன மாற்றம்

ஹரே ராமா, ஹரே திருதந்தி ஸ்ருமம நாராயண கிருஷ்ணா இயக்கத்தைச் சேர்ந்த ஜீயர் சுவாமிகள், ஆந்திராவில் செஞ்சலகுடா சிறைக்கு விஜயம செய்து, கைதிகளுக்கு அறிவுரை கூறினார்.

"இனி கழிக்க வேண்டிய நாட்களை நல்லபடியாகச் செலவழியுங்கள்!" என்று அறிவுரை கூறினார். இவருடைய அறிவுரையால் மெய்மறந்து போன ஒரு கைதி, தான் செய்த தவறுக்குப் பிராயச்சித்தமாக, தன் உள்ளங்கை மீது ஜீயர் சுவாமிகளை நடக்கச் சொன்னார். அவரும நடந்தார்!


(ம—10)

# ஆபரேஷன்

பிராந்திய நகரமான விஸ்ஸா மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு விசித்திர ஆபரேஷன்

அழகுராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரது பின்புறத்தில் தலக்குப் பரிச்சயமான பச்சை குத்தப்பட்ட உருவத்தைக் கண்ட அவர் அழகியின் அந்தரங்க உண்மையை உணர்ந்து தொண்டார் ஜெனாதாஸ் அழகிப் பட்டம் பெறுவதையும் தடுத்து நிறுத்தினார்!

[ம—032]



ஆராய்ந்துள்ளது- கூட்டு அண்ட வெளிப் பிரயாணம் குறித்து பல நாடுகள் சோவியத் யூனியனை அணுகியுள்ளன!

ஜப்பான், பிரிட்டன், ஆஸ்திரியா மற்றும் பிரான்ஸ் நாடுகள் சோவியத் சிவிலியன் அண்ட வெளி நிறுவனமான "கிளாவ் கொஸ்மோஸ்" ஸ்தாபனத்துடன் கூட்டுப் பிரயாணம் குறித்த ஒப்பந்தம் செய்துள்ளன-

[ம]



ஜோன் கொலின்ஸ்

இத் தகவலை அதாவது கொலின்ஸ் பரம ரகசியமாகக் காத்துவந்த இவ்விடயத்தை சமீபத்தில் அமெரிக்கத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் அவிழ்த்துவிட்டவர் சா சா கபோர!

அமெரிக்கப் பொலீஸ்காரர் ஒருவரைக் கன்னத்தில் அறைந்து உலகப் புகழ் பெற்ற இந்த சாசாவும ஜோன் கொலின்சும நெருங்கிய சிநேகிதிகள்-

ஆனால் வழுக்கை விவகாரத்

ஆழ்தூக்கத்தையும் ... விடுகிறதாம.

ஆனால் பகலில் சிலர் குட்டித் தூக்கம போடுகிறார்களே அது ஒன்றும கெட்ட பழக்கமில்லை. ஆரோக்கியமான பழக்கமதான் என்கிறார்கள் தூக்க ஆய்வாளர்கள்.

பகலில் ஒரு குட்டித் தூக்கம போடுகிறவர்கள் தொடர்ந்து உற்சாகத்துடன் பணியாற்றும தெமபைப் பெறுகிறார்கள் என்று கூறுகின்றனர் இந்த ஆய்வாளர்கள். பிரேம பண்ணி சுவரில் மாற்றி வைக்க வேண்டிய தகவல் அல்லவா இது!

(த-032)

## ஆபரேஷன்

பிராந்திய நகரமான விலிஸ்ஸா மருத்துவ ஆராய்ச்சி நிலையத்தில் ஒரு விசித்திர ஆபரேஷன் நடைபெற்றது!

ஆபரேஷனின் பின்பு நோயாளியின் கால் அரை மீட்டர் நீண்டது இது பற்றி மருத்துவ நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தது-

குழந்தைப் பருவத்தில் இந்த நபரின் வலது கால் அரை மீட்டர் குறைவாக இருந்தது- இதனை நிவர்த்தி செய்ய நாம செய்த ஆபரேஷன் முயற்சி வெற்றியளித்தது என்று அதிகாரி கூறினார்!

# போதைப் பொருள் ஊடுருவலுக்கு ஆதரவு தருபவர்கள் யார்?

ஆப்கானிஸ்தானில் இருந்து ஈரானுக்கு 200 கிலோ கிராம அபினைக் கடத்திச் செல்ல முயன்ற ஈரானியர்கள் சமீபத்தில் இங்கு கைது செய்யப்பட்டனர்.

இதேவேளையில் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்டுவரும சகஜ நிலைமையை பிரசாரம செய்வதற்குப் பதிலாக மேற்குலகம ஆப்கான் - பாகிஸ்தான் எல்லைப் பிராந்தியத்தில் போதைப் பொருள் பாவிப்பு, கடத்தல் ஆகியவற்றை ஊக்குவித்து வருகிறது என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

பெஷ்வார் நகருக்கு அருகே போதைப்பொருள் பெருமளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. 50 கிலோ எடைகொண்ட போதைப்பொருள் சாக்குகளை இங்கு வாங்க முடியும. பிரிட்டிஷ் பத்திரிகை "இன்டிபென்டன்ட்" கூறுகிறது.

மேற்படி போதைப்பொருள்களை விற்கும சந்தைகள் கிளர்ச்சிக்காரர்களின் முகாமகளைக் கொண்ட இடங்களில் உள்ளதாகவும பத்திரிகை கூறியுள்ளது,

பஷ்டு இனம பெருவாரியாக வாழும பகுதி இவ்வருடத்தில் ஆயுத விற்பனையின் ஒரு மையமாகவும, போதைப்பொருள் வர்த்தக - கடத்தல் கேந்திரமாகவும அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன என்று முஜாஹித்தீன் அரசாங்க அதிகாரி ஹிதலாத் அர்கால் கூறியதாக பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

போதைப் பொருள் கடத்தல் உற்பத்தி நடவடிக்கைகளை ஒழிக்க பல சர்வதேச இயக்கங்களின் ஒத்தாசையினை நஜிபுல்லாஹ் வேண்டி இருப்பதாகவும இன்டிபென்டன்ட் எழுதுகிறது.

அமெரிக்க ஜனாதிபதியும, பிரிட்டிஷ் பிரதமரும ஆப்கான் அமைதியை குந்தகப்படுத்த எடுக்கும நடவடிக்கைகள் லண்டனிலும வாஷிங்டனிலும போதைப் பொருள் ஊடுருவலை அதிகரிக்கும எனவும இன்டிபென்டன்ட் எழுதுகிறது.

(ம)

## 144 வயது வரை வாழ்ந்த பாட்டி

ஜெடெலா கவுஸ் என்ற அமமணி தனது 144ஆவது வயதில் சமீபத்தில் இறந்து விட்டார். இவருடைய 108 வயது மகனும, 98 வயது மகளும உயிருடன் இருக்கிறார்கள்.

கடந்த பத்து ஆண்டுகளாக கவுஸ் கண் பார்வை இல்லாமல் வாழ்ந்து வந்தார். 144 வயது வரை ஒரு நாள் கூட டாக்டரிடம இவர் போனதில்லை.

(ம-10)

## தாலியை கூவி விற்கிறார்கள்

பமபாய் மின்சார ரயிலில், லேடீஸ் கமபார்ட்மென்டில் "லைசன்ஸ், லைசன்ஸ்" என்று கூவி ஒரு பொருளை விற்பனை செய்கிறார்கள். அந்தப் பொருள் என்ன தெரியுமா? தாலி! இதை ஏன் கூவிக் கூவி ஓடும ரயிலில் விற்கிறார்கள் என்ற விவரமதான் தெரியவில்லை.

(ம-10)



பிறரைச் சிரிக்க வைத்து மகிழ்விக்கும "கிளவ்ன்ஸ்" என்னும கோமாளிகள் எல்லாம ஆண்டில் ஒருநாள் ஒன்று கூடி அவர் தம மனதுக்குள் அழுகிற நிகழ்ச்சியொன்று வருடந்தோறும நடந்து வருகிறது கிழக்கு லண்டனில்! இங்கிலாந்தின் தலைசிறந்த கோமாளி ஜோசப் கிரிமால்டி 152 ஆண்டுகளுக்கு முன் மரணத்தைத் தழுவினார்- அவரின் நினைவாக கிழக்கு லண்டன் ஹோலி டிரினிட்டி தேவாலயத்தில் ஆண்டு தோறும ஏராளமான கோமாளிகள் ஒன்று கூடி, நினைவஞ்சலி செலுத்துகிறார்கள்!

[ம—10]

# சித்ரா வந்தாள்



சித்திரைப் புத்தாண்டு நெருங்குவதால் ரமேஷின் நினைவுகள் பல வருடங்களுக்கு முன் நடந்த அந்த பழைய சமபவத்தை ஞாபகமூட்டின.

அது பழைய சமபவமதான்— எனினும ரமேஷைப் பொறுத்தவரை அது ஒவ்வொரு புத்தாண்டு பிறப்பின் போதும நேற்று நடந்தது போல் அவன் நெஞ்சினில் வந்து செல்கிறது.

அதனை மறக்க முயற்சி எடுத்தாலும அவனால் அதை மறக்கவே முடியவில்லை. ஏனெனில் அது அவனின் முதல் காதல்— அந்த இனிமையான நாட்களை எண்ணிப் பார்க்கிறான்.

★

ரமேஷ் நகைக் கடையொன்றில் விற்பனையாளனாக கடமையாற்றினான். சித்ரா புடைவைக் கடையொன்றில் விற்பனையாளராக கடமையாற்றினாள்.

சித்ரா தினமும காலையும மாலையும ரமேஷ் வேலை செய்யும நகைக் கடையைத் தாண்டித்தான் செல்வாள்.

வந்தா சமாளிச்சிக்கலாம" என்று அவளின் வருகைக்காக காத்திருந்து ஏமாற்றம அடைந்தான்.

"ஒரு வேளை நாளைக்கு பெற்றோர்களை கூட்டிக்கிட்டு வருவாளோ?" என கலக்கமடைந்தான்.

மறுதினம காலையில் வழக்கமாக செல்லும நேரத்தில் அவளைக் காணக் கிடைக்கவில்லை. ஆனால் அவளிடமிருந்து கடிதம ஒன்று வந்திருந்தது.

ரமேஷுக்கு அதைப் பார்த்த பிறகுதான் நிமமதி வந்தது. இவ்வாறாக வாழ்த்து மடலில் மலர்ந்த உறவு, வளர்பிறையாக வளரத் தொடங்கியது.

இதனால் அவர்கள் இருவரும

சின்னஞ் சிறுகதை

இருந்து திருமபினான். முதல் வேளையாக சித்ராவை சந்தித்து அவளோடு கதைக்க வேண்டுமென்ற ஆசையோடு அவன் சித்ராவை சந்திக்கச் சென்றான்.

ஆனால் அவனுக்கு பெருத்த ஏமாற்றம காத்திருந்தது. அவள் அன்பாக கதைப்பாள் என்று எதிர்பார்த்து வந்தான். ஆனால் அவளோ சீறிப் பாய்ந்தாள்.

"தயவு செய்து என்னை மன்னித்து விடுங்க... என்னை மறந்துட்டு நீங்கள் நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம முடித்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

அந்த அரை நிமிட நேரத்தில் அவள் அள்ளி வீசிய ஐந்தாறு வார்த்தைகளால் அவன் நிலை குலைந்து போனான்.

இப்படி கூறியவள் மறுகணம தனது கைப்பையிலிருந்து ரமேஷின் நண்பர்கள் எழுதிய மடலை எடுத்து ரமேஷிடம கொடுத்தாள்.

அதை வாங்கிப் படித்த ரமேஷ் திகைத்துப் போனான்.

"பிளீஸ் சித்ரா... என்னை நமபு, இதெல்லாம என் நண்பர்கள் திட்டமிட்டு செய்திருக்க வேண்டும.

"வா நாங்களே போய் கேட்டுப் பார்க்கலாம" என்று கூப்பிட்டதும: அவள் வருவதற்கும மறுப்புத் தெரிவித்து விட்டாள்.

"தயவு செய்து இனி என்னை பார்க்க வர வேண்டாம. என்னை மறந்திடுங்க"

"சித்ரா இதுதான் உன் இறுதி முடிவா?"

"ஆமா, நான் எடுத்த இந்த முடிவை மாற்றவே முடியாது"

அவள் எடுத்த முடிவில் உறுதியாகவே இருந்தாள். எனவே மேலும அங்கிருப்பதில் பயனில்லை என உணர்ந்த ரமேஷ் அந்த இடத்தை விட்டு உடனடியாக நண்பர்களிடம சென்று கடிதத்தைக் காட்டி விசாரித்தான்.

"அடேய் ரமேஷ்... அவள் உன் மேல வைத்திருக்கிற அன்பு உண்மையானதா, அவளின் காதல் தூய்மையானதா? என்று அறியத்தான் நாங்கள் இப்படி செய்தோம.

இப்படி நடக்கும என்று நாங்கள் கனவில கூட நினைக்க இல்லடா... எங்கள மன்னிச்சிருடா ரமேஷ்..." என்று கூறி தப்பித்துக் கொண்டார்கள்.

ஆனால் அவன், அவள் நினைவிலேயே சுழன்று கொண்டிருந்

# பாம்பு படும் பாடு



கு. வாசுகி

கருக்கலாகிப் போகும நேரம தெருவாசல் பக்கம பரமர் வீட்டு நாய் "அதார்" நீண்ட நேரமாக வாயோயாமல் குரைத்தபடியே நின்றது—

மனைவி மங்கம்மா குசினிக்குள் ஆட்டாமாவோடு பொக்சிங் பழகிக் கொண்டிருந்தாள்— பிள்ளைகள் பட்டாளம வாஹினியில் பொன்மாலைப் பொழுதை எதிர்பார்த்தபடி தகப்பனுக்குப் பயத்தில் பாடப் புத்தகங்களை மடியில் விரித்து வைத்துக் கொண்டிருந்தார்கள்—

பரமர் வீட்டிற்குள் மூக்குக் கண்ணாடியின் கழன்று போன பிறேம ஓட்டைக்குள் குண்டூசியை நுழைக்க கடும பிரயத்தனம பண்ணிக் கொண்டிருந்தார்—

ஊசி முனைக் காதிற்குள் ஒட்டகத்தை நுழைத்தாலும இந்த பிறேம ஓட்டைக்குள் குண்டூசியைச் செலுத்த முடியவில்லையே! என்று புறுபுறுத்த பரமரின் காதில் நாயின் குரைப்புச் சத்தம எரிச்சலை உண்டு பண்ணியது—

வீட்டுக்குள் நின்றவர் விசுக்கென வெளியே வந்தார்—

என்னடியம்மா வாசல் பக்கம

பரமர் மீண்டும நாயின் பக்கம ஓடினார்—

இதற்கிடையில் மண்டபத்திற்குள் கொலுவிருந்த பனங்குட்டான் சைசு களெல்லாம வெளியே ஓடி வந்து விட்டார்கள்—

பரமர் கைகளில் தடியில்லாமலேயே நாய்க்குப் பின்னால் நின்று சலாவரிசை எடுக்கத் தொடங்கினார்—

"அமமோ நல்ல பாமபு! நல்ல பாமபு! ஓடி வந்து பாருங்க! என்று மூத்தவன் முகுந்தன் தாயைக் கூப்பிட்டான்—


அந்தளவில் மங்கம்மா மாப் பிசைந்த கை கழுவாமலேயே

பாமபை அவள் கண்கள் கண்டதும அவளையுமறியாமலேயே கரங்கள் தலைக்கு மேல் குவிந்தன.—

"நாகராசாவே, இனிமேல்




இவர் குடிக்க மாட்டார்! மாசாமாசம சமபளம் எடுத்த கையோடு ஓடி வந்து முழுவதையும என்னிடமே தருவார்! அவரை ஒன்றும செய்து போடாத! வயிற்றிலிருக்கிற



பதினோராவது பிள்ளைக்கு நாகமணியென்று பெயர் வைக்கிறன்— நீ போ ராசா போ"

இதைக் கேட்டதும பரமருக்கு ஆத்திரமாத்திரமாக வந்தது—

"பாமபுக்கு முன்னால உனக்

துக்கு! பொழுதுபட்டுப் போகுது பிறகு ஊட்டுக்குள்ள பாமபு பூந்தாலும தெரியா! என்னத்தடி பாத்துக் கொண்டு நிக்கிறயள்? ஓடிப் போய் ஒரு கமபத்தடிய எடுத்துக் கொண்டு வாருங்கவன் மூதேசிகளே!"

பாமபை விட பரமருக்கே எல்லோரும பயந்து நடுங்கியபடி தடியெடுக்க ஆளுக்கு ஒவ்வொரு பக்கமாக தலை தெறிக்க ஓடினார்கள்—

மங்கமமா மாத்திரம தலையில் குவித்த கையை எடுக்காமல் பரமருக்குப் பக்கத்திலேயே நின்றாள்

நீ என்னடி சாமிக்குத் தீபம காட்டக்குள்ள நிக்கிறப்ப நிக்கிறா! கையக் கீழ போடு! என்று பரமர் கத்தியதும மங்கமமா சொன்னாள்: "இப்ப நான் கும்பிடக்கிறபிடல்ல! நேரத்தோட கும்பிட்டகைதான்— ஆட்டாமா பசை ஒட்டிப் பிடிச்சிருக்கு!"

"சைக் நீயும மனைவியா? தசரதன்ட பெண்டாட்டி தேர்ச்சில்லுக்குள்ளயே விரலை வச்சி கணவனைக் காப்பாத்தினாளாம! நீ என்னடாண்டா தலையிலவெச்ச கைய எடுக்கேலாம நிக்கிறா? தள்ளி நில்! எங்கடி அந்த உலக்க?" என்றபடி பரமர் குசினிப் பக்கம ஓடினார்—

இதற்கிடையில் மண்டபத்திற்குள் தடியெடுக்க ஓடிச் சென்ற இரண்டு பெட்டைகளும ஆளுக்காள் இழுபறிப்பட்டுக் கொண்டு நின்றார்கள்—

"அப்பா இங்க பாருங்க அக்காச்சி தமபுக்கட்ட உடுறாளில்ல! விடன்டி கைய!"

"நான் விட மாட்டன்! தமபுத்தடிய நான்தான் முதல்ல தொட்டனான்! நான்தான் அப்பாட்டக் கொண்டு போய்க் கொடுக்க வேணும!"

உலக்கையைக் காணாமல் குசினியை மூன்று நான்கு தடவைகள் சுற்றி வந்த பரமருக்கு பிள்ளைகளின் தமபுத்தடிச் சண்டையைக் கண்டதும இரணிய அவதாரம எடுக்க வேண்டும் போல

...த்தான் செல்வாள்.
தினமும இவளது நடை, உடை. பாவனைகளை அவதானித்து வந்த அந்த இளம காளையின் மனதினுள் அவளைப் பற்றிய எண்ணங்கள் வளர்ந்து வந்தன.

மலரை வண்டு சுற்றுவது போல் ஒரு நாள் சித்ரா வேலைக்குப் போகும போது அவளைப் பின்தொடர்ந்து சென்று அவளது கடை விலாசத்தை அறிந்து, கடிதம ஒன்றையும. சித்திரைப் புத்தாண்டு வாழ்த்து மடல் ஒன்றையும அனுப்பினான்.

ரமேஷ் அனுப்பிய கடிதம மறுநாள் சித்ராவின் முதலாளியின் கையில் கிடைத்தது.

ரமேஷ் சித்ராவுக்கு அனுப்பிய கடிதத்தின் மேலுறையில் ஒரு பெண் பிள்ளையின் பெயரையே குறிப்பிட்டிருந்ததால், முதலாளி சந்தேகப்படாமல் கடிதத்தை அவளிடம கொடுத்து விட்டார்.

தோழிகளின் ஒத்துழைப்போடு முதலாளியிடமிருந்து கடிதத்தைப் பெற்றுக் கொண்டவள், அதிலுள்ள விடயங்களை அறிந்து அதிர்ச்சி அடைந்தாள்.

எனினும "ரமேஷ் பதிலை எதிர்பார்த்து காத்திருப்பான். அவனை ஏமாற்றக் கூடாது" என்பதற்காக அவளும வாழ்த்து மடலுடன் கடிதமொன்றை இணைத்து அனுப்பினாள்.

இங்கே ரமேஷ் பயந்து பயந்து அவளின் வரவை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தான்.

"அவ கடிதத்தை பார்த்து கொதித்துக் கொண்டிருப்பாள்" எனவே சில நேரம நமம முதலாளி கிட்ட வந்து உண்மையை சொன்னாலும சொல்லிடுவாள் முதலாளி இல்லாத நேரமா



மாலை வேளையில் தனிமையில் இனிமை காண காதல் பூங்காவனங்களுக்கும, கால்பேஸுக்கும செல்வது வழக்கம.

இவ்வாறு இருவரும ஒரு நாள் கால்பேஸுக்கு சென்று விட்டு வீடு திருமபினர். அங்கே உடனடியாக ஊருக்கு வருமபடி ரமேஷுக்கு கடிதமொன்று வந்திருந்தது.

இதனைப் பார்த்த ரமேஷ் போக மனமின்றி சித்ராவிடம விடை பெற்றுக் கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்றான்-

தீவிரவாத நடவடிக்கைகளால் திடீரென யாழ் — கொழுமபு போக்குவரத்துச் சேவைகள் தடைப்பட்டன- இதனால் அவன் சித்ராவிடம கூறிவிட்டுச் சென்ற திகதியில் திருமபி வர முடியாமல் போய்விட்டது-

இதனை அறியாத சித்ரா ரமேஷைக் காணாது கலக்கமடைந்தாள்- ரமேஷ் தன்னை ஏமாற்றி விட்டு சென்றிருப்பார் என ரமேஷ் மீது ஆத்திரம கொண்டாள்-

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நகைக் கடையில் ரமேஷ் உடன் வேலை செய்யும சக நண்பர்களும சேர்ந்து ரமேஷ் கையாண்ட வித்தையைக் கையாண்டு சித்ராவுக்கு கடிதம எழுதத் தொடங்கினார்கள். இதனால் சித்ராவின் ஆத்திரம மேலும அதிகரித்தது.

போக்குவரத்துச் சேவைகள் சீராகியதும ரமேஷ் ஊரில்

தான். என்றாவது ஒரு நாள் அவள் திருமபி வருவாள், மீண்டும தன்னை காதலனாக ஏற்றுக் கொள்ளா விட்டாலும, நிரபராதியாக எண்ணி மன்னிப்புக் கேட்பாள் என அவன் காத்துக் கொண்டிருந்தான்.

நாட்களும விரைவாக நகர்ந்து சென்றன. இவர்களின் காதல் மலர்ந்த சித்திரையும முடிவடைந்தது. புதுச் சித்திரையும மலர்ந்தது-

அன்று சித்திரை புதுவருடம என்பதால் இருவரும கோயிலுக்கு வந்திருந்தனர். ரமேஷுக்கு அவளைக் கண்டதும பெரும மகிழ்ச்சி. ஓடிச் சென்று கதைக்க வேண்டும என்று அவன் மனம துடித்தது- ஆனால் அவள் அன்று சொன்ன வார்த்தைகள் இன்று இவனை அவளிடம போக விடாமல் தடுத்தது.

அதன் பிறகுதான் சித்ரா ரமேஷைக் கண்டு ஓடி வந்து கதைத்தாள்.

"என்ன மன்னிச்சிருங்க ரமேஷ்... உங்கள நான் தப்பா எடை போட்டுட்டேன் என்பதை நன்றாக உணர்ந்து விட்டேன்-

இனிமேல் என்னால உங்கள பிரிஞ்சு வாழ முடியாது... என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்" ரமேஷ் என்று கெஞ்சினாள்-

★

பழைய நினைவுகளில் மூழ்கி இருந்த ரமேஷை, சித்திரைப் பௌர்ணமி போல் இல்லத்தரசியாக அருகிலிருந்த சித்ரா சுயநினைவுக்கு அழைத்து வந்தாள்- (த-இ)

நாய் குரைக்கிறதே! உங்குள் ஒருவருக்குமே கேட்கவில்லையா? பனங்குட்டான் சைசுக்குப் பெத்துப் போட்டது தான் மிச்சம! நாய் குலைத்தாலும பேய் கனைத்தாலும பேரய்ப் பாக்கிறதுக்கு இந்த வீட்டில் நான் ஒருவன் தானா கிடக்கிறன்!" என்று பொரிந்து தள்ளி விட்டு பரமர் வாசல் பக்கம சென்று "அதார்" அதாருக்குக் குலைக்கிறா என்று கேட்டுக்கொண்டே நாயின் பக்கம நெருங்கியவர் தீயை மிதித்து விட்டவரைப் போல "பாமபு! பாமபு!" என்று கத்தியபடி மஙகமமாவிற்குப் பக்கமாக ஓடி வந்தார்-

ஆட்டாமாவில் பொமமை பிடித்துப் பார்த்துக் கொண்டிருந்த மஙகமமா அவதிப்படாமல் சாவதானமாகச் சொன்னாள்-

"ஏன் பாமபு பாமபெண்டு கத்தி ஊரெல்லாத்தையும கூப்பிடுறீங்க? ஓடிவாற சனங்களுக்குத் தேத்தண்ணி வச்சிக் கொடுக்கிறதுக்கும ஒரு சொட்டுச் சீனியுமில்ல! சுமமா விட்டுப் போட்டுப் போங்க! பாமபு வந்தா அது வந்த வழியாலேயே போயிரும-

பரமருக்கு உடலில் உண்டான சன்னதம தணிந்த பாடாயில்லை-

"டியே என்னடி உன்ர கதையும நீயும? மாலைபட்டுப் போற நேரம பாமபு வாசல் தேடி வந்திருக்கு! மாலைக்குடி காலக்குடி" என்று சொல்லு வாஙக- உன்னைத்தான் தேடி வந்திருக்கோ என்னவோ? இதச் சுமமா விடப் போடா! இண்டைக்கு ஒரேயடியாக அடிச்சிக் கொல்லுறன் பார்" என்றபடி

[21 ஆம பக்கம பார்க்க]

# நகைச்சுவை மஞ்சரி

ஒருவர்- நேற்று எனது வீட்டுக்குள் திருடன் புகுந்து விட்டான்...

மற்றவர்- ஐயையோ... அப்புறம...?



ஒருவர்- விடுவேனா அவன... எனது கஷ்ட நிலையைச் சொல்லி அவனிடத்தில் ஐநூறு ரூபா கடன் வாங்கி அனுப்பி விட்டேன்.

★

மாணவன்- என்ன சார், நீஙக... என்ன ஆறுமுகம என்று கூப்பிடுவதற்குப் பதிலா ஏழுமுகம என்று கூப்பிடுறீஙக...

ஆசிரியர்- உன்னுடைய முகத்தையும சேர்த்துத்தான் அப்படிக் கூப்பிடுறேன்.

★

ராமு- டேய் சோமு... அதோ போறாரே அவரைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்...?

சோமு- சரியான ஞாபக மறதிக்காரர்...

ராமு- எதை வைத்து அப்படிச் சொல்கிறாய்...?

சோமு- நேற்று ரயில்வே ஸ்டேஷனுக்குப் போவதாகச் சொல்லிப் போட்டு பொலீஸ் ஸ்டேஷனுக்குப் போயிட்டாரு...

★

டைரக்டர்- நான் இமமுறை தயாரிக்கவிருக்கும படத்தில் ஒரு புதுமையைக் கையாளப் போகிறேன்...



நிருபர்- அது என்ன புதுமை...?

டைரக்டர்- கதாநாயகன் கதாநாயகியைக் கற்பழிக்க முயலுகின்ற போது வில்லன் வந்து கதாநாயகியைக் காப்பாற்றுகிற மாதிரி...

நிருபர்- ...?...?...!?

★

நண்பன் (1)- நேற்று என் காதலியைப் பார்த்து "ஒருமுறை பார்த்தாலே போதும... உன் உருவம மனதை விட்டு நீஙகாது எப்போதும..." என்ற பாடலைப் பாடியது தப்பாப் போச்சு...

நண்பன் (2)- ஏன் என்ன, நடந்தது...?

★

நண்பன் (1)- ஒரு முறைக்குப் பதிலாக என்னைப் பல முறை பார்த்திருக்கிறீர்களே... அப்படி என்றால் இனிமேல் என்னைப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை என்று சொல்லி விட்டுப் போனவள் ஒரு மாதமாகியும இன்னும வரவில்லை.

டைபிஸ்ட் கேர்ள்- இஙகே வேலை செய்பவர்களுக்கு ஒரு கண்டிஷன் போட வேண்டும...

மனேஜர்- என்ன கண்டிஷன், அது...?

கேர்ள்- எயா கண்டிஷன்...



உசனார் எம பசீர்

## மணிக் கவிதை

### பத்தினிகளே!

ஆயிரம் வசதிகள் இருந்தும
அன்பான கணவன் இருந்தும்
அற்ப உடலின்பத்திற்குப் பிற
ஆடவர் துணையை நாடிடும
அரிவையர்களை விட......
அன்றாட வயிற்றுப் பசிக்காக
விடியும்வரை முந்தானை விரித்து
விபசாரம செய்பவர்கள் – ஒரு
விதத்தில் பத்தினிகளே......!

★ ஏ சி எம நிஸார்

### இது நியாயமா?

மலைத்தென்றல் தாலாட்டலாம
மழைத் துளி நீராட்டலாம்!,
கன்னி அவள் கன்னங்களை
கடிக்கலாமாம் நுளமபு கூட!
தீண்டக் கூடாதாம நானவளை
திருமணத்துக்கு முன்பதாக......!

★ நா உதயகுமார்

### இளகிய மனசு!

உன் இரு கண்பட்டு
புண்பட்ட என் நெஞ்சத்தில்
பச்சை ரணஙகள்
நிரந்தர காதல் வடுக்களை
உண்டாக்கி விட்டதென்று
இப்பொழுதெல்லாம்
பார்க்காமலேயே
சென்று விடுகிறாயே......
உனக்குத்தான் எத்தனை
இளகிய மனசு!

★ பாக்கியவதி

### கவிக் குழந்தை!

உன் காதலால் கர்ப்பமான
எந்தனது இதயம......
கவிதைக் குழந்தைகளைப்
பெற்றெடுத்துக்......
கண்ணீரைப் பாலூட்டி
சோகத்தில் தாலாட்டுகிறது!

★ சித்ராதேவி

### என்நிலை இதுவே

காளை எந்தன் இதயத்தில்
காதல் எனும மூன்றெழுத்தைக்
கன்னியவள் விதைத்திட்டாள்!
நினைவெல்லாம அவள் பருவம
நித்திரையில் அவள் உருவம்!
எழுதுகின்றேன் இக் கடிதம
ஏந்திழைக்குக் கிட்ட வேண்டும்!

★ ஏ எஸ் குமார்

### இனி எப்போட்டி!


# விசித்திர ஆசை!

— 5 —

மாஸ்டர் சிவலிங்கம்

அபுஹசன் சவப்பெட்டிக்குள் படுத்துக் கொண்டதும அவனுடைய மனைவி வெள்ளைத் துணியால் உடலைப் போர்த்தி விட்டு முகத்தை மெல்லிய துணியால் மூடி விட்டாள்.

பின்னர் தலைவிரி கோலத்தோடு கண்ணீர் சிந்தியபடி அரண்மனைக்குச் சென்றாள், அந்தப் புரத்துக்குள் அழுதபடி வந்த அபுஹசனின் மனைவியைக் கண்டதும அரசி சற்று அதிர்ந்து விட்டாள்.



"மகாராணி! எனது கணவர் இறந்து விட்டார், அவருடைய பிரிவை என்னால் தாஙகவே முடியவில்லை" என்று விக்கி விக்கிக் கூறியபடி கண்ணீர் சிந்தினாள் அபுஹசனின் மனைவி

ஆறுதல் வார்த்தை கூறி விட்டு அவளிடம இருநூறு

அன்பளிப்புப் பெற்று வாருங்கள்" என்று கூறியபடி சவப்பெட்டிக்குள் படுத்துக் கொண்டாள் அபுஹசனின் மனைவி.

சவப் பெட்டிக்குள் படுத்துக் கிடந்த மனைவியைத் துணி ஒன்றால் மூடிவிட்டு, கண்ணீர் சிந்தியபடி மார்பில் அடித்துக் கொண்டு அரண்மனைக்கு

படி அரசர் அந்தப்புரத்தை அடைந்தார்.

ராணி சோகமே உருவாக அமர்ந்திருந்தாள், அவளைப் பார்ப்பதற்கே பரிதாபமாக இருந்தது.

"ராணி! உன்னுடைய அன்புக்குரிய பணிப்பெண் காலமான செய்தி கேட்டதும நீ

யிருந்த துண்டையும அகற்றினாள்.

மனைவியின் உற்சாக நிலையைக் கண்டதும துள்ளி எழுந்தான் அபுஹசன், இருநூறு தஙக நாணயஙகள் கிடைத்த செய்தியை அறிந்ததும அபுஹசனும துள்ளிக் குதித்து மகிழ்ந்தான்.

"சரி, சரி... இப்போது நான் செத்தவள் போல சவப்பெட்டிக்குள் கிடக்கிறேன், நீஙகள் அழுது புலமபியபடி அரசரிடம சென்று

என்னால் தாஙகவே முடியவில்லை" என்று கூறியபடி விக்கி விக்கி அழ ஆரமபித்தான் அபுஹசன்.

அவனுடைய தோளிலே தட்டி ஆறுதல் வார்த்தைகள் கூறிய மன்னர், அபுஹசனுக்கு இரு நூறு தஙக நாணயஙகள் கொடுத்து அனுப்பினார்.

அபுஹசனின் மனைவி இறந்த செய்தி கேட்டு ராணி மிக வருந்துவாள், அவளுக்கு ஆறுதல் கூறுவோம என்று எண்ணிய

என்று கூறிவிட்டுப் பெருமூச்சு விட்டாள் ராணி–

இப்படி அரசி கூறியதும அரசர் அவளை ஆச்சரியத்துடன் பார்த்தார், அவருடைய புருவஙகள் நெளிந்தன–

"ராணி! சற்று நேரத்திற்கு முன்பு அபுஹசன் அலறியடித்துக் கொண்டு ஓடிவந்தான்– தனது மனைவி இறந்து விட்டாள் என்று அழுது புலமபினான்– அவனுக்கு இருநூறு தஙக நாணயஙகள் கொடுத்து அனுப்பினேன்..." என்றார் மன்னர்–

"அவள் செத்திருக்க முடியாது... சற்று நேரத்திற்கு முன்பு தானே அவள் இஙகு வந்து சென்றாள்" என்று கூறினாள் ராணி–

அரசருடைய முகம ஆத்திரத்தால் சிவந்தது– அமைச்சர் ஒருவரை அழைத்து, அபுஹசன் வீட்டுக்குச் சென்று உண்மையில் இறந்தது யார் என்று பார்த்து வருமபடி உத்தரவிட்டார்–

அமைச்சர் வருவதைக் கண்ட அபுஹசன் மனைவியைச் சவப் பெட்டிக்குள் படுக்குமபடி கூறினான்– அவளும அப்படியே செய்தாள்– பக்கத்தில் நின்று அழுது கொண்டிருந்தான் அபுஹசன்– அமைச்சர் திருமபிச் சென்று அரசரிடம விசயத்தைக் கூறினார்–

"பிரபு! நான் எனது பணிப்பெண் ஒருத்தியை அஙகு அனுப்பிப் பார்க்க தாஙகள் அனுமதி வேண்டும" என்றாள் ராணி–

அரசர் ஒப்புதல் அளித்ததும பணிப்பெண் ஒருத்தியை அபுஹசனின் வீட்டிற்கு அனுப்பினாள் அரண்மனைப் பணிப்பெண் வருவதைக் கண்ட அபுஹசன் அதிர்ச்சியடைந்தான்–

"ஐயையோ ராணியின் பணிப்பெண் வருகிறாள்... நான் சவப்பெட்டிக்குள் படுத்துக் கொள்கிறேன் நீ பக்கத்தில் நின்று அழுது கொண்டிரு" என்று கூறிவிட்டுச் சவப்பெட்டிக்குள் படுத்துக் கொண்டான் அபுஹசன்–

அந்தக் காட்சியை அவதானித்து விட்டு அரண்மனை திருமபிய பணிப்பெண், இறந்தது அபுஹசன் தான் என்று ராணியிடம தெரிவித்தாள்–

ராணியையும அழைத்துக் கொண்டு அபுஹசன் வீட்டிற்குச் சென்றார் மன்னர்–

அரசரும ராணியும மற்றும சிலரும வருவதைக் கண்ட அபுஹசன் அதிர்ச்சி அடைந்து விட்டான்– செய்வதறியாது குட்டிப்பட்ட பூனையைப் போல குறுக்கும நெடுக்கும நடந்தான்– அவனுக்கு ஒரு யோசனை ஏற்பட்டது–

"பெண்ணே! அரசரும ராணியும வந்து கொண்டிருக்கின்றனர்... ஓடிவா... இருவரும இறந்தவர்களைப் போல கண்களை மூடிக் கொண்டு கிடப்போம" என்று கூறியபடி சவப்பெட்டிக்குப் பக்கத்திலே படுத்துக் கொண்டான் அபுஹசன்– அவனுக்குப் பக்கத்திலே அவன் மனைவி படுத்துக் கொண்டாள்–

சிலைபோல அசையாது நின்றனர் சிறிது நேரத்தில்...!


"முதலில் இறந்தது அபுஹசனா அவனுடைய மனைவியா? முதலில் இறந்தது யார் என்பதைத் தெரிவிப்பவருக்கு ஆயிரம தஙக நாணயஙகள் பரிசளிப்பேன்" என்றார் மன்னர்—

"பிரபு! நான்தான் முதலில இறந்தேன்... அந்த ஆயிரம தஙக நாணயஙகளையும எனக்குத் தாருஙகள்" என்று கூறியபடி திடீரெனத் துள்ளியெழுந்து மாமன்னரின் பாதஙகளில விழுந்து வணஙகினான் அபுஹசன் அவனுடைய மனைவி எழுந்து ராணியின் பாதஙகளில் விழுந்து வணஙகினாள்–

திறந்தவாய் மூடாமல் சிறிது நேரம அவர்களை ஆச்சரியத்துடன் பார்த்தபடி நின்றனர் அரச தமபதியர்–

"பிரபு! எஙகளை மன்னித்துக் கொள்ளுஙகள்... பணத் தட்டுப்பாடடைப் போக்கவே இந்தக்

### மறைந்திருப்பது என்ன?




தமபி தஙகைகளே! மேலே உள்ள கருமபலகையில் ஓர் உருவம கண்ணுக்குத் தெரியாமல் மறைந்திருக்கிறது– எஙகே இலக்கஙகளை இணைத்து என்ன உருவம என்று கண்டுபிடியுஙகள் பார்க்கலாம– [இல 1—22]

## இனி எப்போட்டி!

பரீட்சையில் சித்தி பெற்றேன்
போட்டியில் வெற்றி பெற்றேன்
பரிசுகள் பல குவித்தேன்
பெற்றேன் பல சான்றிதழ்கள்!
திருமணப் போட்டியிலே மட்டும
தீர்ப்பு படுதோல்வியாகியது!
இனி எந்தப் போட்டியிலே
இறைவா நான் பங்குபற்றுவேன்

★ ஜீ சதீஷ்

## ஏழைக் கவிஞன்!

என் இதயமே...
உன்னை முத்தென்றும்
பவளமென்றும வைரமென்றும
வைடூரியமென்றும் வர்ணிக்க
என்னிடம வசதியில்லை!
ஆதலால்தான் நான் உன்னை
அன்பே ஆருயிரே......
நிலவே அழகே......
என்று மட்டும வர்ணிக்கிறேன்!

★ ஏ ஜெயாராஜா

## ஒப்பிடேன்!

என் காதலியை நான்
நிலவுக்கு ஒப்பிட மாட்டேன்!
ஏனெனில் நிலவின் நடுவே
களங்கம இருக்கின்றதே!
குத்தும முள் இருப்பதால்
ரோஜா மலருக்கும
ஒப்பிட மாட்டேன்!
தென்றல் அனைவரையும
வருடிச் செல்வதால்......
தென்றலுக்கும ஒப்பிடேன்!

★ வ இ ராஜு

## நீதான் காரணம்!

காதலித்தது தவறென்றால்
தண்டிக்கப்பட வேண்டியவளும்
நீதான் — ஏனென்றால்
காதலிக்கத் தோன்றியதே
உன்னைக் கண்டதால்தானே!

★ ஜெயந்திகுமார்

ணீர் சிந்தினாள் அபுஹுறசனின் மனைவி

ஆறுதல் வார்த்தை கூறி விட்டு அவளிடம இருநூறு தங்க நாணயங்களைக் கொடுத்த னுப்பினாள் அரசி.

ஒன்றால் மூடிவிட்டு, கண்ணீர் சிந்தியபடி மார்பில் அடித்துக் கொண்டு அரண்மனைக்கு ஓடினான் அபுஹுசன்.

சோகமே உருவாக அழுது

### — அரபு நாட்டுக் கதை —

தங்க நாணயங்களுடன் வீட்டை அடைந்ததும துள்ளிக் குதித்து வாய்விட்டுச் சிரித்தபடி தனது கணவனைப் போர்த்திருந்த துணியையும முகத்தை மூடி

புலம்பியபடி வந்த அபுஹ்ற சனைக் கண்டதும அதிர்ந்து போய் நின்றார் மாமன்னர்,

மாமன்னரே! எனது ஆரு யிர் மனைவி இறந்து விட்டாள்,

“ராணி! உன்னுடைய அன்புக்குரிய பணிப்பெண் கால மான செய்தி கேட்டதும நீ அதிர்ச்சி அடைந்திருப்பாய்...

அரசர் தமது பேச்சை முடிப் பதற்கு முன்பே குறிக்கிட்டுப் பேசினாள் ராணி,

“பிரபு! அவள் உயிரோடு இருக்கிறாள், ஆனால் அவளு டைய கணவனும உங்கள் அன்புக்குரியவனுமான அபுஹ சன் தான் இறந்து விட்டானாம, அவனுடைய மனைவி இங்கு வந்து கூறினாள், அவளிடம இரு நூறு தங்க நாணயங் கள் கொடுத்து அனுப்பினேன்”




“ராணி இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது- வா நாம இருவரும அபுஹசனின் வீட்டிற்குச் சென்று பார்த்து வருவோம” என்று கூறி

சாத்தப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்த அரசரும ராணியும அதிர்ச்சி அடைந்து போய் அப்படியே

“பிரபு! எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்... பணத் தட்டுப் பாட்டைப் போக்கவே இந்தத் திட்டம என்று விளக்கினான் அபு ஹசன்-

அரசரும அரசியும தங்களை மறந்து வாய்விட்டுச் சிரித்தனா- அபுஹசனுக்கு ஆயிரம தங்க நாணயங்களை அன்பளிப்புச் செய் தார் மன்னர்- அபுஹசனின் மனைவிக்கு ஆயிரம தங்க நாணயங்களை அன்பளிப்புச் செய்தாள் ராணி- அதன்பின் அவ ர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்-

(முற்றும)

# பாம்பு படும்...

[20 ஆம பக்கத் தொடர்ச்சி]

ஆத்திரம வந்தது-

“தமபுத்தடிய முறிச்சி ரெண்டு பேருக்கும தருவன் அடி! அத விட்டுப் போட்டுப் போய் லாம பக் கொளுத்திக் கொண்டு வாருங்க- பாமபு ஓடிவிடப் போகுது! எங்கடி இவன் மூத்த வனக் காணல்ல?” என்றபடி பின்வேலிப் பக்கம பார்வையைச் செலுத்தினார் பரமர்-

“அப்பா வேலிக்குப் பிடிச்ச வரிச்சிக்கமபு அவிழ்த்து எடுக் கேலுதில்ல! எல்லாம ஆண் முடிச்சி- நீங்கதான் வந்த அவிழ்த்தெடுங்க!” என்று சொல்லிக் கொண்டு மூத்தவன் முகுந்தன் முழங்காலிலிருந்து பற் களால் முடிச்சை அவிழ்க்க முனைந்தான்-

“தா! உங்கள் நமபி ஒரு காரியமும செய்யேலாது- வேலி வரிச்ச விட்டுப் போட்டு வந்த அந்த உலக்கையை எடுத்துத் தாடா! இன்னைக்கு ரெண்டி லொண்டு பாக்கிறன்!”

முகுந்தன் ஓட்டத்தில் வந்து உலக்கையை எடுத்து வரவும பெண்பிள்ளைகள் குப்பி லாம பைக் கொளுத்திக் கொண்டு வரவும நேரம சரியாகவே இருந்தது-

உலக்கையை கை மாறிய பர மர் எல்லா ஆத்திரத்தையும ஒன்று சேர்த்து அடித்தார் ஒரு அடி-

“வள்!” என்று அதார் பூரண துவிலக்கு தான் எங்கள் முதுகை நெளித்துக் கொண்டு அடுத்த வீட்டு வளவிற்குள் போய்க் கிடந்து துடித்தது-

“முதல் கோணினால் முற்றும கோணும- இரண்டாவது அடி யையாவது “லெக்”காப் பாத்து அடியுங்க” என்றாள் மங்கமமா- பரமர் தலைக்கு மேல் உலக் கையைத் தூக்கிப் பிடித்து இரண் டாவது அடியை அடிக்க உன் னும போது “அப்பா அடிக்கா தீங்க கொஞ்சம நிறுத்துங்க! பாமபின் தலையைக் காணோம என்று அவரைத் தடுத்து நிறுத்தி னான் முகுந்தன்-

அதன் பிறகு வெளிச்சத்தை பாமபின் பக்கத்தில் கொண்டு போய் வைத்து விட்டு எல்லோ ருமே அதைப் பார்த்தார்கள்-

எப்போதோ செத்து ஊதிப் போன தண்ணிப் பாம்பு அது- அதை இழுத்துக் கொண்டு வந்த கடுவன்பூனை, நாயின் வெருட்ட லுக்கு அஞ்சி பக்கத்திலிருந்த பூவ ரசி மரத்தில் ஏறிக் கொண்டிருந் தது-

இந்தப் பாமபுப் புதினத்தில் வானொலியில் பொன்மாலைப் பொழுதைக் கேட்க முடியவில் லையே! என்ற கவலையில் பிள் ளைகளும மனைவி மங்கமமா வும பரமரோடு ஒரு வாரம முகம கொடுக்கவில்லையாம என்று கேள்வி-

# இரண்டும்...

[15 ஆம பக்கத் தொடர்ச்சி]

சாலை ஆசிரியர் பயிற்சித் திட் டத்தின் கீழ் பயிற்சி பெறுபவர் கள் 1988ஆம ஆண்டில் அதா வது மேற்படி பயிற்சித் திட்ட த்திற்கு விண்ணப்பித்த காலத்தில் 18 வயதுக்கும 28 வயதுக்கும உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும.

கணிதம உட்பட 6 பாடங்க ளில் சித்தி பெற்றிருத்தல் வேண் டும.

அத்தகையவர்களுக்கு மட் டுமே பயிற்சி, பின்னர் நிரந்தர ஆசிரியர் நியமனம வழங்கப் படும என்று கூறுகின்றனர்.

அப்படியாயின் இந்தப் பயிற் சித் திட்டத்திற்கு தெரிவானவர் கள் எந்த அடிப்படையில், எந்தத் தகைமைகளின் கீழ் தெரிவானார் கள் என்று ஆசிரியப் பயிலுநர்கள் கேட்கின்றனர்.

தோட்டப் பாடசாலை ஆசிரி (த)யர் பயிற்சித் திட்டத்திற்கான போட்டிப் பரீட்சைக்குப் பின்னர் நடைபெற்ற நேர்முகப் பரீட்சை யின் போது தெரிவானவர்களின் கல்வித் தகைமைகள், வயது முத லியவை கவனிக்கப்படவில் லையா? அல்லது கவனத்திற் கொள்ளப்படவில்லையா? என்ற கேள்விகளும பரவலாக எழுப் பப்படுகின்றன.

பொறுப்பு வாய்ந்த கல்வி அதிகாரிகள் சிலரினால் எழுந் துள்ள மேற்படி சிரச்சினை கார ணமாக பயிற்சித் திட்டத்தில் பயிற்சி பெறும ஆசிரியப் பயிலுநர் கள் பலரும மனக்குழப்பங்க ளுக்கு ஆளாகியுள்ளனர்.

கல்வித் தகைமை இன்மை, வயது அதிகம ஆகிய காரணங்க ளைக் காட்டி பயிற்சித் திட்டத் தின் கீழ் பயிற்சி பெறும பல ருக்கு பயிற்சியின் பின் ஆசிரியர் நியமனம கிடைக்காமல் போக லாம என்று ஆசிரியப் பயிலுநர் கள் பலரும அச்சம கொண்டுள் ளனர்.

இதன் காரணமாக பெரும பாலான ஆசிரியப் பயிலுநர்கள் தற்போது நடைபெறும ஆசிரியர் களுக்கான பயிற்சியில் முழுமை யாக மனதை ஈடுபடுத்த முடியாத படி பல்வேறு குழப்பங்களுக்கும, சந்தேகங்களுக்கும ஆளாகியுள் ளனர் (த-096)

## மில்லியன் தோல்வி

சவூதி அரேபியாவின் மன்னர் பாஹட் சமீபத்தில் ஒரு சூதாட்ட அரங்கில் ஒரே நிமிடத் தில் 14 மில்லியன் டாலர் தோற்று விட்டார்.

இலங்கை நாணயத்தில் இதன் மகிப்பு ரூ 42 கோடி! இது ஒன் றும சவூதி அரசருக்கு பெரிய இழப்பு இல்லை.

730 மில்லியன் டாலரில், லண் டனில் ஒரு“விடுமுறை மாளிகை” கட்டியிருக்கிறார். 60 மில்லியன் டாலரில் ஒரு சொகுசுக் கப்பல் வாங்கியிருக்கிறார்.

(த-10)

MOTHER & CHILD




# பிரசவ கால மரணங்கள் உலகில் அதிகரிப்பது ஏன்?

## பெண் கல்விக்கு ஊக்கம் அளிக்கப்பட்டாலே மீட்சி

ஒரு குடும்பத்தின் மிக முக்கிய உறுப்பினராக குடும்பத் தலைவி விளங்குகிறார். தென் கிழக்கு ஆசிய நாடுகளை எடுத்துக் கொண்டால் குடும்பத்தின் அச்சாணியாக குடும்பத் தலைவியின் பங்கு விளங்குகிறது.

குடும்பத் தலைவி ஒருவரின் பங்களிப்பு எவ்வளவு முக்கியமான ஒன்று என்பது அவர் திடீரென மறையும் போதே அக் குடும்பத்தார் உணர்ந்து கொள்கின்றனர்.

வளரும் நாடுகளை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஆண்டும் ஐந்து லட்சம் தாய்மார்கள் பிரசவத்தின் போது உயிரிழக்கிறார்கள். இவர்களில் இரண்டு லட்சம் பேர் கருச்சிதைவு காரணமாக மரணமடைகின்றனர்.

தென் கிழக்காசிய பிராந்தியத்தில் 60 கோடி பெண்கள் வசித்து வருகின்றனர். இதனால் இங்கு தான் பெருமளவில் பிரசவ கால மரணங்கள் நிகழ்ந்து வருகின்றன.

உண்மையைச் சொன்னால் இப் புள்ளி விவரங்கள் இப் பிராந்தியத்தில் நிகழும் பெண் மரணங்களைச் சரியாக எடுத்துக் கூறவில்லை என்பது தான் சரி.

ஏனெனில் பாமரர்களிடையே நிகழும் அல்லது ஏழைக் குடும்பங்களில் ஏற்படும் மரணங்கள் வெளியே தெரிய வருவதில்லை.

ஒரு குடும்பத் தலைவி அல்லது இளம் தாய் கர்ப்பச் சிதைவு அல்லது கர்ப்பம் தொடர்பான நோய்களில் சிக்கும் போது அவரது உடல் நலிவுறுகிறது.

குடும்பத்தின் பொருட்டு தொடர்ந்து உழைக்க முடியாத நிலைக்கு அவர் ஆட்படுகிறார். அல்லது வருமானம் தேடும் வழிகளை அவர் இழந்து விடுகிறார்.

இது அப் பெண்ணை மட்டுமின்றி அவர் சார்ந்துள்ள குடும்பத்தை குறிப்பாக குழந்தைகளை ஆரோக்கிய ரீதியாக பெரிதும் பாதித்து விடுகிறது. ஒரு இளம் தாயார் பிரசவத்தின் போது அல்லது பிரசவத்துக்கு முன்னோ இறந்து விடுகிறாள் என்று வைத்துக் கொள்வோமானால் அப் பெண்ணின் குழந்தைகள் மனோ ரீதியாகவும் உடல் ரீதியாகவும் பெரிதும் பாதிப்படைந்து விடுகின்றனர்.

அக் குழந்தைகளின் எதிர் காலத்தில் பெரும் மாறுதல் நிகழ இம் மரணம் காரணமாக அமைந்து விடுகிறது. மேலும் ஒரு குழந்தைக்குத் தாயான பெண்மணி தன் இரண்டாவது பிரசவத்தில் மரணமடைந்து விட்டாரானால், போதிய கவனிப்பின்றி முதல் குழந்தை போஷாக்கின்மை தொற்று நோய்கள் ஆகியவற்றுக்கு ஆளாகி விட முடியும்.

அல்லது ஒரு வருட காலப் பகுதியில் அக் குழந்தை மரணமடைந்து விடவும் கூடும்.

இப்படியான ஒரு நிலை இன்னும் தொடரக் காரணம் என்ன? எமது சமூகக் கட்டுப்பாடுகளா? வறுமையா? ஏழைக் கிராம வாசிகள் தானே என்ற அதிகாரிகளின் அலட்சிய பாவமா? பெண்களிடையே நிலவும் அறியாமையா?

எல்லாமும் இந் நிலைக்குக் காரணம் என்று தான் சொல்ல வேண்டும். தென் கிழக்காசிய நாடுகளில் பெண்கள் இளம் வயதிலேயே அதிகம் மரணிப்பதற்கு அவர்களிடையே படிப்பறிவின்மை ஒரு பிரதான காரணம் என்று சொல்ல முடியும்.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற குருட்டு நம்பிக்கையில் சூழ்ந்து போய் பெண்கள் குடும்பத்தின் சம்பளமற்ற வேலைக்காரியாக கணவனுக்கு இன்பம் வழங்கும் பொழுது போக்கு சாதனமாக இப்போதும் இருந்து வருகிறார்கள் என்பது வருத்தத்துக்குரிய ஒரு உண்மை.

படித்த நாகரிகம் கொண்ட குடும்பங்களிலும் கூட ஆண்கள் அல்லது குடும்ப அங்கத்தினர்கள் உணவுண்டு முடித்த பின்னரே இருப்பதை "போட்டுக் கொண்டு" அடுப்படியிலேயே வீட்டுப் பெண்கள் இப்போதும் உணவை முடித்துக் கொள்கிறார்கள்.

ஆண்கள் இப் பெண்களுக்கு போதிய ஊட்டச் சத்து கிடைக்கிறதா என்பதை யோசித்துப் பார்ப்பதில்லை.

பெண்களின் நலத்துக்கு மாத்திரமின்றி சமூக ஆரோக்கியத்தின் பொருட்டும் பிரசவ சிக்கல்கள், பெண்களின் உணவு பழக்க வழக்கங்கள் ஆகியவற்றில் மாற்றங்கள் ஏற்பட வேண்டியது அவசியம்.

இதற்கு வகை செய்யும் விதத்தில் பெண் கல்விக்கு தென்கிழக்காசிய பிராந்தியத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியது அவசியம்.

ஏனெனில் பெரும்பாலான பெண்களுக்கு தாம்பத்திய வாழ்வு தொடர்பான அறிவு மிகவும் குறைவு. பல பெண்கள் தாம்பத்திய சுகத்தின் உச்சக் கட்டத்தை அனுபவிக்காமலேயே பிள்ளை பெற்றுக் கொள்கிறார்கள்.

குடும்பத் திட்டம் என்றால் என்ன என்பதை உணராமலேயே பெரிய குடும்பத்தை உருவாக்கிக் கொண்டு அதன் சுமையைத் தாங்கக் கூடிய சக்தியின்றி நோயில் வீழ்ந்து விடுகிறார்கள் பல தாய்மார்கள்!

தெற்காசியாவில் மட்டும் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சத்து 96 ஆயிரம் தாய்மார் பிரசவம் தொடர்பான மரணங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். கிழக்காசிய பிராந்தியத்தை எடுத்துக் கொண்டால் 12 ஆயிரம் தாய்மார்கள் வருடா வருடம் உயிரிழக்கிறார்கள்.

இதே சமயம் வளர்ந்த நாடுகள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டால் கூட அங்கு ஆண்டொன்றுக்கு சுமார் அறாயிரம் பிரசவ மரணங்களே நிகழ்கின்றன. அமெரிக்காவில் ஆயிரம் மரணங்களை எடுத்துக் கொண்டால் அதில் ஒரு மரணம் பிரசவம் தொடர்பானதாக இருக்கக் கூடும்.

வளரும் நாடுகளுக்கும் வளர்ந்த நாடுகளுக்கும் இடையில் இப்படியானதொரு வித்தியாசம் காணப்படுவதற்கு அவர்களிடையே காணப்படும் கல்வி மற்றும் சமூக வளர்ச்சியே காரணம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது.

ஆகவே பெண்களை குறிப்பாக குடும்பத்தின் அச்சாணியான தாய்மார்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு பெண் கல்விக்கு மென்மேலும் ஊக்கமளிக்க வேண்டியது சமூக நலனில் ஆர்வம் கொண்ட அனைவரினதும் தலையான கடமையாகும்.

(து-032)

# நல்ல மனைவியை தேர்ந்தெடுக்க சுலபமான வழி!

நல்ல மனைவியைத் தேர்ந்தெடுப்பது எப்படி? அதற்கு சுலபமான வழி இருக்கிறது. மனைவியைக் கண்ணால் தேர்ந்தெடுக்காமல் காதுகளால் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஒரு அறிஞர் கூறுகிறார்.

* வயோதிகம் இது நோய்கள் சேரும் துறைமுகம்.

* அழகிய மனைவியை உடையவனுக்கு இரண்டு கண்கள் போதாது எனவும் ஒரு அறிஞர் கூறுகிறார்.

"உலக அறிஞர்களின் பொன் மொழிகள்" என்னும் நூலில் இருந்து பொறுக்கிய அறிஞர்களின் மேலும் சில பொன்மொழிகள் வருமாறு.

* குளத்தை தேடி தவளைகளும், தாகத்தை தேடி பறவைகளும் எப்படி தாமாக வருகின்றனவோ அதுபோல் முயற்சியும், உயர்ந்த குறிக்கோள் உடையவனையும் வெற்றி தானாக தேடி வரும்.

* டாக்டர்களுக்கு இரண்டு விஷயம் அவசியம் தேவை. ஒன்று சிங்கத்தின் இதயம், மற்றொன்று கழுகின் பார்வை.

* ஒருவன் தன் சகோதரியை தேடி கடல் வரை போவான். காதலியை தேடி கடலுக்குள்ளே செல்வான்.

* நீங்கள் கடன் கொடுக்கும் போது அவர்கள் உங்களை வணங்குவார்கள். வசூலிக்கும் போது நீங்கள் அவர்களை வணங்க வேண்டும்.

* பணத்திற்காக திருமணம் செய்து கொள்ள வேண்டாம். குறைந்த வட்டிக்கு பணம் வெளியே கிடைக்கும்.

* நாக்கிற்கு எலும்புகள் கிடையாது. ஆனால் அது பலரது எலும்புகளை நொறுக்குகிறது.

* வாக்குறுதி என்பது ஒருவகை கடனே.

(ம-10)

## பரஸ்பர நல்லெண்ணம் குழந்தைகளுக்கு அவசியம்

ஒருவன் கல்வி கற்பதன் தலையான நோக்கம சமூகத்தில் அநுகிகரிக்கப்பட்ட நற்பண்புகளுடன் கூடிய நற்குடிமகனாவதேயாம. கல்வி என்பது சமுதாயத்தில் இருந்து பிறக்க வேண்டும, சமுதாய வாழ்க்கையின் அடிப்படையிலேயே எழ வேண்டும. சமுதாய வாழ்க்கையை படம் பிடித்துக் காட்ட கல்வி முக்கியமானது.

ஒட்டிப் பிறந்த இரு பெண் குழந்தைகளை

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரிக்க

ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளை பிரிக்க

# 28 மணித்தியாலம் கடும் போராட்டம்!

ஒட்டிப் பிறந்த இரு பெண் குழந்தைகளை ரஷ்ய மருத்துவ நிபுணர்கள் வெற்றிகரமாக பிரித்துள்ளனர். 'வில்லிஜா, விட்டாலிஜா' என்னும் இவ்விரு பெண் குழந்தைகளும ரஷ்யாவின் பிரச்சினைக்குரிய லித்துவேனியா குடியரசைச் சேர்ந்தவை. உச்சந்தலைகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிய நிலையில் இக்குழந்தைகள் பிறந்தன.

இந்த ரீதியில் ஒட்டிப் பிறக்கும குழந்தைகளை சயாமிஸ் குழந்தைகள் என்று குறிப்பிடுவார்கள். ஒட்டிப் பிறந்த குழந்தைகளைப் பிரிப்பது மிகவும் சிரமமான காரியம, அதிலும தலையோடு தலை ஒட்டிப் பிறந்தவர்களைப் பிரிப்பது மிகவும சிரமமான பணி.

இதுவரை சுமார் முப்பது தலை ஒட்டிப் பிறந்த குழந்தைகள் வரையிலேயே சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இச்சத்திர சிகிச்சைகளில் சிலவே முற்று முழுதாக வெற்றியளித்துள்ளன. ஏனெனில் அவ்வளவு சிரமமான சத்திர சிகிச்சை இது! மூளை சமபந்தப்பட்டதாயிற்றே!

## பிறந்து 2 வருடம்; ஆனால் ஒருவர் முகம் மற்றவர் பார்த்தது அன்று தான்

ரஷ்யாவில் பிறந்த இக்குழந்தைகள் சிரமத்துடனேயே வாழ்ந்து வந்தன. ஆனால் இக்குழந்தைகளைப் பிரிக்கா விட்டால் சீக்கிரமே அவை இறந்து விடக் கூடும என்பதை உணர்ந்து கொண்ட டாக்டர்கள் சிரமமான பணியை மேற்கொள்ளத் தீர்மானித்தனர்.



ரஷ்யாவின் தலை சிறந்த மூளை சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் அலெக்ஸாண்டர் கொனவலோவ் குழந்தைகளை நன்கு பரிசோதித்தார். அப்போது இரு குழந்தைகளின் மூளைகளும இணைந்திருப்பது தெரியவந்தது. இணைந்திருக்கும மூளையைப் பிரிப்பது கத்தி முனையின் மீது நடப்பதற்கு ஒப்பானது! அப்படியும இச்சத்திர சிகிச்சையை மேற்கொண்டே தீருவது என்று டாக்டர் அலெக்ஸாண்டர் முடிவு செய்தார்.

முதலில் விஸ்தாரமாக பரிசோதனைகள் பல மேற்கொள்ளப்பட்டன. மிக நுணுக்கமாக மேற்கொள்ளப்பட வேண்டிய சத்திர சிகிச்சையானதால் கொமப்யூட்டரின் உதவியுடன் அறுவை சிகிச்சையை நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. ஏனெனில் கொஞ்சம பிசகினாலும குழந்தைகள் புத்தி பேதலித்துப் போய்



விடக்கூடும. அல்லது அவயவங்கள் சுவாதீனமற்றுப் போய் விடலாம. கொமப்யூட்டரைப் பயன்படுத்தினால், சிறிதும பிழையின்றி அளந்து காரியத்தை நடத்தி முடிக்க முடியும.

இரண்டு வயதான இக்குழந்தைகள் 28 மணித்தியால சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். வெற்றிகரமாக சிகிச்சை நடந்து முடிந்த பின்னரே குழந்தைகள் முதல் தடவையாக தமமை நேருக்கு நேர் பார்க்கக் கூடியதாக இருந்தது.

முக்கிய சத்திர சிகிச்சை முடிந்து விட்டது. மேலும சில அறுவை சிகிச்சைகள் உள்ளன, அவை நடத்தி முடிக்கப்பட்டதும இருவரும சாதாரண பெண்களாக வாழ்க்கையை நடத்த முடியும என்கிறார் சயாமிஸ் குழந்தைகளுக்கு வாழ்வளித்துள்ள இந்த மருத்துவ மேதை!

(ம-032)

தாய வாழ்க்கையை படம பிடித்துக் காட்ட கல்வி முக்கியமானது.

கல்வியின் நோக்கம வேலை வாய்ப்பு மட்டுமல்ல, வேலை வாய்ப்பு என்பது கல்வியின் ஓர் அமசம ஆகும.

கல்வி மூலம கிடைக்கின்ற வாழ்க்கையை வைத்துக் கொண்டு அந்த சமுதாயத்துல் வாழ்ந்து கொண்டிருககும மக்களை அறிய முடியும.

ஆதி காலத்து மக்கள் கல்வியைக காணாதவர்கள் என்றே கூறலாம. காரணம அக் காலத்தில் கல்வி கற்க கட்டிடங்கள் இல்லை என்பதும குறிப்பிடத்தக்கது.

அந்த மக்கள் எப்படி வாழ்ந்தார்கள், எப்படி உண்டார்கள், எப்படி உடுத்தார்கள், தங்கள் வாழ்க்கைக்கு ஏற்ற சமுதாய நியதிகளையும வரையறைகளையும எப்படி வகுத்துக் கொண்டார்கள் என்பதை எல்லாம அலசி ஆராய முற்படும போது அந்த நாட்கள் கண் முன் வருகின்றன.

கல்வி என்பது கடந்த சமுதாயத்தில் அனுபவம, பிறந்த சமுதாயத்தின் படப்பிடிப்பு, வருகின்ற சமுதாயத்தின் தீர்க்க தரிசனம.

கல்வி மனிதனுக்கு பயன்படுகின்ற ஒரு வழிகாட்டி, பாதை காட்டுகின்ற ஒளிவிளக்கு, மனிதன் இதிலிருந்து அனுபவ சுமைகளைப் புரிந்து கொள்ளுகிறான்.

அனுபவத் தேவையை உணர்ந்து கொள்ளுகிறான். அதை வைத்துக் கொண்டு தேவையில்லாத சுமைகளை தூக்கி எறிகிறான்.

தேவைகளை ஏற்ற வாழ்க்கை

(23ஆம பக்கம பார்க்க)



# மனையும் மங்கையும்

## பெண்களை கண்ணியப்படுத்தி நியாயமான உரிமைகள் இஸ்லாம் வழங்குகிறது

"மாதாவின் காலடியில் மைந்தனின் சொர்க்கம்" என்பது நாயக வாக்கு- இஸ்லாம் பெண்களை கண்ணியப்படுத்துவதுடன் அவர்களுக்கு நியாயமான உரிமையும் அளிக்கின்றது-

ஒரு குடும்ப ராஜ்யத்திற்கு அரசன் கணவனேயாவான்- அவனைக் கண்ணியப்படுத்திக் கௌரவப்படுத்துவதை மனைவி மீது கட்டாயமாக்கியிருக்கிறது இஸ்லாம்!

இன்று எமது இஸ்லாமிய மங்கையர்கள் சுதந்திரம் விடுதலை என்பதன் பொருளை முழுமையாக புரிந்துகொள்ளாமல் சிறு காரணங்களையெல்லாம் பெரிதுபடுத்தி தம் உரிமைக்காக போராடுவதாக எண்ணி கணவனோடு சண்டையிட்டு எல்லோருடைய நிம்மதியையும் கெடுத்துக் கொள்கிறார்கள்.

ஒருமுறை அன்னை ஆயிஷா விடம் நாயகத்தின் வாழ்க்கை முறைபற்றி கேட்கப்பட்டபோது எமதருமை நாயகத்தின் வாழ்க்கை முறை அல்குர்ஆனே யாகுமென கூறினார்கள்-

பெண்களுக்கு இலகுவாக மிக இனிமையாக இல்லறம் நடத்த அழகானதொரு மார்க்கத்தை நமக்கு அல்லாஹ் அருளியிருக்கிறான்- "நீங்கள் திருமணம் செய்து கொண்ட பெண்களுக்கு அவர்களுடைய "மஹர்களை" திருமண கட்டணங்களை கண்ணியமான முறையில் கொடுத்து விடுங்கள்" என இறைவன் தன் திருமறையிலே கூறுகின்றன-

ஆனால் இன்று நடப்பதோ வியாபாரம்- கல்யாணச் சந்தையிலே எத்தனையோ கன்னியர் சீதனக் கொடுமையினால் தள்ளப்பட்டு விலை போகாமலே இருக்கின்றனர்-

— பரீதா ஷரிபுத்தீன் —

"உங்களில் எவருக்கு சுதந்திரமுள்ள விசுவாசியான பெண்களைத் திருமணம் செய்து கொள்ள சக்தியில்லையோ அவர் விசுவாசமுள்ள பெண்களில் உங்கள் ஆதிக்கத்தில் இருக்கும் (அடிமை) பெண்ணைத் (திருமணத்தின் மூலம்) எடுத்துக் கொள்ளலாம்- அல்லாஹ் உங்களது விவாகத்தை நன்கு அறிந்தே இருக்கிறான்- விசுவாசிகளாகிய உங்களில் எவரும் மற்றவருக்கு சமம்தான்!" என அல்லாஹ் தன் திருமறையிலே மிகத் தெளிவாகக் கூறுகிறான்-

நமது நாயகம் (ஸல்) அவர்கள் துர்க் குணம் படைத்த பெண்களை பற்றியும் சொல்லத் தவறவில்லை- அவர்கள் தமது மிஃராஜ் யாத்திரையில் வானவர்கோன் ஜிப்ரீலுடன் செல்லும் சமயம் நரகத்தில் அதிகமான பெண்களைக் கண்டதாக கூறினார்கள்-

"இதற்கு என்ன காரணம் நாயகமே" என வினவினார்கள், சாஹபாக்கள்- "அவர்கள் தாம் தம் கணவன்மார்களுக்கு நன்றிகெட்டத்தனமாக நடந்து கொண்டவர்கள்" என விடை பகர்ந்தார்கள்-

"தன்னை மணமுடித்த புருஷன் தன்னோடு திருப்தியாக இருக்கும் நிலையில் மரணமாகும் மனைவி நிச்சயமாக சுவர்க்கம் புகுவாள்" என்றார்கள்-

இஸ்லாம் கூறும் பலதார மணம் பல பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவியாக இருக்கின்றன- விபசாரத்தை ஒழிப்பதற்கு நல்லதொரு பரிகாரம் பலதார மணமேயாகும்-

யுத்தம் போன்ற சூழ்நிலையில் ஆண்கள் மடிவதாலும் ஆண்களை விட பெண்கள் அதிகமாகும் நிலையினாலும் பெண்களின் எண்ணிக்கை பெருகி விபசாரம் மலிந்து விடக்கூடாது என்பதற்காகவும் இஸ்லாம் பலதார மணத்தை அனுமதித்திருக்கிறது-

உடற் பலமும் பண வசதியும் நிதமும் நிறைந்தவர்களாக தம் மனைவிமாரை பாரபட்சமில்லாமல் நீதியாக நடத்தக் கூடியவர்களுக்கு மட்டுமே ஒன்றுக்கு மேல் நான்கு மனைவிகளை இஸ்லாம் அனுமதிக்கிறது.

அப்படி முடியாத பட்சத்தில் ஒரு மனைவியோடு மட்டும் இருந்து கொள்ள திருமறை கூறுகிறது- சமுதாயக் கேடுகளுக்குத் தீர்வாக பலதார மணத்தை வகுத்த இஸ்லாம் மனித இயற்கை உணர்ச்சியை பரந்த நோக்கோடு பார்த்து பலதார மணத்தை ஒரு திட்டவட்டமான வரம்புக்குள் விதித்திருக்கிறது-

பெண்கள் மறுமணம் செய்வதையும் இஸ்லாம் அனுமதிக்கிறது- ஏன் என்றால் மனிதன் திருமணம் செய்து கொள்வதன் மூலம் ஹராமான பாபமான செயல்களை விட்டு நீங்கியிருப்பதற்காகவே துறவறத்தை இஸ்லாம் ஏற்கவில்லை!

இன்றைய நம் சமுதாயம் இளம் விதவைகளைப் பற்றி அக்கறை காட்டுவதில்லை- அவர்களை அவலட்சணங்களாகவும் வெறும் அபசகுணங்களாகவும் கருதுகின்றது- இவற்றுக்கெல்லாம் முன்மாதிரியாகவே நமது நாயகம் தன்னிலும் மூத்த விதவையாகிய கதீஜா பிராட்டியாரை தம் இளவயதில் முதன் முதலாக மணமுடித்து வாழ்ந்து காட்டினார்கள்!

இஸ்லாம் வழிநடந்து எமது இளைய தலைமுறையினரையும் அதன் வழி நடத்தி நல்லதொரு இஸ்லாமியப் பெண்ணாக வாழ முனைவோமாக!

[த]

### பணம் தேட குழந்தை ஒரு கருவியா?

மேல் நாடுகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் கடுமையானவையாக இருப்பதால் இதைப் பயன்படுத்தி சிலர் அவ்வப்போது வர்த்தக நிறுவனங்களிடமிருந்து பணம் கறக்க முயல்வதுண்டு.

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற சம்பவத்தில் பெற்றோர் தமது கைக்குழந்தைக்கு சல்பரிக் அசிட்டை ஊட்டி விட்டனர். குழந்தை உணவில்தான் சல்பரிக் அசிட் கலந்திருந்தது என்று அக்குழந்தை உணவு நிறுவனத்தின் பேரில் குற்றச்சாட்டைச் சுமத்தி லட்சக்கணக்கில் பணம் கறந்து விடலாம் என்ற எண்ணத்துடன்தான் தமது மூன்று மாதக் குழந்தைக்கு அசிட் ஊட்டினராம்.

இதனால் வாய், தொண்டை எல்லாம் வெந்து போனதோடு குழந்தையின் ஒரு சுவாசப் பையையும் எடுக்க வேண்டியதாயிற்று.

இரண்டு ஆண்டுகளாக உயிருக்காகப் போராடிய குழந்தை பின்னர் உயிரை விட்டது. தாயும் தந்தையும்? பணத்தை எண்ணுவதற்கு பதிலாகக் கம்பியெண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!

(த-032)



### பரஸ்பர நல்...!

(22ஆம் பக்க தொடர்ச்சி)

யோடு வாழ்வின் நடைமுறைச் செயல்களோடு ஒன்று சேர்ந்து இணைத்துக் கொள்ளுகிறான்.

கல்வி சமுதாயத்தின் படிப்பாக மட்டும் நின்று விடாது, அதற்கு மேலும் செல்ல வேண்டும். இந்த சமுதாயத்தில் இப்படித்தான் வாழ வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்க வேண்டும்.

நிலையில்லாத உலகத்திலே ஒரு நிலையான பொருள் கல்வி. பணம் என்பது இன்று எங்களிடம் இருக்கும், நாளை வேறொருவரிடம் இருக்கும், கல்வி அப்படியல்ல இருக்கும் வரை எமமுட

தாய் கல்வி முறை இருக்குமாயின் அதுவே நாட்டு மக்களின் ஒற்றுமைக்குப் பயனளிக்கக் கூடியதாய் அமையும்.

இளம் பிள்ளைகள் பரஸ்பர நல்லெண்ணத்துடன் ஒருவரோடொருவர் பழக வாய்ப்பளிக்க கல்வி நிலையங்களே உதவுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது,

எனவே வாழ விரும்புகின்ற மக்கள் இன்பம் பெற்று இடரின்றி இருக்க விரும்புகின்ற மக்கள் செஞ்சொற் செல்வமாகிய கல்விச் செல்வத்தைப் பெற்று, அதன் இணையற்ற இன்பத்தில் திளைக்க வேண்டும்.

(த)

### எழில்சிறக்க விளக்கேற்றி வைப்பவள் நல்ல பெண்

வீட்டுக்கு விளக்கேற்ற ஒரு பெண் வர மாட்டாளா என்று எதிர்பார்க்கிறோமே- ஏனெனில் விளக்கேற்றும் பாணியைக் கொண்டே ஒரு பெண்ணின் குணத்தை அறியலாம்- நல்ல பெண் எப்படி இருப்பாள்!

முன் காலத்தில் பெண் பார்க்க வந்தவர்கள் பெண்ணை விளக்கேற்றச் சொல்வார்கள்- எண்ணெய் ஊற்றி, திரியை திரித்து விளக்கேற்ற வேண்டும்- அப்படிச் செய்தால் கையில் எண்ணெய் படியும்- இந்த எண்ணெய்யை அந்தப் பெண் என்ன செய்கிறாள் என்று பிள்ளை விட்டார் கூர்ந்து பார்ப்பார்கள்-

பெண் தன் தலையில் தேய்த்துக் கொண்டால், தன்னை அழகாக வைத்துக் கொள்ள மாட்டாள் என்று அர்த்தம்- சுவற்றில் தேய்த்தால் வீட்டை நன்றாக வைத்துக் கொள்ள மாட்டாள் என்று அர்த்தம்- பின் இந்த எண்ணெய்யை எங்கு தேய்ப்பது? விளக்கின் விளிம்பில் தேய்க்க வேண்டும்- அந்தப் பெண் தான் சிறந்தவளாம்-

(ம-10)



அமெரிக்க இளைஞர் ரே டொனால்ட் இந்திய மாணவி பமபாவைக் காதலித்தார்- இந்தியாவுக்கு வந்து இந்திய வழக்கப் படி தனது காதலியைத் திருமணம் புரிந்தார்- வங்காளப் பெண்ணான பமபாவை அவர்கள் வழக்குப்படி ரே திருமணம் செய்த காட்சி இது-

(ம—10)

பணம் என்பது இன்று எங்களிடம் இருக்கும், நாளை வேறொருவரிடம் இருக்கும், கல்வி அப்படியல்ல. இறக்கும் வரை எம்முடனேயே இருக்கும், சொத்துக்களுள் அழியாச் சொத்தாகும்.

மக்கள் வாழ்வில் சுபிட்சத்துக்கு வழிகாட்ட வேண்டுமாயின் நாட்டின் மனித சக்தியைப் பூரணமாய் பயன்படுத்தி, கூடிய அதன் இணையற்ற இன்பத்தில் திளைக்க வேண்டும்.

(த)

வீட்டுக்கு விளக்கேற்ற ஒரு பெண் வர மாட்டாளா என்று எதிர்பார்க்கிறோம்- ஏனெ சிறந்தவளாம-

(ம-10)

# நாகரீக நங்கையர் நாடாத வேடிக்கை

மேலை நாட்டு நாகரீக நஙகையருக்கு எப்போதும காதல் களியாட்டஙகளில் தான் நாட்டம என்று கேள்விப்பட்டிருக்கிறோம- ஆனால் குடும்பப் பெண்களுக்கு அளவு கடந்த காமக் களியாட்டஙகளில் நாட்டம இல்லை- படுக்கையறை உறவு பற்றி மேற்கு ஜெர்மனியில் அண்மையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட போது இது தெரிய வந்தது-

ஓய்வு நாளான ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் அந்நாட்டு குடும்பப் பெண்கள் அதிகம விருமபுவது எதை என்பது பற்றி ஆராயப்பட்டது-

அன்று வேலைக்குப் போக வேண்டியதில்லை- எனவே அதிக நேரம படுக்கையில் உருளலாம- எனவே அதி காலையிலேயே காதல் களியாட்டம நடத்த விருமபுவீர்களா? —— இவ்வாறு 25 வயதுக்கும 40 வயதுக்கும இடைப்பட்ட குடும்பப் பெண்களிடம ஆய்வாளர்கள் கேள்வி கேட்டனர்- ஆனால் 95 சத வீதமான பெண்கள் காலை வேளையில் காதல் களியாட்டம நடத்த விருப்பம தெரிவிக்கவில்லை- "காதல் உறவுவேண்டாம்- ஞாயிறு காலை வேளையில் கணவரின் அன்பான முத்தஙகளும, அணைப்பும மட்டுமே போதும்- அந்தத் தெமபுடன் படுக்கையை விட்டு எழ கிடைத்தாலே போதும" என்பது இவர்களது பதிலாக இருந்தது-

81 சத வீதமான பெண்கள் "மொறு மொறுப்பான ரோல்சும, கோப்பியும படுக்கையறைக்கே வருமானால் ஆஹா, அது தான் மகிழ்ச்சியான நாளின் ஆரமபம" என்று கருத்து தெரிவித்தனர்-

இறுக்கமான அரவணைப்புடன் காதல் உறவு கொள்ள விருப்பம தெரிவித்தவர்கள் 26 சத வீதத்தினர் மட்டுமே!

ஆனால் ஞாயிற்றுக்கிழமை காலை வேளையில் மனைவியுடன் குதூகலமாக இருக்க விருமபுகிறீர்களா? என்று ஆண்களிடம ஒருவரும கேள்வி கேட்கவில்லை- கேட்டிருந்தால் பதில் தலை கீழானதாக இருந்திருக்குமோ!

(ம-032)

# உணர்ச்சிகளை அடக்கியாளும் சக்தி குழந்தைகளுக்கு இல்லாதது ஏன்?

செயல்களையும, உணர்ச்சிகளையும, முழுவதுமாக அடக்கி ஆளும சக்தி குழந்தைகளுக்கு கிடையாது- வளர்ச்சியடைந்த பின்னரே உணர்ச்சிகள் பக்குவம அடைகின்றன- குழந்தைகள் உடலிலும, உள்ளத்திலும வளர்ந்து கொண்டே இருக்கின்றனர்-

வளர்ச்சி அடைந்த பின்னரே மனித உடலுக்கு பக்குவ நிலை ஏற்படுகிறது- குழந்தையாக இருக்கும பொழுது இது கிட்டுவதில்லை- ஏனெனில் உடலிலும, உள்ளத்திலும உணர்ச்சியிலும குழந்தை இன்னும வளர்ந்து கொண்டே இருக்கிறது-

சின்னஞ்சிறு குழந்தைக்கு நடக்க முடியாது ஏன்? குழந்தையின் வளர்ச்சியில் இன்னும பூரணத்துவம இல்லை- பிறர் உதவி இல்லாமல், குழந்தைகள் எதனையும செய்து விட முடியாது-

தனது செயல்களையும, உணர்ச்சிகளையும முழுவதுமாக அடக்கி, ஆளும சக்தி குழந்தைகளுக்கு கிடையாது- ஆனால் ஆண்டுகள் முன்னேற குழந்தையின் உடல் வலுவடைகின்றது-

சுயமாக காரியஙகளை செய்ய வேண்டும- முடிவு கட்ட வேண்டும என்ற எண்ணம அப்பொழுது தான் உருவாகிறது- இது மாத்திரமா? உணர்ச்சிகளையும அடக்கியாளும சக்தியும ஏற்பட்டு விடுகிறது-

எல்லாக் குழந்தைகளும இவ் விதமாக வளர்ச்சி அடைகின்றன என்று சொல்ல முடியாது-

உடல் வளர்ச்சி குன்றியிருக்கும குழந்தைகளையும பார்த்திருக்கிறோம- மூளை விருத்தியடையாத குழந்தைகளும சமுதாயத்தில் இருக்கின்றன- மனோ வளர்ச்சி குன்றிய பிள்ளைகளும உள-

நமமில் அநேகர் குழந்தைப் பருவத்தை, மறப்பதில்லை-

ஒருவர் குழந்தைப் பருவத்தை தாண்டி விட்டார் என்று எப்படி அறிந்து கொள்வது? குழந்தைப் பருவம தாண்டிய ஒருவன் வருஙகாலத்தைப் பற்றி சிந்திப்பான்-

சிறுவர்கள் அவர்களை சுற்றிலும தமக்கேயுரிய உலகத்தை அமைத்துக் கொள்கிறார்கள்-

குழந்தைப் பருவம முடிந்தவுடன் சுய வாழ்வும கூடவே வருகிறது-

உணர்ச்சியில் பூரணமடைந்த ஒருவன் மற்றவர்கள் மேல் அன்பு செலுத்துவான் தன்னைப் பற்றியே எப்போதும சிந்தித்துக் கொண்டு இருக்க மாட்டான்-

குழந்தைகளுக்கு தன்னலம ஓர் அணிகலன்- தன்னுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டால் அதுவே போதும மற்றவர்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம தானாகவே வராது-

ஆனால் உணர்ச்சியில் வளர்ச்சியடைந்தவன் அப்படியிருக்க மாட்டான் தனக்குண்டான நல்ல காரியஙகளை மற்றவர்களும அனுபவிக்க வேண்டும என்று கருதுவான்-

குழந்தைகள் திடீரென்று ஒரு செயலில் ஈடுபடும உணர்ச்சியில் பக்குவமடைந்த ஒருவன் யோசித்தே காரியஙகளை செய்வான்

குழந்தைப் பருவம முடிவடைய நடத்தையில் மாறுதலும, கட்டுப்பாடும காணப்படும-

(த-455)

# மன்னராட்சிக் காலத்தில் பெண்களை கேவலமாக நடத்திய சாதித் திமிர்

திருவிதாஙகூர் சமஸ்தான ஆட்சிக்கு உட்பட்டு இருந்தபோது, நாயர்குல பெண்களும, ஏனைய நடுத்தர சாதியிலுள்ள பெண்களும தஙகள் மார்புகளின் மீது மெல்லிய மேலாடையைக் கட்டிக் கொள்வார்கள்-

அரச வமசத்தினர் அரசாஙகத்தில் உயர் பதவி வகிப்போர் மத குருக்கள், போன்றோர் எதிரே வந்தால் இப் பெண்கள் தஙகள் மார்பு கச்சையை அவிழ்த்து மாற்றிவிட்டு வணக்கம செலுத்த வேண்டும!

மேலும இவர்களுக்கு அப்போது இடுப்புக்கு மேல் ஆடை அணியும உரிமை சட்டப்படி மறுக்கப்பட்டிருந்தது- இது தொடர்பாக 1685 ஆம ஆண்டு பெண்களின் பொதுவான சமுதாய மரியாதை ஒன்று இயற்றி வெறுக்கத் தகுந்த இழிந்த இவ் வழக்கம வேரோடு பிடுஙகி எறியப்பட்டது-

[ம-10]

சிந்தாமணி

தின வெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"

சின்தாமணீ CHINTAMANI

# கூடிக் களித்தால் நித்திரை வரும்!

ஏழை தன் குடிசை வாசலில் அமர்ந்து கொண்டு "இந்தப் பணக்காரர்களுக்கு என்ன கொடுத்து வைத்தவர்கள், அவர்களுக்கு என்ன குறைதான் இருக்க முடியும்" என்று பொருமு கிறான். இதே சமயம் பணக்காரர்களோ இரவெல்லாம ஆந்தையாகக் கொட்டக் கொட்ட விழித்தபடி, "இந்த ஏழைகளுக்கு ஒரு பொறுப்பும கிடையாது; யாருக்கும பதில் சொல்ல வேண்டியதில்லை. கஞ்சியையாவது குடித்து விட்டு சுகமாகப் படுத்து உறங்கி விடுகிறார்கள், நமக்கு எவ்வளவு பணம இருந்து தான் என்ன செய்ய, பல்வேறு பிரச்சினைகள் புழுவாக மண்டையைக் குடைந்து நமமைத் தூங்கத்தான் விடுகின்றனவா?" என்று பெரு மூச்சு விடுகிறார்கள்.

ஆம, மன அமைதியின்மை அல்லது மனச் சோர்வு ஏராளமானோரை வாட்டியெடுத்து வருகிறது. வசதியான பலர் மறுநாள் தாம சந்திக்க வேண்டிய பிரச்சினைகளை எண்ணி எண்ணியே தூங்குவதில்லை.

மேற்கு ஜெர்மனியில் எடுக்கப்பட்ட ஒரு கணிப்பீடு, நான்கு பேரில் ஒருவர் தூக்கம பிடிக்காமல் தவிக்கிறார்கள் என்று சொல்லுகி றது. மூன்றாம மண்டல நாடுகளை விட முன் னேறிய கைத்தொழில் நாடுகளில்தான் தூக்க மின்மையால் பெரும எண்ணிக்கையானோர் துன் புற்று வருகிறார்கள்.

இரவில் தூக்கம வராதபோது தூக்க மாத்திரைகளை வாயில் போட்டுக் கொள்கி றார்கள். பின்னர் மாத்திரை இல்லாமல் தூக் கம இல்லை என்ற அடிமை நிலைக்கு வந்து விடு கிறார்கள், தூக்க மாத்திரை உட்கொண்டு சுலபமான தற்காலிக நிவாரணம பெற்றாலும சிறிது காலத்தின் பின்னர் பக்க விளைவுகளை இப்பழக்கம உருவாக்குகிறது.

இந்தத் தூக்கம பிடிக்காதவர்களை எப்படித்தான் குணப்படுத்தி தூங்க வைக்க லாம! மேற்கு ஜெர்மனி பல்கலைக்கழகம ஒன்று இதன் பொருட்டு குழுநிலை சிகிச்சை ஒன்றை உருவாக்கியிருக்கிறது.

தூக்கம பிடிக்காதவர்கள் குழுக்களாகக் கூடிக் களித்தால் நித்திரைவரும. பிரச்சினை களை எப்படி எதிர்கொண்டு சமாளிப்பது என்பதைக் கற்றுக் கொடுக்கிறார்கள், பிரச்சி னைகளை எப்படி அணுகி, ஊடறுத்துச் சென்று சமாளித்து மீள்வது என்பதை இப்பயிற்சியில் விளக்கி, மனதை அவற்றில் விடுவித்துக் கொள்வது எப்படி என்பதையும சொல்லித் தருகிறார்கள்.

செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து கொண்டும அதே சமயம உலகில் ஒரு பார்வையாளனாக மட்டும கலந்து கொள்வது எப்படி என்பதைத்தான் இந்து மதத்தத்துவ ஞானம் விளக்குகிறது.

ரஜனீஷ் சுவமியார் தமது பக்தர்களை ஒன் றாகக் கூடிக்களித்து பக்தியில் ஆழ்ந்து போக வழி காட்டினார், இன்று பலர் கூடிக்களிப்பு டன் இருந்தால் நித்திரைவரும என்கிறார்கள்.

(ம-032)

# திரை மறைவு விஷயத்தால்

# புத்தக விற்பனை அதிகரிப்பு

அமரிக்காவில் இப்பொழுது அதிகமாக விற்பனையாகும புத்தகங்கள் வரிசையில் "கிஸ் அன்ட் டெல்" என்ற புத்தகமும சேர்ந்துள்ளது.

இதன் பொருள் "முத்தமிடு, சொல்" என்பதாகும. பல பெரிய புள்ளிகளின் கடந்த கால வாழ்க் கையிலிருந்து திரைமறைவில் நடந்த பல "பலான" விஷயங் கள் புத்தகம முழுவதும அல்வா வில் தெளித்த முந்திரிப் பருப்பு போல் தெளிக்கப்பட்டிருக்கும.

உதாரணத்திற்கு ஒரு சிறு குறிப்பு: லானா டர்னர், ஒரு ஹொலிவுட் நடிகை. இவள் அடிக்கடி தன் மகளுக்கு எதிரி லேயே தன் காதலனுடன் கொஞ் சுவாள்.

விதவைத் தாயின் அட்டகா சம பொறுக்காமல் லானா டர்னரை அவளுடைய மகளே கொன்று விட்டாள்.

லானா டர்னர் எந்த போசில் இருப்பாள், இருந்தாள் என்ப தைப் பற்றிய விவரங்களை அவள் மகளே சொல்லுவது போல் கட்டுரை இருக்கும. சாமபிளே திகட்டுகிறதா? அமெரிக்க சமாசாரமாயிற்றே!

(த-10)

# ஒளி அலைகள்

# புகைப்படம் ஆகும் விந்தை

விஞ்ஞானிகள் செய்து வரும அற்புதங்களுக்கு ஒரு அளவே இல்லை! விண்வெளியில் பய ணம செய்யும செயற்கை கோள் கள் அங்குள்ள காட்சிகளை படம எடுத்து ஒளி அலைகளாக பூமிக்கு அனுப்பி வைக்கின்றன.

அவை இங்கே புகைப்படங் களாக ஆக்கப்படுகின்றன. இப் படி ஒரு அதிசயமா என்று நாம வியந்து முடிக்கும முன் மேலும சாதனைகளை விஞ்ஞானிகள் நிகழ்த்தி விடுகிறார்கள்.

இப்போது பூமியிலிருந்து விண் வெளியில் சுற்றும செயற்கை கோளுக்கு புகைப்படங்களை அனுப்ப முடியும என்று அமெ ரிக்க விஞ்ஞானிகள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள்.

அண்மையில் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட "டிஸ்கவரி" என்ற விண்கலத்தில் பயணம செய் யும விண்வெளி வீரர்களுக்கு அவர்களுடைய மனைவிமார்கள் படம எடுத்து அனுப்பப்பட்டது.

(ம-10)

# சத்துணவு திட்டம்

# வெற்றி அடைந்திட

# மண் புழு பக்கபலம்

ஏழைப் பிள்ளைகளுக்கு சத்துணவு வழங்கி அதன் மூலம மக்கள் மத்தியில் நீங்காத இடம பெற்றவர் மக்கள் திலகம எம். ஜி ஆர். அத்தகைய சத்துணவுத் திட்டம கனடா நாட்டிலும் உண்டு. அங்கு சத்துணவுத் திட்டம வெற்றி அடைந்திட மண்புழு பக்கபலமாக இருக்கிறது.


பிள்ளைகள் விருமபி உண்ணும விதத்தில் மண் புழுக் களை நளபாகம செய்வது எப்படி என்பதை ஒரு புத்தகத்தில் சாஙகோபாங்கமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

மண் புழுக்களைக் கழுவி சுத்தப்படுத்தி 24 மணித்தி யாலங்களுக்கு ஒரு பாத்திரத்தில் போட்டு மூடி வைக்கவும. பின்னர் எலுமிச்சம பழச்சாறு விட்டு மண் புழுக்களை வேக வைக்கவு, அவித்த புழுக்களை ஒரு பாத்திரத்தில் விட்டு 175 பாகை வெப்பத்தில் சுமார் பத்து நிமிடங்களுக்கு போறணையில் வைத்து மொறு மொறுப்பான நிலையில் அவற்றை வெளியே எடுக்கவும, இவற்றை சோயா சாறு அல்லது சொக்லேட் சாறு விட்டு உண்டு மகிழலாம.

– இவ்வாறு மேற்படி சமையல் புத்தகத்தில் தயாரிப்பு முறை பற்றி சொல்லியிருக்கிறார்கள், அது மட்டுமல்ல, ஒட்டாவா மாவட்டப் பாடசாலை ஒன்றில் ஐந்து குழந்தைகள் இமமண் புழு உணவைத் தயாரித்து சான்றிதழ்களும பெற் றிருக்கிறார்கள்.

மண்புழு நளபாகத்துக்கு சான்றிதழ்களும வழங்கி யிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்ததும தான் பெற்றோர் களுக்கு விஷயமே விளங்கியிருக்கிறது.

(ம-032)



ஒருதரம பயன்படுத்தி விட்டு குப்பையில் வீசும பிளாஸ்டிக் கோப்பைகளுக்குத்தான் இப் போது மதிப்பு. ஒரு மணி நேரத்துக்குள் 14 ஆயிரம கோப்பைகளை உற்பத்தி செய் யக் கூடிய இயந்திரத்தின் அருகில் நிற்கிறார் இந்த அழகி.

(ம)

# உருவம் மாறும்

# கிரிமினல்

ஹீரோஷி சென்கல் என்ற இந்த ஜப்பானியன் ஒரு பயஙகர இயக்கத்தின் தலைவன்.

கொலை, கொள்ளை, விமா னக் கடத்தல், கள்ளக் கடத்தல் இப்படிப் பல தொழில்கள். கைது செய்யப்படும ஒவ்வொரு முறை யும தப்பித்து விடுவான்.

தப்பி வெளியே வந்தவுடன் "பிளாஸ்டிக் சர்ஜரி" மூலம தன் முக அடையாளங்களை மாற்றிக் கொண்டு விடுவான்.

இவன் பல பெயர்களில் பாஸ் போர்ட் வைத்துக் கொண்டிருந்த தால் கண்டுபிடிப்பது சிரமமா கவே இருந்தது.

கடைசியில் இவனை பிலிப் பைன்ஸ் நாட்டில் பிடித்தார்கள். இவன்தான் ஹீரோஷி சென்கல்

# பிரிந்து சென்றவர்கள்

# மீண்டும் ஒன்று சேர்ந்தனர்

ஐமபத்தைந்து வயதான ஒரு நோர்வே நாட்டு மீனவர் தனி மையின் கொடுமையைத் தாளாது உள்ளூர்ப் பத்திரிகையில் விளம பரமொன்றைச் செய்தார். தனி மையில் வாடும ஒருவருக்கு துணை ஒன்று தேவை என்பது [illegible] யாக இருக்கச் சமமதித்த விண் ணப்பம செய்து கொண்டார். அப்பெண்மணி வேறு யாருமல்ல அவரது மனைவியே தான்!

பதினெட்டு ஆண்டுகளாக பிரிந்திருந்த இருவரையும இப் போது இணைத்துள்ளது இந்த விளமபரம! தன் கணவரைப் [illegible] படி விளமபரம கவரவே, போனால் போகிறது என்று புகைப்படத்துடன் கடித மொன்றை எழுதி விளமபரதார ருக்கு அனுப்பி வைத்திருக்கிறார்,

ஆனால் தன் கணவனை அக் கடிதம சென்றடையும என கொஞ்சமும எதிர்பார்த்திருக்க வில்லை அப் பெண்மணி. 27

இவ் விளமபரம கண்ட ஒரு பிரிந்து தனிமை வாழ்க்கை நடத்தி பெண் அம மீனவருக்கு துணை வந்த இப்பெண்மணியை மேற்

ஆண்டுகளுக்கு முன்னர் இவ்விருவ ரும ஒருவரை ஒருவர் சந்தித்த தம கூட இமமாதிரி விளமபரம ஒன்றின் ஊடாகத்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

மூன்று குழந்தைகளைப் பெற் றுக் கொண்ட பின்னர் இருவரும பிரிந்தனர். இப்போது மீண்டும அதே விளமபர உத்தியின் மூலம இணைந்துள்ளது இவ் விசித்திர ஜோடி! (த-032)


சப் ஏஜண்டுகள் தேவை

– மதீனாஸ் –

சவூதி அரேபியாவிற்கு

★ வீட்டுப் பணிப்பெண்கள்

30—40 வயதிற்கிடைப்பட்டவர்கள்

தேவைப்படுகின்றனர்

மிக மிக விரைவான பயணம

முக்கிய குறிப்பு-

(1) பாஸ்போட் பிரச்சினைகள் எதுவும இருப்பின் தயக்க மின்றி தொடர்பு கொள்ளுஙகள்- வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவர் நிலையத்தின் மூலம அதனைப் பெறுவதற்கான உதவிகள் செய்து தரப்படும-

(2) தூர இடஙகளிலிருந்து வரும சப் ஏஜண்டுகள் பிரயாணி கள் அனைவருக்கும தஙகுவதற்கு இலவச இடவசதி உண்டு-

MEDINAS

39—1/21 Chatham Street, Colombo — Fort

T,Phone: 437660 — 589878

Labour Licence — 716


## நடமாடும் குளியல் தொட்டி

ஆலென் வாக் என்பவர் ஒரு வாகனம வாஙகினார்- பின் பக் கம பொருள்களை ஏற்றிச் செல் வதறகான பகுதி இருக்கிறதல் லவா? அதைக் குளியல் தொட்டி போல் வடிவமைத்தார்-

நீர் நிரப்பினார்- வண்டியை எடுத்துக் கொண்டு வீதியில் ஓட் டினார்- நீச்சலுடையில் மனைவி, குழந்தைகளை குளிக்கச் சொன் னார்- இதனால் வண்டியும "ஏசி" செய்யப்பட்டது போல் குளு குளு என்று மாறியது!

பிரான்ஸ் நாட்டின் தெற்குப் பகுதியில் "நைஸ்" என்ற ஒரு நக ரம இருக்கிறது- அங்குதான் இந்த நடமாடும குளியல் தொட்டி பவனி வருகிறது! [ம—10]

## நாய்களை ஒழிக்க ஒரு திணைக்களம்

பமபாய் மாநகர சபையில் வீதிகளில் திரியும நாய்களை ஒழிப்பதற்கென்றே "நாய் டிபார்ட்மென்ட்" என ஒரு திணைக்கம ஸ்பெசலாக ஏற் படுத்தியுள்ளனர்.

இதில் அதிகாரியாக இருந்த ஒருவர், நாய் ஒழிப்பிற்காக, யார் நாயைப் பிடித்துக் கொடுத் தாலும 50 ரூபா பரிசு தரப்படும என்று ஒரு அறிவிப்பு கொடுத் தார்.

இப்பொழுது இந்த அதிகாரி ரிட்டையர் ஆகி விட்டார். ரிட் டையர் ஆன கையோடு ஒரு வான் வாஙகி இரவு நேரஙகளில் பமபாய் வீதிகளில் அனாதையா கத் திரியும நாய்களைப் பிடித்து மாநகர சபையிடம கொடுத்து பரிசு வாஙகி காலட்சேபம நடத் துகிறார்.

நாள் ஒன்றுக்கு 100 நாய்க்கு குறையாமல் கிடைக்கிறதாம பிழைக்கத் தெரிஞ்ச மனுசன் சார்! (த-10)

இவன்தான் ஹீரோஷி சென்கல் என்று பொலீஸார் சொல்லுகிறார் கள்.

ஆனால், பத்திரிகைக்காரர் களால் நமப முடியவில்லை. ளாஸ்டிக் சர்ஜனின் சாமர்த்தி யம அது! (த-10)

## பிறந்த குழந்தைக்கு பெயர் சூட்ட உதவும் புத்தகம்

விமலா பட்டீல் என்ற ஒரு பெண் எழுத்தாளர். கதை நாவல், கட்டுரை என்று எதையா வது எழுதிக் கொண்டே இருப் பார்.

அவற்றைப் புத்தகமாகப் போட வேண்டுமென்பது அவரது நெடுநாளைய ஆசை. இது நிறை வேறவில்லை.

புதுமையாக எதையாவது செய்து ஒரு புத்தகம வெளியிட முடிவு செய்து யோசனை செய் தார். ஒரு ஐடியா கிடைத்தது-

குழந்தை பிறந்தவுடன் என்ன பெயர் வைப்பது என்று சில பெற் றோர்கள் திண்டாடும விஷயம இவருக்கு தெரிய வந்தது. உடனே அகர வரிசையில் டிக்ஷனரி மாதிரி குழந்தைகள் பெயர்களை எழுதி ஒரு புத்தக மாகப் போட்டு விட்டார்.

விலை ரூ 30! புதுடில்லி யிலுள்ள ரூபா அண்ட் கமபெனி இந்த புத்தகத்தை வெளியிட்டுள் ளது. ஆடு, மாடு, கழுதை இவை களை நாம பெயரிட்டா அழைக் கிறோம-

மனிதனுக்கு மட்டும பெயர் யாரால் துவஙகப்பட்டது? இந்த சுவையான கேள்வியுடன் இந்தப் புத்தகத்தின் முதல் வரி துவஙகுகி றது. (த-10)


தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்,

எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84.



இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட். 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலஙகை- தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 15 எப்ரல் 1990.

"CHINTAMANI", 5, Gunasena Mawatha, Colombo — 12
P. O Box 1613